# தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கைக்கான சிறப்புக் கல்வி




சிங்கப்பூரின் சிறப்புப் கல்விப்பள்ளிகள் குறித்த தகவல் வழிகாட்டி

ஏப்ரல் 2018-ல் அச்சிடப்பட்டது

பதிப்புரிமை @ 2018 கல்வி அமைச்சு, சிங்கப்பூர்

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த வெளியீட்டின் எந்தவொரு பகுதியும் பதிப்புரிமை பெற்ற உரிமையாளரின் எழுத்துபூர்வமான முன்னனுமதி இல்லாமல் பிரதி எடுக்கவோ, மீட்டெடுக்கும் வகையில் சேமிக்கவோ -அல்லது வேறு எவ்வகையிலும் அதாவது மின்னியல், இயந்திரம், நகல் எடுத்தல், பதிவு செய்தல் போன்றவை மூலமும் வெளியிடவோ அல்லது பரப்பவோகூடாது.

இது கல்வி அமைச்சின் சிறப்புக் கல்விப் பிரிவு, சிறப்புக்

கல்வித் தேவைகள் பிரிவின் தயாரிப்பு.

Ministry of Education
SINGAPORE

# பொருளடக்கம்

## புலன்சார் குறைபாடு


| | |
|---|---|
| Canossian School | 4 - 7 |
| Lighthouse School | 8 - 11 |


## மிதமான அறிவுசார்ந்த இயலாமை (ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாடுகளுடைய மாணவர்கள் உள்பட)


| | |
|---|---|
| Chaoyang School | 12 - 15 |
| Delta Senior School | 16 - 19 |
| Katong School | 20 - 23 |
| Tanglin School | 24 - 27 |
| Grace Orchard School | 28 - 31 |
| Metta School | 32 - 35 |


## மிதமான முதல் கடுமையான அறிவுசார்ந்த இயலாமை (ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாடுகளுடைய மாணவர்கள் உள்பட)


| | |
|---|---|
| MINDS – Fernvale Gardens School | 36 - 39 |
| MINDS – Lee Kong Chian Gardens School | 40 - 43 |
| MINDS – Towner Gardens School | 44 - 47 |
| MINDS – Woodlands Gardens School | 48 - 51 |


## ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாடுகள்


| | |
|---|---|
| Eden School | 52 - 55 |
| Pathlight School | 56 - 59 |
| St Andrew's Autism School | 60 - 63 |


## பலவகை இயலாமைகளும் ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாடுகளும்


| | |
|---|---|
| AWWA School | 64 - 67 |
| Rainbow Centre – Margaret Drive School | 68 - 71 |
| Rainbow Centre – Yishun Park School | 72 - 75 |


## பலவகை இயலாமைகள்


| | |
|---|---|
| Cerebral Palsy Alliance Singapore School | 76 - 79 |
| SPED பள்ளிகளின் அட்டவணை | 80 - 81 |
| பயனுள்ள இணைப்புகள் | 82 |
| ஒப்புகைகள் | 83 |

# முன்னுரை



குழந்தைகளின் கனவுகளை நனவாக்குவதில் பெற்றோர் முக்கியமான பங்கு வகிக்கின்றனர். சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் பெற்றோராகிய நீங்கள் உங்கள் பிள்ளைகள் முழுமையான ஆற்றலுடன் வாழ உதவ வேண்டும் என்னும் மன தைரியத்தையும் உறுதியையும் கொண்டுள்ளீர்கள். இதனால், உங்கள்மீது நாங்கள் பெருமதிப்பும் மரியாதையும் கொண்டுள்ளோம். அதோடு எங்களது முழு ஆதரவையும் உங்களுக்கு வழங்குகிறோம். உங்கள் பிள்ளை சிறந்து விளங்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அரசாங்க உதவி பெறும் 19 சிறப்புக் கல்விப் (SPED) பள்ளிகளைக் குறித்து நீங்கள் தெரிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் இந்தப் புத்தகம் உதவுமென்று நாங்கள் நம்புகிறோம்.

நம் SPED பள்ளிகள், பள்ளிக்கு வரும் ஒவ்வொரு பிள்ளையின் ஆற்றலை வெளிக்கொணர்வதில் விருப்பம் கொண்டுள்ளன. அதற்கேற்றவாறு அவை கல்வித் திட்டங்களையும் ஆதரவு வசதிகளையும் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு பள்ளியும் அவர்களின் மாணவரின் தனித்திறமைகளையும் தேவைகளையும் புரிந்துகொண்டு, அவர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் அவற்றை வளர்த்து, கொண்டாடி மகிழ்வதோடு, அவர்களை சமூகத்தோடு ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு பள்ளி ஒரு பிள்ளைக்குப் பொருத்தமானதாக அமையும்போது அவர் தனித்து இயங்கக்கூடியவராகவும் தன்னம்பிக்கைக் கொண்டவராகவும் வளர்வதைக் காணமுடியும். ஒவ்வொரு பள்ளியும் வெவ்வேறு ஆற்றல்களைப் பெற்றிருந்தாலும் அவையனைத்தும் மாணவர்கள் தங்களிடமுள்ள தனித்தன்மையைப் போற்றிப் பேணி வளர்த்துக்கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு முழுமையான வாழ்க்கை வாழவேண்டும் என்னும் ஒரே பொதுத் தொலைநோக்கையே கொண்டுள்ளன.

வகுப்பறைக்கு அப்பாலும் தங்களது ஆற்றல்களை வெளிப்படுத்த மாணவர்களுக்குத் தொடர்ந்து வாய்ப்பளிக்கப்படுகிறது. இதனை மனதிற்கொண்டுதான் நம் பள்ளிகள், மாணவர்கள் தத்தம் ஆர்வங்களையும் ஆற்றல்களையும் மேலும் வளர்த்துக்கொள்ளும் வகையில் இணைப்பாட நடவடிக்கைகளையும், திறன் மேம்பாட்டுத்திட்டங்களையும் வழங்குவதோடு அவர்களைப் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் ஈடுபடுத்துகின்றன.

ஒவ்வொரு மாணவரையும் சமுதாயத்துடன் நன்முறையில் ஒன்றச் செய்வதற்கு, SPED பள்ளிகள் பிற அமைப்புகளுடன் அர்த்தமுள்ள பங்காளித்துவத்தை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகின்றன. இணை நடவடிக்கைகள்மூலமும் நிகழ்ச்சிகள்மூலமும், பொதுநிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுடனும் சமுதாய பங்காளர்களுடனும் நட்பினை வளர்த்துக்கொள்ள நம் மாணவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. பள்ளிகளுடன் பங்காளித்துவத்தைக் கட்டிக்காப்பது மட்டுமல்லாமல், தொழில்நிலை உலகிற்கு மாணவர்களைத் தயார்படுத்தும் பொருட்டு ஒரு தொழிலை மேற்கொள்ளத் தகுதியுடையராய் ஆக்கப்படுகிறார்கள். நம் மாணவர்கள் வேலைத் தரநிலைகளை அடைவதற்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்கையும் பெறுவதற்குப் பல்வேறு நிறுவனங்கள் அவர்களைக் கல்வியிடைப் பணிப் பயிற்சியிலும் தொழில்சார்பயிற்சியிலும் ஈடுபடுத்தித் தயார் செய்கின்றன. ஆக மொத்தத்தில் SPED பள்ளிகள் ஒவ்வொரு மாணவரும் பள்ளிச்சுவர்களுக்கு அப்பால் உள்ள வெளியுலகத்தை வலம் வரக்கூடிய நிலைக்கு வளர்த்துவிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

சிறப்புக் கல்வி தேவைகளைக் கொண்டுள்ள பிள்ளையை வளர்ப்பதில் அதிகச் சவால்கள் இருப்பது போல் அவர்களுடைய திறன்களையும், ஆர்வங்களையும் வாழ்க்கையில் அவர்களுக்கு எது மகிழ்ச்சி தரும் என்பதையும் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமாகவே இருக்கின்றன. எனவே, ஒவ்வொரு SPED பள்ளியும் தரமான பள்ளியாக இருப்பதற்குப் புதிய முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும், நம் மாணவர்கள் ஒவ்வொருவரும் சமுதாயத்தில் முனைப்புடன் செயல்படக்கூடியவராக வளரவேண்டும் என்பதற்காகவும் சமுதாயத்தால் மதிக்கப்படுபவராகவும் விளங்க வேண்டும் என்பதற்காகவும் SPED பள்ளிகள் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றன.

**திருமதி லூசி டோ**

துறை இயக்குநர், சிறப்புக் கல்வித் தேவைகள் பிரிவு,
கல்வி அமைச்சு

# SPED
# பள்ளிகள்

## உள்ளடக்கும் திட்டம்

Canossian School (CS), பொதுநிலைப் பள்ளிகளுடனான ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் அவர்களது மாணவர்களை இப்பள்ளிகளில் ஒன்றிணைப்பதன் மூலம் பொதுநிலைப் பள்ளி அனுபவத்தை அவர்களுக்கு வழங்கவும், அதன் பங்காளர் பள்ளிகளான Canossa Convent Primary School-யுடனும் MacPherson Primary School-யுடனும் மிக நெருக்கமாக இணைந்து பணியாற்றுகிறது.

இவ்விரண்டு பள்ளி மாணவர்களின் இந்தத் தொடர் ஒருங்கிணைப்புப் பின்வருபவற்றிற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது:

- பொதுநிலை பள்ளியைச் சேர்ந்த மாணவர்களுக்கும், சிறப்புக் கல்வித் தேவைகளையுடைய மாணவர்களுக்கும் இடையே சமூக ஒருங்கிணைப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த மாணவர்களைச் சிறந்த நண்பர்களாக மாற்றிய, மனத்தை நெகிழவைக்கும் கதைகள் நிறைய உள்ளன.
- கேட்கும் ஆற்றலை இழந்த மாணவர்கள் மொழிவளமிக்க கேட்டல் சூழலில் ஆழ்த்தப்பட்டார்கள். இது இரு பிரிவினருக்கும் மொழி வள மேம்பாட்டு ஆதரவை அளித்துள்ளது. அதோடு சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் பலவிதமான சூழலைச் சேர்ந்த நண்பர்களுடன் மேலும் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பதையும் கலந்துரையாடுவது என்பதையும் கற்றுக்கொள்ள வழிவகுத்துள்ளது.
- பொதுநிலைப்பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களிடத்தில் சிறப்புக் கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின்பால் கூருணர்வையும் பரிவையும் வளர்த்துக்கொள்ளவும் வழிவகுத்தது.



Canossa Convent Primary School-ஐ சேர்ந்த மாணவர்கள் CS சேர்ந்த மாணவர்களுடன் இணைந்து கற்கின்றனர்.



PAL பாடம் – ரங்கோலியை வடிவமைத்தல்

## கனோஸியனின் பெருமைக்குரியது: இணைப்பாட நடவடிக்கைகள்

பல இணைப்பாட நடவடிக்கைகளுள் CS தாளவாத்திய இசைக்குழுவும் CS பாடகர் குழுவும் தனிச்சிறப்பு வாய்ந்தவை.

### CS தாளவாத்திய இசைக்குழு

மாணவர்களுக்கு இசைக்கருவியையும் இசையையும் அறிமுகம் செய்யவேண்டும் என்னும் நம்பிக்கையில் CS தாளவாத்திய இசைக்குழு உருவாக்கப்பட்டது. 1989இல் தொடங்கிய இந்த இசைக்குழு தங்கள் பள்ளியைப் பெருமையுடன் பிரதிநிதித்து உள்ளூர் வெளியூர் தளங்களில் பங்கேற்றுள்ளது.

இசைக்குறிப்புப் பற்றிய முன்னறிவு இல்லையென்றாலும், அர்ப்பணிப்பு உணர்வுள்ள ஆசிரியர்களின் உதவியால் காலப்போக்கில் மாணவர்கள் இசை தொடர்பான நுட்பங்களையும் திறன்களையும் வளர்த்துக்கொண்டனர். அவர்கள் பெற்றிருந்த நிபுணத்துவத்தின் பயனால் பார்வையாளர்களை இசைவிருந்தில் ஆழ்த்தி மகிழ்வித்தது இந்த இசைக் குழுவினர் பெருமைப்படும் நிகழ்வுகளுள் ஒன்றாக அமைந்தது.

இசைக்குழுவினர் தேசிய சமூக சேவை மன்ற (NCSS) தினத்தன்றும் இஸ்தானாவில் மதிய உணவு நேர நிகழ்ச்சியின்போதும் அதிபர் ஹலிமா யாகோப், ஓய்வுபெற்ற கௌரவ மூத்த அமைச்சர் கோ சோக் தொங் ஆகியோரின் முன்னிலையிலும் இசை விருந்தளித்தனர். மேலும், அவர்கள் மலேசியத் தாளவாத்திய இசை விழாவிலும் பங்கேற்றுள்ளனர்.

## CS பாடகர் குழு

2012 முதல் புதிய எல்லைகளைக் கண்டுவரும் CS பாடகர் குழு கேட்கும் திறனை இழந்த பிள்ளைகளால் பாடவும், இசையை அனுபவிக்கவும் முடியும் என்னும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்டது. பல பயிற்சிகளின்மூலம், மாணவர்கள் அவர்களது கேட்டல் திறன்களை மேம்படுத்திக்கொண்டு சொந்தக் குரல் வரம்பை அடையாளம் காணும் அதே சமயத்தில் சுருதி குறித்த விழிப்புணர்வையும் வளர்த்துகொண்டனர். அவர்கள் பாடல் வரிகளை மனனம் செய்ய கற்றுக்கொண்டபோது அவர்களின் மொழித் திறன்களும் நினைவாற்றலும் வலுப்பட்டன. மாணவர்கள் ஒன்றாக இணைந்து பாடுவதன்மூலம் அவர்களது உடனிணைந்து செயலாற்றும் திறன்களும் வளர்ச்சியடைகிறது. அதோடு, அவர்கள் சமூகரீதியாகவும் அவர்களின் வாழ்வின் வேறு விஷயங்களிலும் ஒருவருக்கொருவர் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்பதையும் உணர்கிறார்கள்.




CS பாடகர் குழு பங்கேற்ற SG ENABLE முதலாளிகள் பாராட்டு விருந்து நிகழ்ச்சி

## பள்ளி வளாகத்தில் வழங்கப்படும் செவியுணர்வியல் ஆதரவு

சிங்கப்பூரில் கேட்கும் திறனை இழந்த மாணவர்கள் கருத்துப்பரிமாறுவதற்கு வாய்மொழி முறையைப் பயன்படுத்தும் ஒரே பள்ளியாக விளங்கும் Canossian School, தமது மாணவர்களைக் கேட்கும் திறனையுடைய அவர்களது நண்பர்களுக்கு ஈடாகச் சமுதாயத்தில் பங்களிக்கக்கூடியவர்களாக உருவாக்குவதில் பெருமை கொள்கிறது.

பள்ளியின் செவியுணர்வியல் துறை பின்வரும் கேட்டல் தொடர்பான அக்கறைகளுக்குப் பள்ளியிலேயே மருத்துவச்சேவை வழங்குகிறது:

- கேட்டல் மதிப்பீடுகள் (செவிப்புலன் கருவிகளின் உதவியில்லாமலும் செவிப்புலன் கருவிகளின் உதவயுடனும்)
- பேச்சுப் புலனுணர்வு பரிசோதனை
- செவிப்புலன் உதவி சாதனங்கள் – பொருத்துதலும் சரிசெய்தலும்
- 'கொக்ளியர்' உட்பதிவு சிகிச்சை
- அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குதல்
- தொழில்முறை வல்லுநர் ஆலோசனையும் பரிந்துரையும்
- செவி மாதிரி அச்சு உருவாக்குதலும் உருமாற்றுதலும்
- செவிப்புலன் உதவி சாதனங்களுக்கான உதிரிப் பாகங்கள், துணைக்கருவிகள் மற்றும் பயன்பாட்டுப் பொருள்களின் விற்பனை
- பள்ளியில் FM அமைப்புமுறை வசதி



செவியுணர்வு வல்லுநர் ஒருவர் மாணவர்களிடம் அவர்களின் செவிப்புலன் உதவிக்கருவிகளை சுயமாகப் பராமரிப்பது குறித்துப் பேசுகிறார்



செவியுணர்வு தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் பள்ளியில் இருக்கும் ஒலி ஆய்வுக்கூடத்தில் செவி மாதிரி அச்சுக்களைத் தயார் செய்கிறார்

இந்தத் துறை மாணவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதோடு அவர்களுக்கு எப்போதும் கேட்க இயல்வதை உறுதி செய்கிறது. இங்குச் சொந்த ஆய்வுக்கூடம் இருப்பதால் செவி மாதிரி அச்சு உருவாக்கம் உருமாற்றம் ஆகியவற்றை எளிதாகச் செயற்படுத்தமுடிகிறது. அனுபவமுள்ள செவியுணர்வியல் வல்லுநர்களையும் தொழில்நுட்ப உதவியாளர்களையும் கொண்டிருக்கும் இந்தக் குழு, கேட்கும் திறனை இழந்த அனைத்துப் பிள்ளைகளின் குறிப்பிட்ட கேட்டல் தேவைகளை நிறைவேற்றுவதற்கான சிறந்த இடமாக CS விளங்குகிறது.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Lam En Qing



Lam En Qing 8 மாதங்கள் இருக்கும்போது தம் இரு செவிகளாலும் கேட்கும் ஆற்றலை இழந்தார். 2 வயது 4 மாதங்கள் இருக்கும்போது அவருக்குக் ‘கொக்ளியர் இம்ப்ளாண்ட்’ செய்யப்பட்டது. மேலும் அவருக்குப் பொதுப்படையான வளர்ச்சிநிலை இயலாமையும் தசை தளர்ச்சியும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவருக்கு நடப்பதிலும் உட்கார்வதிலும் சிரமம் இருந்தது. இவற்றை அவரால் உதவியின்றிச் செய்யமுடியவில்லை. மேலும் தொடக்கத்தில், அவரால் அதிகமாக பேசமுடியவில்லை.

ஆயினும் அவர், CS-இன் கவனிப்பும் ஆதரவும் நிறைந்த ஆசிரியர்களின் துணையோடு கடினமாகவும், விடாமுயற்சியுடனும் செயற்பட்டு, தம் கற்றலில் முன்னேற்றம் காட்டினார். மொழியியல் திறனைப் பொறுத்தவரையில், En Qing சரளமாகப் பேசியதோடு தம் உணர்வுகளையும் நன்றாக வெளிப்படுத்துகிறார். CS-ல் இருந்தபோது, அவர் தானே முனைப்புடன் செயற்பட்டதோடு தம் ஆசிரியர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவத் தயாராகவும் இருந்தார். தினமும் காலையில் அவர் பள்ளியின் வாசிப்புத் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுடன் சேர்ந்து படிப்பார்.

அவர் CS தாளவாத்திய இசைக்குழுவின் உறுப்பினர். அவர் உள்நாட்டு வெளிநாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்றதோடு சில பள்ளி நிகழ்ச்சிகளுக்கு நெறியாளராகவும் செயற்பட்டார். பள்ளியின் முன்னாள் மாணவர் என்ற முறையில் அவர் இளம் உறுப்பினர்களுக்கு முன்மாதிரியாக இருந்து ஊக்கமளிப்பதோடு இளம் இசைக்குழு உறுப்பினர்களுக்கு தாளவாத்திய கருவிகளை வாசிக்கப் பயிற்சியளிக்கும் பொருட்டு மீண்டும் பள்ளிக்கு வருகிறார்.

En Qing கிற்குக் கனோசியன் நல்ல முன்னேற்றத்திற்கான விருது வழங்கப்பட்டது. அவர் 2010, 2013-ஆம் ஆண்டுகளில் ஆங்கிலப்பாடத்தில் முதலிடம் பெற்றார். 2011-ல் கணிதத்தில் முதலிடம் பெற்றார். 2013-ல் முதன்முறையாகத் தொடங்கப்பட்ட கனோசியன் உபகாரச்சம்பளமும் அந்த ஆண்டிற்கான கனோசியன் விருதும் வழங்கப்பட்டன. 2014-ல், En Qing தமது வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். CS-இலிருந்து பட்டம் பெற்ற பிறகும்கூட, En Qing தொடர்ந்து சிறப்பாகச் செயற்பட்டார். அவர் 2017-ல் Beatty Secondary School-இல் பொதுக் கல்விச் சான்றிதழ் சாதாரண ‘O’ நிலைத் தேர்வை முடித்தார். இனி, அவர் நான்யாங் பலதுறைத் தொழிற்கல்லூரியில் தமது பட்டயப் படிப்பைத் தொடங்கவிருக்கிறார்.

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: | Canossian School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | canossian.edu.sg |
| முகவரி | 1 Sallim Road<br>Singapore 387621 |
| அருகிலுள்ள MRT நிலையம்(கள்) | மாத்தார் நிலையம் (DT25) |

| | |
|---|---|
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | பள்ளிக்கு வெளியே : 64 & 100<br>பள்ளிக்கு எதிரே: 40, 62, 64, 100, 135, 155, 158 |
| **திட்ட இலக்கு** | உள்ளத்தால் நேர்மையுடையவர்களாகவும் கடவுளுக்குக் கட்டுப்பட்டுப் பிறருக்குச் சேவையாற்றுவதில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்டவர்களாகவும் கனோசியர்களைப் பேணி வளர்த்து அதிகாரமளிப்பது |
| **தொலை நோக்கு** | கேட்கும் ஆற்றலை இழந்த பிள்ளைகளின் கல்விக்கான உன்னத நிலையம் |
| **விழுமியங்கள்** | Canossian School-இல் கல்வி செயல்முறைகளை நிகழ்முறையை வழிநடத்துவதற்கான முக்கிய விழுமியங்கள் கனோசியன் விழுமியங்களான கடப்பாடு, கருணை, மகிழ்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலானவை. |
| **குறிக்கோள்** | VIA, VERITAS, VITA (வழி, வாய்மை, வாழ்க்கை)<br>இயேசு கிறிஸ்துவின்பால் கொண்ட நம்பிக்கையின் அடிப்படையில் எங்கள் குறிக்கோள் அமைந்துள்ளது. நாங்கள் அவரை எங்களின் முன்மாதிரியாகக் கொண்டு, அவருடைய வழிகளைப் பின்பற்றுகிறோம். |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | • தாளவாத்திய இசைக்குழு<br>• பாடகர் குழு<br>• கலைகள் மன்றம்<br>• சுற்றுச்சூழல் மன்றம் |
| **முக்கியத் திட்டங்கள்** | • உள்ளடக்கும் திட்டத்தின்வழி மாணவர்களின் கருத்துப்பரிமாற்றம் மற்றும் மொழித் திறன்களை மேம்படுத்தி, CS பங்காளர் பள்ளிகளில் தங்கள் நேரத்தைச் செலவிடத் துணைபுரிகிறது.<br>• தேசியப் பாடத்திட்டம், மாணவர்களைப் பள்ளியில் செலவிடும் நேரத்தின் ஒரு பகுதியை CS பொதுநிலைப் பங்காளர் பள்ளிகளில் செலவிடத் துணைபுரிகிறது.<br>• பண்புநல வளர்ச்சி திட்டம் கனோசியன் விழுமியங்களின் அடிப்படையில் பண்புநல வளர்ச்சியை வலியுறுத்துவதோடு சமூக மனவுணர்வு சார்ந்த வாழ்க்கைத்திறன்களையும் பேணி வளர்க்கத் துணைபுரிகிறது.<br>• பெற்றோர் வழிகாட்டு திட்டம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வளமிக்க முறையில் மொழியைக் கற்கும் சூழலை அமைத்துக்கொடுத்து ஆதரவு வழங்குவதற்கான அறிவையும் திறன்களையும் அளிப்பதோடு செவிப்புலன் உதவிச் சாதனங்களைப் நிர்வகிக்கும் திறனையும் பெறத் துணைபுரிகிறது. |

# ஒன்றிணைந்து நாம் சாதனை புரிந்து வெற்றி பெறுவோம்

மாணவர்கள் விளையாடுவது, கற்றுக்கொள்வது மற்றும் முழுமையான வளர்ச்சியடைவது என அனைத்தையும் உள்ளடக்கிய பள்ளியான, Lighthouse School (LHS), 1950களில் சிங்கப்பூர் ஸ்கூல் ஃபார் தி பிளைண்ட் என்று துவங்கப்பட்டதிலிருந்து இப்போது வரை பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. 2007இலிருந்து LHS புலன் சார்ந்த குறைபாடுகளைக் கொண்ட முற்றிலும் மாறுபட்ட இரண்டு குழுக்களைச் சேர்ந்த மாணவர்களுக்குச் சேவையளித்து வருவது அனைவரும் அறிந்ததே. பார்வைக் கோளாறு (VI) மற்றும் கேட்டல் திறன் இழப்பு (HL) ஏற்பட்ட இந்த மாணவர்களுக்குப் பாடங்களை வடிவமைப்பதில் பேரார்வமும் திறனும் உள்ள ஆசிரியர்களால் சிறந்த முறையில் ஆதரவும் பராமரிப்பும் அளிக்கப்படுகிறது. அவர்கள் LHSஇல் ஊக்குவிக்கும் கற்றல் சூழலை உருவாக்கும் விதம் இதனை நமக்கு உணர்த்திவிடும்.

### தேசியப் பாடத்திட்டம்

LHSஇல், தேசிய பாடத்திட்டத்தை அணுகக்கூடிய VIஆம் வகுப்பு மாணவர்கள் தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வை (PSLE) எழுதுவார்கள்.

### கேட்டல் ஆற்றல் இழப்பு மற்றும் பார்வைக் குறைபாடு உள்ள மாணவர்களுக்குக் கற்றல் ஆதரவுகள்

பார்வைத் திறன் குறைந்த மாணவர்களுக்குக் கையில் பிடித்துக்கொள்ளத்தக்க மற்றும் மேசையில் வைக்கப்படக்கூடிய உருப்பெருக்கிகள் போன்ற சிறப்பு உதவிக் கருவிகள் வழங்கப்படுகின்றன. முழுப் பார்வையையும் இழந்த மாணவர்களுக்கு ப்ரெய்லர், ப்ரெய்ல் நோட்டேக்கர், ஸ்க்ரீன் ரீடர் மென்பொருள், க்ராமர் அபாகஸ் மற்றும் பேசும் அறிவியல் கால்குலேட்டர் போன்ற சிறப்புக் கருவிகளைப் பயன்படுத்தி ப்ரெய்லில் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. கேட்டல் திறனை இழந்த மாணவர்களுக்குச் சிங்கப்பூர் சைகை மொழியைப் பயன்படுத்திக் கற்பிக்கப்படுகிறது. இது சமுகரீதியாக அங்கீகரிக்கப்பட்டு, சிங்கப்பூரில் பெரும்பாலான சைகை சமுதாயத்தால் பயன்படுத்தப்படுகிறது. HLஇல் உள்ள மாணவர்கள் ஸ்மார்ட் போர்டுகள் மற்றும் ஐபேட்களைப் பயன்படுத்திக் கருத்துப்பரிமாற்றப் பாடங்களில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



பெர்கின்ஸ் ப்ரெய்லரைப் பயன்படுத்தி வேலை செய்கிறார்



"கனவுகள் நனவாகக் காணுதல்"



சைகைமொழியில் பாடுகின்றனர்



விஷுவல் ஆர்ட்ஸ்: காந்தத்துடனான படைப்பாற்றல்

### சிறப்புக் கல்வித் திட்டம்

LHS தனிப்பட்ட கல்வித் திட்டம் (IEP) மற்றும் தனித்துவம் மிக்க பாடத்திட்டத்தின் மூலம் பார்வைத் திறன் பாதிக்கப்பட்ட அல்லது கேட்டல் திறனற்ற ஒவ்வொரு மாணவரின் தனித்துவமிக்க பலவகையான தேவைகளை நிறைவேற்றுகிறது. மாணவர்களுக்குக் கருத்துப்பரிமாற்றம், எண்ணறிவு, படிப்பறிவு, அன்றாடவாழ்க்கைத் திறன்கள், பழகுநிலையும் நடமாட்டமும் சார்ந்த கூறுகள் ஆகியவை குறித்து அறிவுறுத்தவும் பயிற்றுவிக்கவும் படுகிறது.

## வகுப்பறையைத் தாண்டி கற்றல்



LHS பல்வேறு பள்ளி செயல்பாடுகள் மூலம் துடிப்புடன் இயங்குகிறது. உதாரணத்திற்குக் கற்றல் பயணங்களின்போது, மாணவர்கள் பாரம்பரிய இடங்களுக்குச் செல்வதன் மூலம் சிங்கப்பூர் பற்றிய தகவல்களைப் புரிந்துகொள்கின்றனர். மாணவர்கள் இந்த அமர்வுகளின்போது ஈடுபாட்டுடன் செயல்பட்டு, உடன்பாடான கற்றல் மனநிலையை வெளிக்காட்டுகின்றனர்



வளமூட்டும் நடவடிக்கைகள்

## சுவைத் தகவல்கள்

### LHS ப்ரெய்ல் உற்பத்திப் பிரிவு:

அர்ப்பணிப்பு உணர்வுள்ள ப்ரெய்ல் நிபுணர்களைக் கொண்டு தரமான எழுத்துப்படிகளை ப்ரெய்ல் பிரதிகளாக உருவாக்கக்கூடிய உள்ளமைந்த ப்ரெய்ல் உற்பத்திப் பிரிவை (BPU) LHS சொந்தமாக நடத்துகிறது.

### பன்புலன்சார் ஒலி ஆய்வுக்கூடம்:

LHS, கல்விக்காகவும் சிகிச்சைக்காகவும் பன்புலன்சார் ஒலி ஆய்வுக்கூடத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது. பிரத்யேக தரைப் பலகைகளில் அதிர்வுகளை உணர்வதன் மூலம் மாணவர்கள் உற்சாகமூட்டும் நடைவகைகளை அனுபவிக்கின்றனர். பன்புலன்சார் ஒலி ஆய்வுக்கூடம் கேட்டல் பயிற்சி, பேச்சுப் பயிற்சி, இசை மற்றும் நகர்வு ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்படலாம். சுருக்கமாகச் சொன்னால், ஒலி மற்றும் ஒளியின் கருத்தாக்கம் நம் மாணவர்களுக்கான இந்தச் சிறப்பு அறையின் மூலம் சாத்தியமாக்கப்படுகிறது.




'பர்ப்பிள்' பல்லியல் இசைக்குழு

### LHS பாடகர் குழு

SG50 கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக சிங்கப்பூர் கலந்தாய்வுக் கூடத்தில் ஜூலை 31, 2015 அன்று பர்ப்பிள் சிம்ஃபனி துவங்கப்பட்டதிலிருந்து LHS பாடகர் குழு இதன் ஒரு பகுதியாக இருந்துவருகிறது. பர்ப்பிள் சிம்ஃபோனி என்பது சிறப்புத் தேவைகளைக் கொண்டவர்கள், இல்லாதவர்கள் என அனைவரையும் உள்ளடக்கிய சிங்கப்பூரின் முதல் இசைக் குழுவாகும்.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை



### Dr. Yeo Sze Ling

இன்ஃபோகாம் ஆராய்ச்சி மையத்தின் விஞ்ஞானி, Dr. Yeo Sze Ling, விழி விறைப்பு நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பிறகு 1984இல் Lighthouse School-இல் சேர்ந்தார் (முன்பு சிங்கப்பூர் ஸ்கூல் ஃபார் தி விஷுவலி ஹேண்டிகேப்ட் என்று அறியப்பட்டது.) அவள் ப்ரெய்லின் உதவியுடன் பல்வேறு பாடங்களைப் படித்து, 1990இல் பட்டம் பெற்றார். அவருடைய ஆசிரியர்கள் சவாலான கணக்கு கேள்விகளைப் புதுமையான முறைகள் மூலம் தீர்ப்பதற்கு எப்படி வழிகாட்டினார்கள் என்பதை ஆர்வத்துடன் நினைவுகூர்கிறார். Dr. Yeo knew அவர்களுக்கு அப்போதே அவருடைய பார்வைக் கோளாறு ஒரு தடையல்ல என்பது தெரிந்திருந்தது. அவர் கணக்கில் தொடர்ந்து சாதிக்க துவங்கினார். அவர் தனது கல்வி பயணம் சவாலானது என்பதை ஏற்றுக்கொண்டார். ஆனால், அவர் வழக்கமான கல்வி நிறுவனங்களிலும் சமுதாயத்திலும் சிறப்பாக ஒருங்கிணைந்து இருப்பதற்கு அவசியமான அடித்தளத்தை அமைக்கும் கருவியாக சிறப்புக் கல்விப் பள்ளி இருந்ததுதான் இதற்கு காரணம் என்று குறிப்பிட்டார்.

*“இது மிகச் சிறந்த பள்ளி, நான் இன்று இருக்கும் நிலைக்கு ஐஷைன் தான் காரணம்”*

*– நூருல், 18,*
*Ahmad Ibrahim Secondary School-இன் மாணவர், 2012இன் VIஆம் வகுப்பு*






*“LHSஇல் தான் எனக்கு நல்ல நண்பர்கள் நிறைய பேர் கிடைத்தனர், இங்குதான் நான் பல புதிய விஷயங்களைக் கற்றுக்கொண்டேன்”*

*– Chun Hong, 15,*
*Beatty Secondary School மாணவர், 2017இன் HL வகுப்பு.*

*“பள்ளியில் எனக்கு மிகவும் பிடித்த விஷயம், எவ்வளவு கடினமாக இருந்தாலும் தங்கள் மாணவர்களை விட்டுக்கொடுக்காமல் அர்ப்பணிப்பு உணர்வுடனும் பேரார்வத்துடனும் வேலை செய்யும் ஆசிரியர்கள்.”*

*– Nuraziana Mohamed Said, 33,*
*கலாசாரம் சமுதாயம் மற்றும் இளம் வயதினருக்கான அமைச்சின் நிர்வாக பிரதிநிதி, 1996இல் VIஆம் வகுப்பு படித்தார். இந்தப்*

# கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்:** | Lighthouse School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | lighthouse.edu.sg |
| **முகவரி** | 51, Toa Payoh Rise<br>Singapore 298106 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | கேல்டெகாட் MRT நிலையம் |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | 141, 235 |
| **திட்ட இலக்கு** | சிறப்புத் தேவையுடைய மாணவர்கள் வயது முதிர்ந்துவரும் நிலையில் அவர்களுக்கு முழுமையான பாடக்கலைத்திட்டத்தை வழங்குவதன்வழி நிறைந்த வழியில் திறன்களைப் பெற்று விழுமியங்களை வளர்த்துக்கொண்டு கல்வியிலும் தொழிலிலும் தனிப்பட்ட வெற்றி பெற வழிவகுப்பது. |
| **தொலை நோக்கு** | புலன்சார்ந்த குறைபாடுடையோர்க்கான உன்னத நிலையம்<br>இந்த வட்டாரப்பகுதியில் சிறந்த பள்ளியாக Lighthouse School-ஐ அமைப்பதன்வழி இங்குப் பயின்று செல்லும் மாணவர்கள் தொடக்கநிலைக்குப் பிந்திய கல்வியிலும் வயது முதிர்ந்த நிலையிலும் நம்பிக்கையுடனும் எதிர்காலச் சவால்களைச் சமாளிப்பதற்கு உறுதிகொண்டவராகவும் உருவாகுவர். |
| **விழுமியங்கள்** | ஐ-ஷைன்<br>நேர்மை<br>பணிவு<br>ஒருமைப்பாடு<br>விடாமுயற்சி<br>பச்சாதாபம் |
| **குறிக்கோள்** | நாம் ஒன்றிணைந்து சாதிக்கவும் வெற்றி பெறவும் இடைவிடாது முயல்வோம். |
| **முக்கியத் திட்டங்கள்** | • தேசிய பாடத்திட்டத்தை அணுகக்கூடிய பார்வைக் கோளாறு உள்ள மாணவர்கள் தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வில் (PSLE) பங்கேற்பார்கள்<br>• பார்வைக் கோளாற்றைக் கொண்ட மற்றும்/அல்லது கேட்டல் திறன் இழந்த மாணவர்களுக்குத் தேசிய பாடத்திட்டத்தை அணுகச் சிறப்புக் கல்வித் திட்டம் வழங்கப்படும் |

# மாணவர்களை ஈடுபடுத்துவதற்கான உத்திகள்

Chaoyang School (CYS) ஆசிரியர்கள் எழுத்தறிவிலும் எண்ணறிவிலும் மாணவர்களின் ஆர்வத்தையும் திறமையையும் வளர்ப்பதற்குப் பல்வேறு உத்திகளைக் கொண்ட துணைப்பெட்டகம் ஒன்றைப் பயன்படுத்துகின்றனர். மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் இணைந்து செயற்படுவதன் மூலம் சிறப்பாகக் கற்றுக்கொள்வார்கள் என்பதை அறிந்து ஆசிரியர்கள் படங்கள் நிறைந்த பெரிய புத்தகங்களைப் பயன்படுத்தி வகுப்புக் கலந்துரையாடல்களில் மாணவர்களை ஈடுபடுத்துகிறார்கள். இதன் மூலம் ஒவ்வொரு பிள்ளையிடமும் தன்னம்பிக்கையை வளர்க்கிறார்கள். அது மட்டுமல்லாமல், கீழ்த் தொடக்கக் கல்வித் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு வாசிப்புத்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ஒலியியல் கற்றுத்தரப்படுகிறது. கீழ்த் தொடக்கநிலை ஆண்டுகளில் நல்ல அடித்தளங்களை அமைத்துக்கொண்ட பிறகு, ஆசிரியர்கள் மேல் தொடக்கநிலை ஆண்டுகளில் மாணவர்களுக்குப் பொருத்தமான கருப்பொருள்கள் பற்றியும் பிரச்சினைகள் பற்றியும் பாடங்கள்வழிக் கற்றுத்தருவார்கள். மேலும், மாணவர்களுக்குப் பேச்சு மற்றும் நாடகம் போன்ற வளமிக்க கற்றல் வாய்ப்புக்களும் வழங்கப்படுகின்றன.



ஆசிரியர்கள் பெரிய புத்தகங்கள் கொண்டு படிப்பதன்வழி மாணவர்களை ஈடுபாடுகொள்ளச் செய்கிறார்கள்.

கணிதத்தையும் அறிவியலையும் கற்றுத்தரும் குழுச் செயல்வழி நடவடிக்கைகளைப் பன்புலன்சார்ந்த அணுமுறையின்மூலம் கணிதத் திறன் கற்றலையும், ஆராய்ச்சிவழி அறிவியல் கற்றலையும் மேம்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. மாணவர்களுக்குக் கணக்கிடுதல், வரவு-செலவு திட்டமிடுதல், அட்டவணை அமைத்தல், அளவிடுதல் ஆகியவற்றில் நல்ல அடித்தளத்தை அமைக்க உதவும் விரிவான திட்டத்தை ஆசிரியர்கள் வழங்குகின்றனர். இந்த நான்கு முக்கிய அம்சங்களும் அவர்களின் எதிர்காலத் தொழில்களுக்கும் பயன்படும்.

அறிவியல் பாடத்திட்டம் மாணவர்கள் சுற்றுச்சூழலைப் புரிந்துகொள்ளவும் அது குறித்து ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளவும் உதவும். மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டும் வகையிலான கற்றல் சூழலை உருவாக்கவும் மாணவர்களிடையே ஆராய்ந்து அறியும் திறனை மேம்படுத்தவும் ஆராய்தல் சார்ந்த கற்றல் முக்கிய கற்பிக்கும் முறையாகப் பயன்படுத்தப்படுகிறது.

மொத்தத்தில், கற்பிக்கும் ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு மாணவரும் சுதந்திரமாக இருப்பதோடு, அவரைச் சுற்றியுள்ள உலகம் குறித்துத் தெரிந்துகொள்வதற்கான ஆர்வத்தைக் கொண்டவராகவும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறது.



பட்டாம்பூச்சியின் வாழ்க்கைச் சுழற்சி பற்றிக் கற்கின்றனர்.




எண்கள் பற்றிக் கற்கின்றனர்.

# நம்பிக்கையையும் சுய உணர்வு வெளிப்பாட்டையும் வளர்த்தல்

பெரும்பாலான குழந்தைகளுக்கு உடற்கல்வி பாடங்கள், வரைகலைப் பாடங்கள்,இணைப்பாட நடவடிக்கைகளும் பிடிக்கும். பள்ளி இந்தப் பாடங்களின்வழியே பிள்ளையின் வாழ்விற்கு முக்கியமான நுண்ணாய்வுத் திறன்களையும் குண இயல்புகளையும் வளர்க்கின்றன. CYS ஒவ்வொரு உடற்கல்விப் பாடமும் வரைகலைப் பாடமும், அல்லது ஒவ்வொரு இணைப்பாட நடவடிக்கைக்கான நேரமும் மாணவர்களை மகிழ்விப்பதோடு கற்றலில் ஈடுபடுவதை உறுதிசெய்கிறது.

குறிப்பாக, மாணவர்களிடையே சுய உணர்வு வெளிப்பாடு, சிந்தனை ஒருங்கமைவு, இயக்கத் திறன்கள், ஆற்றலை ஆக்கபூர்வமாக செலவழித்தல் ஆகியவற்றை வளர்த்து நெறிப்படுத்த அழகியல்சார்ந்த பாடங்கள் பள்ளிப் பாடக்கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், மாணவர்கள் கற்றுக்கொண்ட திறன்களும், பெற்ற அனுபவங்களும் அவர்கள் கருத்துப்பரிமாற்றம் செய்யவும் பிறருடன் பழகவும் அவர்களைச் சுற்றியுள்ள உலகைப் போற்றி மதிக்கவும் உதவியுள்ளன.



படைப்பில் ஈடுபட்டிருக்கும் சாவ்யாங் இசைக்குழுவினர்



நாடகத்தின்வழியே சுய உணர்வு வெளிப்பாட்டைக் கற்றுக்கொள்ளல்



கால்பந்து அணி

## தொழில்முறைசார் உதவிப் பணியாளர்கள்

மட்டுமல்லாமல், மாணவர்களின் கற்றல் இலக்குகளை வலியுறுத்தப் பள்ளி பாடத்திட்டத்திற்குள் தனது சிகிச்சைத் திட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் பல அம்சங்களை உள்ளடக்கிய அணுகுமுறையை AP துறை பின்பற்றுகிறது. CYS-இல் உள்ள தொழில்முறைசார் உதவியாளர் (AP) துறை மனோதத்துவ நிபுணர்கள், சமூக சேவையாளர்கள், தொழில், பேச்சு, மொழிசார் சிகிச்சையாளர்களையும் உள்ளடக்கியது. அடையாளம் காணப்பட்ட மாணவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் தனிப்பட்ட இடையீட்டுத் திட்டங்களை வழங்குவதோடு, மாணவர்களின் கற்றல் நோக்கங்களை வலியுறுத்த AP துறை, பல அம்சங்களை உள்ளடக்கும் அணுகுமுறையைக் கொண்டு பள்ளி பாடக்கலைத்திட்டத்திற்குள் தனது சிகிச்சைத் திட்டங்களை ஒருங்கிணைத்திருக்கிறது.



மகிழ்வூட்டும் உடற்பயிற்சி சிகிச்சை



விளையாட்டுவழி சிகிச்சை

# Chaoyang School

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Tee Xiao Ying

பாலர் பள்ளி மாணவியாக இருக்கும்போதே Tee Xiao Yinbg தனது வகுப்புத் தோழர்களைவிட வித்தியாசமானவராகக் கருதப்பட்டார். அவர் பாடங்களின்போது தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதில் சவால்களைச் சந்தித்தார். அவரால் எழுத்துக்களை மட்டுமே படிக்க முடிந்தது. அவர் சொற்களைச் சிலவேளைகளில் இடம் மாறி எழுதினார். Xiao Ying கின் பெற்றோரும் பாலர் பள்ளி ஆசிரியர்களும் அவரது வளர்ச்சிரீதியாக அவருடைய நண்பர்களைவிடப் பெருமளவு பின்தங்கி இருப்பதை உணர்ந்து, அவரை CYS-இல் சேர்த்தனர்.

CYS-இல் ஆறு ஆண்டுகள் பயின்று வந்ததால், Xiao Ying School-இல் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் முன்மாதிரியாக விளங்கும் அளவிற்கு மேம்பட்டிருக்கிறார். இந்த ஆண்டு, அவர் பள்ளியின் சட்டாம்பிள்ளைக் குழுவின் துணைத் தலைவராக இருப்பதோடு அந்தக் குழுவை அக்கறையுடன் வழிநடத்திச் சென்று மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பல பள்ளி நடவடிக்கைகளிலும் திட்டங்களிலும் துணைபுரிகிறார்.



Xiao Ying தனது சகக் குழுக்களுக்கு வழிகாட்டுகிறார்

அவர் பள்ளியின் திறமைமிக்க பாடகர் குழுவான மெர்ரி மெலோடிஸிலும் பங்குவகிக்கிறார். இந்தக் குழு 2015 ASEAN பாரா கேம்ஸ் மற்றும் 2016 SPED மாநாடு போன்ற முக்கியமான பொது நிகழ்ச்சிகளிலும் தொடர்ந்து கலந்துகொண்டது. அவர் பள்ளியின் 'மெர்ரி மெலடீஸ்' என்னும் திறன்மிக்க பாடகர் குழுவின் உறுப்பினராக உள்ளார். இந்தக் குழு, 2015 ஆசியான் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுக்கள் 2016 SPED மாநாடு முதலான முக்கியமான பொது நிகழ்ச்சிகளிலும் அடிக்கடி பங்கேற்றுள்ளது.

Xiao Ying எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கும் மாணவி. அவர் சிறப்பாகவும் செயற்பட்டுள்ளார். அவர் கல்விசாராத துறைகளில் மாணவர்களின் சாதனைகளை அங்கீகரிக்கும் திறமை மிகுந்த மாணவர், சாதனை மற்றும் அங்கீகார (STAR) விருதைப் பெற்றார்.

அவருடைய மிகச் சிறந்த திறன்களையும் சாதனைகளையும் அங்கீகரிக்கும் வகையில், 2017-இல் Xiao Ying முதன்முதலாக லீ குவான் இயூ முன்மாதிரி மாணவர் விருது பெற்றார். இந்த மிகுந்த சிறப்பு வாய்ந்த விருது Xiao Ying அடைந்திருக்கும் அளவிடமுடியாத வளர்ச்சிக்குச் சான்றாக அமைகிறது.

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Chaoyang School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | apsn.org.sg/schools/chaoyang-school |
| **முகவரி** | 10, Ang Mo Kio Street 54,<br>Singapore 569184<br>Tel : 64566922 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | ஆங் மோ கியோ நிலையம் |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | பேருந்து மூலம்:<br><br>A: ஆங் மோ கியோ ஹப் / ஆங் மோ கியோ சந்திப்பிலிருந்து துணைப் பேருந்துச் சேவை 265-இல் ஏறித் தொகுதி 549-இல் இறங்கவும். Chaoyang School 2 நிமிடங்கள் நடக்கும் தூரத்தில் இருக்கிறது.<br><br>B: ஆங் மோ கியோ அவென்யூ 5 வழியாகச் செல்லும் 72, 88 அல்லது 159 பேருந்தில் ஏறி ITE காலேஜ் செண்ட்ரலுக்கு எதிரே இருக்கும் தொகுதி 540-இல் இறங்கவும். Chaoyang School-க்குச் செல்வதற்கு மேற்கூரையுடைய நடைபாதையைப் பயன்படுத்தவும்.<br><br>C: ஆங் மோ கியோ அவென்யூ 10 வழியாகச் செல்லும் பேருந்துகள் 45, 54, 88 அல்லது 265ல் ஏறித் தொகுதி 555-இல் இறங்கவும். Chaoyang School-க்குச் செல்வதற்குச் சுமார் 5 நிமிடங்கள் நடக்க வேண்டும்.<br><br>D: ஆங் மோ கியோ அவென்யூ 3 வழியாகச் செல்லும் 25, 55, 73, 74, 74e, 76, 132, 165 அல்லது 268-பேருந்தில் ஏறித் தொகுதி 564-இல் இறங்கவும். Chaoyang School-க்குச் செல்லச் சுமார் 5 நிமிடங்களுக்கு நடக்க வேண்டும். |

**திட்ட இலக்கு**

சிறப்புத் தேவைகள் உள்ளவர்களைச் சமுதாயத்தின் துடிப்புமிக்க பங்களிப்பாளர்களாக்குவது;
பங்காளர்கள் மற்றும் சமுதாயத்தின் திறன்களை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும்;
அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்திற்கு வழிகாட்டுவதும் மற்றும் ஆதரிப்பதும்.

**தொலை நோக்கு**

தன்னூக்கமளிக்கப்பட்ட வாழ்க்கைக்கு அனைவரையும் உள்ளடக்கிய ஈடுபாடுமிக்க சமுதாயம்

**விழுமியங்கள்**

கடப்பாடு, நேர்மை, மீளுந்தறன், மதிப்பு

**குறிக்கோள்**

சிறந்து செயற்படுவோம்

**வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்**

1) இணைப்பாடத் தொகுப்பு

| நிகழ்கலைகள் | காட்சிக் கலைகள் | சமூகவியல் தொழில் முனைப்பு | விளையாட்டுக்கள் |
|---|---|---|---|
| • பேச்சும் நடிப்பும்<br>• இசையும் அசைவும்<br>• ஹார்மோனிக்கா பாடகர்க்குழு<br>• ட்ரம்ஸ் வாசித்தல்<br>• நடனம் | • பொழுதுபோக்குக் கைவினை (கலை)<br>• பொழுதுபோக்குக் கைவினை (தகவல் தொழில்நுட்பம்)<br>• பாத்திக் ஓவியக்கலை<br>• காட்சிக் கலைகள் | • பலகாரம் செய்தல்<br>• பசுமை மன்றம்<br>• சமூகவியல் தொழில் முனைப்பு | • பூப்பந்து<br>• காற்பந்து |

2) திறன் வளர்ச்சி

| நிகழ்கலைகள் | காட்சிக் கலைகள் | விளையாட்டுக்கள் |
|---|---|---|
| • பாடகர் குழு<br>• நடனம் | • பாத்தேக் ஓவியக்கலை<br>• சீன ஓவியக்கலைம் | • பூப்பந்து<br>• காற்பந்து |

**முக்கியத் திட்டங்கள்**

- பேசுதல், கேட்டல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றை வலியுறுத்தும் பாடத்தொகுப்பு அடிப்படையிலான பாடக்கலைத்திட்டம்.
- சேர்ந்து படிக்கும் அனுபவங்களையும் எழுதும் அனுபவங்களையும் வலியுறுத்தும் ஸ்டெல்லர் (SPED பதிப்பு) (ஆங்கில மொழியைக் கற்பதற்கும் படிப்பதற்குமான உத்திகள்)
- உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை ஊக்குவிக்கும் 'ஹார்ட்டி' திட்டம்.
- மாணவர் தலைமைத்துவத் திட்டம் மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளைப் பல்வேறு பொறுப்புகளின்வழி படிப்படியாக வளர்ச்சியடையச் செய்கிறது.
- வீடு-பள்ளி சமுதாயப் பங்காளித்துவம் என்பது பள்ளி, சமுதாயப் பங்காளர்கள் பெற்றோர்கள் ஆகியவரிடையே அர்த்தமுள்ள கூட்டுமுயற்சிக்கு வழிவகுக்கின்றது.

# Delta Senior School

## APSN DSS பாடத்திட்டத்தின் தொலைநோக்கு

Delta Senior School (DSS) மாணவர்கள் அவர்களின் குடும்பத்தினருக்கும் சமுதாயத்திற்கும் பங்களிக்கக்கூடிய சமூகப் பொறுப்புள்ள குடிமக்களாக இருப்பதற்கான தளங்களை அளிக்கிறது. பலதரப்பட்ட கற்றல் பகுதிகளில் மாணவர்கள் தங்கள் திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்துவதற்குப் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன.



## வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக் கல்வி

DSS பின்வரும் வழிகளின்மூலம் மாணவர்களின் வாழ்க்கைத் தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் பெருமை கொள்கிறது:

***வாழ்க்கைத் தொழிற்பயிற்சி சார்ந்த பார்வை:*** DSS-இன் விண்ணப்பதாரர்கள் அனைவரிடமும் பல துறை தகவல்களைச் சேகரிக்கும் செயல்முறை மேற்கொள்ளப்படுகிறது. சேர்க்கைச் சுழற்சி அடையாளங்காணப்பட்ட மாணவரின் திறமைகளையும், ஆர்வங்களையும், விருப்பங்களையும் தேவைகளையும் நன்கு புரிந்துகொள்ள மாணவரிடமும் அவரது குடும்பத்தினரிடமும் நேர்காணல்களைக் கொண்டிருப்பதோடு எந்தப் பொருத்தமான பாடப் பிரிவில் அவர்களைச் சேர்ப்பது என்பதைத் தீர்மானிக்க நான்கு தொழில்முறைப் பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் சோதனை அமர்வுகளையும் உள்ளடக்கும்.

***தள மதிப்பீடு:*** பயிற்சித் தளங்கள் மாணவர்களுக்குப் பயிற்சி வாய்ப்புக்களை அளிப்பதற்கு ஏற்புடையவையா என்பதற்கான பயிற்சி நடவடிக்கை ஒன்று எல்லாப் பணி இடங்களிலும் மேற்கொள்ளப்படும். தள மதிப்பீட்டின் எடுத்துக்காட்டுகளுள் கொள்கைகளும் பயிற்சிகளும், வேலையின் தன்மை, முதலாளிகளின் எதிர்பார்ப்புகள், மாணவரின் தேவைகளுக்கேற்ப வேலை மறுவடிவமைப்பு வாய்ப்புகள், அணுக்கத்தன்மை, பாதுகாப்பு ஆகியவை உள்ளடங்கும்.

## சில்லறை விற்பனை அறை @ DSS

DSS இல் உள்ள சில்லறை விற்பனை அறை 'யூனிக்லோ' என்னும் நிறுவனத்தோடு இணைந்து அமைக்கப்பட்டது. மாணவர்களுக்குச் சில்லறை வணிகச் செயற்பாடுகள் குறித்த திட்டத்தில் வாய்ப்பளிப்பதன்மூலம் சில்லறை வணிக நிறுவனத்திலும் நிர்வாகத்திலும் அவர்களின் திறன்களை வளர்த்துக்கொள்ள வழிவகுக்கிறது. ஜனவரி 2017இல் தொடங்கப்பட்ட இந்த இடம் எழுத்தறிவு எண்ணறிவு போன்ற முக்கியமான கற்றல் தொடர்பான நடவடிக்கைகளை மாணவர்களுக்கு நடத்தவும் பணியாளர்களால் பயன்படுபடுகிறது.



சில்லறை விற்பனை அறையில் தம் திறன்களைப் பயிற்சி செய்துபார்க்கும் மாணவர்கள்.

## பசுமை வகுப்பறை @ DSS

DSS-இல் உள்ள பசுமை வகுப்பறை NParks என்பதுடன் இணைந்து செயற்பட்டதன் விளைவாக உருவானது. மாடித் தோட்டக்கலைத்திட்டத்தின்வழி மாணவர்களுக்குத் நிலவனப்பு துறையில் மாறிவரும் போக்குகளில் ஒன்றான உள்ளரங்குத் தோட்டங்களை வடிவமைத்தல், நிறுவுதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கான அறிவையும் திறன்களையும் அறிமுகம் செய்கிறது. உள்ளரங்குத் தாவரங்கள், பசுமைச்சுவர்கள், செங்குத்து அமைப்பிலான காய்கறித் தோட்டங்கள், நிலவாழ் உயிர்களின் பேணகச்சாலை, பசுமைக் கம்பளம், ஆகியவற்றைக் கொண்டிருக்கும் இந்தப் பசுமை வகுப்பறை மாணவர்களுக்குக் கட்டட உட்புற வனப்புக்கான திறன்களை வளர்த்துக்கொள்ளவும் நடைமுறைப்படுத்திப் பயிற்சி பெறவும் நடைமுறைசார்ந்த பணியிடமாக விளங்குகிறது.



பசுமை வகுப்பறையில் திறன் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்கள்.

## பங்காளர்களைப் பாராட்டும் வகையில் நடைபெற்ற மதிய உணவு விருந்தும் பகிர்வும் (PALS)



பங்காளர்களைப் பாராட்டும் வகையில் மதிய உணவு விருந்துபசரிப்போடு நடைபெறும் பகிர்வரங்கு (PALS) ஆண்டுதோறும் பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வாகும். இது DSS மாணவர்களுக்கு ஆதரவு அளித்து, முயற்சியைக் கைவிடாது நம்பிக்கை வைத்து அவர்களைக் கண்ணியமான குறிப்பிட்ட நோக்கத்திற்காக இயங்கும் இளைஞர்களாக வளர்வதற்குத் துணைபுரிந்த பெற்றோர்கள்/பராமரிப்பாளர்கள், முதலாளிகள் மற்றும் சமுதாய அமைப்புகள் போன்ற பங்காளர்களைக் கௌரவிக்கும் வகையில் நடத்தப்படுகிறது. இந்த நிகழ்ச்சியின்போது மாணவர்கள் விருந்தினர்களுக்கான தரமான உணவைத் தயார் செய்வதன்மூலமும், தொழில்சார் பயிற்சிப் பாடங்களின் போதும், இணைப்பாட அமர்வுகளின்போதும் தயார் செய்த பொருள்களைக் காட்சிப்படுத்துவதன் மூலமும் கேளிக்கை நிகழ்ச்சிகளின்மூலமும் அவர்களின் திறன்களை வெளிக்காட்டுவர்.

## அன்புடன் டெல்டாவிலிருந்து

DSS பள்ளி பல்வேறு வெளிக்களத் தளங்களின் மூலம் சமுதாயத்திற்குக் கனிவன்பைப் பரப்புவதன்மூலம் ஆண்டைத் தொடங்குகிறது. சீனப்புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு, மாணவர்களும், பெற்றோர்களும் பள்ளிப் பணியாளர்களும் நன்கொடையாக வழங்கப்பட்டட மளிகைப் பொருள்களை அல்லது வீட்டு உபயோகப் பொருள்களைப் பரிசுக் கூடைகளைத் தயார் செய்து, அருகிலுள்ள குடியிருப்பு பேட்டைகளில் வசிக்கும் வயதான குடியிருப்பாளர்களுக்கு வழங்குகின்றனர். பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் பள்ளியில் கற்றுக்கொண்ட திறன்களைப் பயன்படுத்திச் சமுதாயத்திற்குப் பங்களிக்கின்றனர். உதாரணத்திற்கு, உணவு சேவைகள் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பள்ளியின் முன்னால் சாலை மேம்பாட்டு பணிகளில் ஈடுபட்டிருந்த கட்டுமான தொழிலாளர்களுக்கு மதிய உணவை தயார் செய்தனர். மற்றொரு நிகழ்ச்சியில், தோட்டக்கலைத் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் அருகிலுள்ள வயதான குடியிருப்பாளர்களுக்குப் பூங்கொத்துகளைத் தயார் செய்து கொடுத்தனர். மேலும், விடுதி தங்குமிட வசதி சேவைகள் திட்டத்திலுள்ள மாணவர்கள் அருகிலுள்ள குடியிருப்புப் பேட்டையிலுள்ள சில வீடுகளை சுத்தம் செய்யும் வேலைகளை மேற்கொண்டனர்.



வயதான குடியிருப்பாளர்களுக்குப் பரிசுக்கூடைகளை வழங்கிய பிறகு DSS மாணவர்கள் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் ஈடுபடுகின்றனர்.



உணவும் பானமும் திட்டத்தைச் சேர்ந்த DSS மாணவர்கள், கட்டுமானத் தொழிலாளர்களுக்குத் அவர்கள் தயாரித்த உணவைப் பரிமாறுகின்றனர்



விடுதிதங்குமிட வசதி சேவைகள் திட்டத்தைச் சேர்ந்த DSS மாணவர், தமது பயிற்சியாளரின் வழிகாட்டுதலின்படி குடியிருப்பாளரின் வீட்டைச் சுத்தம் செய்கின்றனர்



தோட்டக்கலைத் திட்டத்தைச் சேர்ந்த DSS மாணவர்கள் வயதான குடியிருப்பாளர்களுக்குப் பூங்கொத்துகளைத் தயார் செய்கின்றனர்



LEAD திட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் பார்வையாளர்களையும் விருந்தினரையும் கௌரவிக்கும் வகையில் வழங்கப்படும் நினைவுப் பொருள்களைத் தயாரிக்கின்றனர்



சில்லறை வணிகச் செயற்பாடுகள் திட்டத்தைச் சேர்ந்த DSS மாணவர்கள் வயதான குடியிருப்பாளர்களுடன் கரையோரப் பூங்காக்களுக்குச் சென்றஇன்பச் சுற்றுலா

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Suhairi Bin Suhani



DSS-இல் மாணவராக இருந்தபோது Suhairi, படிப்பதிலும் கற்ற திறன்களைப் பயன்படுத்துவதிலும் எண்ணற்ற சவால்களைச் சந்தித்தார். அவர் தமக்கு ஏற்பட்ட தடைகளைச் சமாளிப்பதற்குக் குறிப்பேட்டில் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய குறிப்புகளைக் குறித்துவைத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டார். Suhairiயின் கட்டொழுங்கும், கடப்பாடும் அவர் படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்த இடத்தை அடைய துணைபுரிந்ததோடு அவருடைய தனிப்பட்ட குறிக்கோள்களையும் ஆசைகளையும் நிறைவேற்ற உதவின. சிங்கப்பூரைப் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளில் பிரதிநிதித்துத் தற்போது தேசிய விளையாட்டு வீரரான இவருக்கு விளையாட்டுகளுக்கான உன்னத உபகாரச்சம்பளத்தை 2017-ஆம் ஆண்டுச் சிங்கப்பூர் விளையாட்டுக் கழகம் வழங்கியது.

> *“படிப்பதிலும் புரிந்துகொள்வதிலும் நான் சற்றுப் பின்தங்கியிருந்தாலும் மனத்தளவில் நம்பிக்கையையும் உறுதியையும் கொண்டுள்ளேன். இதுதான் என் வாழ்க்கை; சிங்கப்பூருக்காகப் பதக்கங்களை வென்றுதர வேண்டும் என்பது எனது கனவு.”*
>
> *– SUHAIRI BIN SUHANI,*
> *APSN DSS பட்டதாரி*

### Praventharan s/o Rajendran



பிரவின் DSSஇல் மூன்றாம் ஆண்டு படிக்கும்போது ஓர் ஓட்டலில் தமது வேலை இணைப்புத் திட்டத்தைத் தொடங்கினார். அப்போது அவர் தமது சக பணியாளர்களிடம் உரையாடுவதிலும், உணர்வுகளை நிர்வகிப்பதிலும் சவால்களை எதிர்நோக்கினார். காலப்போக்கில் அவர் மீளுந்தன்மையுடன் செயற்பட்டு இந்தப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கான உத்திகளை உருவாக்கிக்கொண்டார். அவர் தம்மைத் தாமே கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டதோடு சந்தேகம் ஏற்படும்போது சக ஊழியர்களின் உதவியைப் பெற்றுத் தெளிவுப்படுத்திக் கொள்ளவும் கற்றுக்கொண்டார். பிரவின் தற்போது சி’லோஸோ பீச் ரிசார்ட்டில்’ அறைகளையும் பொது இடங்களையும் பராமரிக்கும் உதவியாளராகப் பணிபுரிகிறார். அவர் தொடர்ந்து தரை ஹாக்கி விளையாட்டில் ஈடுபட்டு வருகிறார். இதற்கான பயிற்சிகளை அவர் மாணவராக இருந்தபோது சிங்கப்பூர் சிறப்பு ஒலிம்பிக்ஸ் அமைப்பின் ஏற்பாட்டின்வழி பெற்றார்.

### Nuraqilah Fatin Bte Swat



DSS அனுபவத்திலிருந்து வேலைக்குச் செல்லும் நிலைமாற்றத்தைச் சமாளிப்பதுதான் Fatin எதிர்நோக்கிய மிகப் பெரிய சவால்களில் ஒன்றாகும். பல வேளைகளில், அவர் வேலை இணைப்புத் திட்டத்திலிருந்து விலகுவதாகத் தம் வேலையிடப் பயிற்றுவிப்பாளரிடம் தெரிவித்திருக்கிறார். ஒரு சமயம் மெக்டானல்ஸ் விரைவு உணவகத்தில் வேலை செய்தபோது, அவர் தமக்கு ‘லாட்டே’ கலையில் ஆர்வம் இருப்பதைத் தெரிந்துகொண்டார். அதன்பிறகு அவர் தான் சேமித்து வைத்திருந்த பணத்தைக்கொண்டு ஒரு பணிமேம்பாட்டு ‘பாரிஸ்டா’ பயிற்சிவகுப்பில் சேர்ந்தார். அதில் அவர் தொடர்ந்து தோல்வியைச் சந்தித்தபோதும் அவர் சிறிதும் மனந்தளரவில்லை. ஜூலை 2017-ஆம் ஆண்டு அவர் ‘பெட்டிர் பாரிஸ்டா காபி அகாடமி’யிலிருந்து பயிற்சி பெற்றவராகப் பட்டம் பெற்று வந்த பிறகு, Fatin உள்ளூர்ப் ‘பாரிஸ்டா’ போட்டிகளில் வெற்றிகரமாகப் பங்கேற்றதோடு உள்ளூர் ‘மெக்கேஃபே’ கடைகளில் தமது திறமைகளைப் பயன்படுத்தி அனைவருக்கும் தொடர்ந்து சேவையளித்து வருகிறார்.

### Poh Yu Ru, Shawn Seah, Rajeev Raghasudha and Ang Yun Zane



இடமிருந்து வலம் Poh Yu Ru, Shawn Seah, Rajeev Raghasudha, Ang Yun Zane

Poh Yu Ru, Shawn Seah, Rajeev Raghasudha, Ang Yun Zane ஆகியோர் DSSஇல் படித்துவிட்டுத் தொடர்ந்து தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் (ITE) கல்லூரிகளில் படித்துவரும் மாணவர்களுள் சிலர். தன்முனைப்புமிக்க தனிநபர்களாக விளங்கும் இவர்கள் தங்கள் வாழ்க்கைக் குறிக்கோள்களை அடைய மிகப் பெரிய தடைகளைக் கடந்து வந்தவர்கள். இவர்கள் நம்பிக்கையோடு குடும்பமும் பள்ளியும் அளிக்கும் ஆதரவும் சேரும்போது அனைத்தும் சாத்தியம் என்பதைப் பிரதிபலிப்பவர்களாகத் திகழ்கிறார்கள்.

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Delta Senior School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | apsn.org/schools/delta-senior-school |
| **முகவரி** | 3 Choa Chu Kang Grove, Singapore 688237 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | சுவா சூ காங் MRT, தெக் வாய் LRT, கியட் ஹோங் LRT |

| | |
|---|---|
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | பேருந்து நிறுத்தம் B44891, DSSக்கு அருகில்<br>பேருந்து சேவை 983<br>பேருந்து நிறுத்தம் B44899, DSSக்கு எதிரில்<br>பேருந்து சேவைகள் 983 மற்றும் 308<br>பேருந்து நிறுத்தம் B44151/9, ITE கல்லூரி மேற்கு, புக்கிட் பாத்தோக் தீயணைப்பு நிலையத்திற்கு மிக அருகில்<br>பேருந்து சேவைகள்: 985, 180. 187, 188 |
| **திட்ட இலக்கு** | சிறப்புத் தேவைகள் உள்ளவர்களைச் சமுதாயத்தின் துடிப்புமிக்க பங்களிப்பாளர்களாக்குவது; பங்காளர்கள் மற்றும் சமுதாயத்தின் திறன்களை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும்;அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்திற்கு வழிகாட்டுவதும் மற்றும் ஆதரிப்பதும் |
| **தொலை நோக்கு** | தன்னூக்கமளிக்கப்பட்ட வாழ்க்கைக்கு அனைவரையும் உள்ளடக்கிய ஈடுபாடுமிக்க சமுதாயம் |
| **விழுமியங்கள்** | மதிப்பு, பொறுப்புணர்வு, மீளுந்தன்மை, நேர்மை |
| **குறிக்கோள்** | என்னால் இயன்றவரை சிறந்து விளங்குவேன்; என்னால் முடியும்; அதுவே என் விருப்பம். நிச்சயம் செய்து முடிப்பேன். |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | **கலைகள்**<br>நடனம், தொழில்நுட்ப மன்றம், தாளவாத்தியம், சிங்க நடனம், கற்பனைக் கலைகள், மனமகிழ் மன்றம்<br><br>**விளையாட்டுக்கள்**<br>காற்பந்து, பவுலிங், தரைப்பந்து, நீச்சல், கூடைப்பந்து, பூப்பந்து, மேசைப்பந்து |
| **முக்கியத் திட்டங்கள்** | • கல்வித் திட்டங்கள் எழுத்தறிவு, எண்ணறிவு, நற்குணமும் குடியியல் கல்வியும், உடற்கட்டும் ஆரோக்கியமும்<br>• சிங்கப்பூர் பணிசார் திறன் தகுதி (WSQ) பாடப்தொகுதி கொண்ட தொழில்முறைத் திட்டங்கள் நிலவனப்பு செயற்பாடுகள் (தோட்டக்கலை), சில்லறை வணிகச் செயற்பாடுகள், விடுதி தங்குமிடவசதி சேவைகள், உணவு சேவைகள் (சமையற்கலை, 'பேஸ்ட்ரி' மற்றும் 'பேக்கிங்', சேவை செயற்பாடுகள்)<br>• வேலைத் திறன்கள் பயிற்சி (லீட் திட்டம்) இது பொதுப்படையான வேலைத் திறன்களை வளர்த்து, வேலை செய்வதற்கு ஒட்டுமொத்தமாகத் தயார்நிலையில் இருக்க இது வடிவமைக்கப்பட்டுள்ளது.<br>• வாழ்க்கைத் திறன்கள் பயிற்சி (லீட் திட்டம்) சமுதாய வளங்களை நாடுவது, ஆரோக்கியமான ஓய்வுநேர நடவடிக்கைகளில் ஈடுபடுவது, மற்றவர்களுடன் கருத்துப்பரிமாறும்போது சமூகரீதியாக உகந்த நடத்தைகளை வெளிக்காட்டுவது சொந்தப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்திக் கொள்வதுதேவைப்படும்போது எங்கு எப்படி உதவி கேட்க வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வது போன்ற சுய வாழ்க்கைத் திறன்களை வளர்க்கிறது.<br>• கணினித்திறன்கள்சார் பயிற்சி (லீட் திட்டம்) வேலையிலும் வாழ்க்கையிலும் பல்வேறு வேலைகளின் செயல்திறனை எளிதாக்கத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் திறன்களை மேம்படுத்துகிறது.<br><br>(குறிப்பு: LEAD திட்டம், வேலை செய்யும் திறனைக் கொண்ட மாணவர்களுக்கு உரியது. அதாவது, WSQ தொழில்முறைத் திட்டங்களுள் ஒன்றில் சேர்வதற்கான குறைந்தபட்ச தகுதியைப் பெற்றிராதவர்கள் – இது தற்போது Tanglin School, Katong School சேர்ந்த மாணவர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது) |

## வேலை உலகைப் புரிந்துகொள்வது – KSஇல் வேலை அனுபவத் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும், Katong School (KS) -ஐ சேர்ந்த 13 வயதுடைய மாணவர்கள், தொழில்முறை உலகம் குறித்துத் புரிந்துகொள்ளப் பல்வேறு துறைகளைச் சேர்ந்த குறைந்தபட்ச ஒன்பது பணி இடங்களுக்குச் செல்கிறார்கள். அதனால்தான் என்னவோ இந்த மாணவர்கள் உயர்நிலை நான்கை அடைவதற்கு முன் வேலை அனுபவத் திட்டத்தில் ஈடுபடக்கூடிய நம்பிக்கையையும் தயார்நிலையையும் பெற்றிருக்கிறார்கள்.



பொட்டலத்தை ஊடுகதிர்ச் சோதனை செய்யப் பயிற்சி பெறுகின்றனர்

வேலை அனுபவத் திட்டத்தில் சேரும் ஒவ்வொரு பிள்ளையிடமும் ஆர்வத்தை ஏற்படுத்துவதோடு, தனிநபர்களின் ஆற்றல்களைப் புரிந்துகொண்டு ஒவ்வொரு பிள்ளையிடமும் ஆக்ககரமான வேலை நெறிகளை வளர்க்க KS தொழில்முறை கல்வித் துறை நிர்வாகப் பங்காளர்களுடன் இணைந்து செயற்படுகிறது.



வேலையில் ஈடுபட்டிருக்கும் தோட்டக் கலை நிபுணர்



எங்கள்
நீச்சல் பயிற்றுவிப்பாளர்,
நீச்சலில் மாணவர்கள் நம்பிக்கையை உருவாக்கிக் கொள்ள அவர்களுக்குப் பொறுமையாக உதவுகிறார்

## நீச்சல், ஒரு வாழ்க்கைத் திறன்

KSஐச் சேர்ந்த எந்தவொரு மாணவரிடமும் அவர்களின் உடற்கல்வித் திட்டம் பற்றிக் கேட்டால், அவர்கள் மிகவும் எதிர்பார்த்திருக்கும் நீச்சல் பாடங்களைப்பற்றிக் கூறுவதை நீங்கள் கட்டாயமாகக் கேட்பீர்கள். இந்தப் பயிற்சியின் மூலம், மாணவர்களின் நம்பிக்கை மேம்பட்டிருப்பதையும் சரியான நீச்சல் முறைகளையும் உத்திகளையும் கற்றுக்கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. மாணவர்கள் தண்ணீரில் நீந்துவதில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கை, நீச்சலிலுள்ள முன்னனுபவம் முறையான நீச்சல் திறன்கள் ஆகியவற்றின் அளவை வைத்து குழுக்களாகப் பிரிக்கப்படுகிறார்கள்.

KSஇல் உள்ள உடற்கல்வித் துறை, நீச்சல் மாணவர்களிடத்தே ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை ஊக்குவிக்கக்கூடிய ஒரு முக்கியமான வாழ்க்கைத்திறன் என்றும் பொழுதுபோக்கு நடவடிக்கை என்றும் திடமாக நம்புகிறது.

## சமநிலை வித்தையும் நெருப்பு வித்தையும் – KSஇல் பெரிதும் விரும்பப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்

KS-இன் சர்க்கஸ் கலைகள் இணைப்பாட நடவடிக்கை மிகத் தரமானது என்னும் நற்பெயரைப் பெற்றுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்களின் கூர்மையான பார்வையின்கீழும் படைப்பாக்கச் சிந்தனையாலும் இந்த இணைப்பாட நடவடிக்கையிலுள்ள மாணவர்கள் பல்வேறு பொது நிகழ்ச்சிகள், பட்டமளிப்பு, பரிசளிப்பு விழாக்களில் தங்கள் திறமையை வெளிக்காட்டப் பல வாய்ப்புக்களைப் பெற்றனர்.

'டைபலோ', தீப்பந்தத்தைச் சுழற்றுதல், தட்டுகளைச் சுழற்றுதல், 27 கிலோகிராம் எடையுள்ள (ரோலா-போலா என்னும் பெரிய உடற்பயிற்சிப் பந்தின்மீது உடலைச் சமநிலைப்படுத்தும் கலை, பொய்க்கால்கட்டைமீது நடத்தல் போன்ற வித்தைகளை மாணவர்கள் செய்து காட்டினர். மாணவர்கள் மிகத் தரமான முறையில் திறனை வெளிப்படுத்த அதிக முயற்சி கொண்டு பயிற்சி செய்தனர். 13 முதல் 16 வயது மாணவர்களால் பெரிதும் விரும்பப்படும் இந்த இணைப்பாட நடவடிக்கை அவர்களின் தனித்திறமைகளைக் குறித்துப் பெருமைப்பட வைக்கிறது, மேலும் அர்ப்பணிப்பு உணர்வை வளர்ப்பதோடு நம்பிக்கையையும் அதிகரிக்கிறது.




திகைப்பூட்டும் பொய்க்கால் கட்டையில் நடப்பவர்



தீப்பந்தத்தைச் சுழற்றும் கலையைக் கற்றுக்கொள்ள மாணவர் கடினமான பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.



சர்க்கஸ் கலைஞர்கள் அவர்களின் உடலைச் சமநிலைப்படுத்தும் திறனைக் காட்டுகின்றனர்

## நிலைமாற்றத்துக்குத் திட்டமிடுதல் – சரியான தயாரிப்பு சீரான நிலைமாற்றத்தை அனைவருக்கும் உறுதி செய்யும்

புதிய முகங்கள், புதிய வகுப்பறைகள் இவை புதிதாக உயர்நிலைத் திட்டத்தில் சேரும் பிள்ளைக்கு அச்சுறுத்தும் அனுபவமாக இருக்கலாம். இதனை மனத்திற்கொண்டு, KS-இல் இருக்கும் மனோதத்துவ நிபுணர்களின் உதவியுடன் உயர்நிலை ஒன்றுக்குச் சீராக நிலைமாறுவதை உறுதிசெய்கிறது.

இவர்கள் பெற்றோர் மற்றும் பிள்ளையின் தேவைகளையும் பிரச்சினைகளையும் புரிந்துகொண்டு, அவர்களது பிள்ளை புதிய பள்ளி வாழ்க்கைக்குள் எளிதாகச் செல்ல உதவுவதற்கான வழிமுறைகளைக் கண்டறிகிறார்கள். உயர்நிலைப் பள்ளி வாழ்க்கை பற்றிய கண்ணோட்டத்தை அளிக்க உளவியல் நிபுணர்கள் தொடக்கநிலை ஆறாம் நிலை ஆசிரியர்களுடன் சேர்த்து இரண்டுநாள் அறிமுகத் திட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்கின்றனர்.



உயர்நிலை ஒன்றுக்கான அறிமுகத் திட்டம்

மிக முக்கியமாக, பிள்ளை உயர்நிலைப் பள்ளிக்கு நிலைமாறுவதில் பெற்றோர் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். பெற்றோரை அவர்களின் பிள்ளைகளின் கற்றல் பயணத்தின் அடுத்த நிலைக்குத் தயார் செய்ய வீட்டில் அவர்களின் குழந்தைகளிடம் பயன்படுத்தக்கூடிய சமூகநிலைக் கதைகள் அடங்கிய புத்தகங்களை அளித்துப் பெற்றோருக்குத் தன்னால் முடிந்தவரை KS சிறப்பாக ஆதரவளிக்கிறது.

## KSஇல் இரண்டு தேவைகளைப் பூர்த்தி செய்யும் விளையாட்டு மைதானம்

KS மகிழ்ச்சி தரும் இரண்டு தேவைகளைப் பூர்த்தி செய்யும் விளையாட்டு மைதானத்தைக் கொண்டுள்ளது. இது இளம் தொடக்கப் பள்ளி மாணவர்களை குறிப்பாக, இடைவேளையின்போது முழுவதும் ஈடுபாட்டுடன் வைத்திருக்கும். இந்த இடம் இளம் மாணவர்கள் ஒன்றாக இணைந்து விளையாட, தனது முறை வரும் வரை காத்திருந்து விளையாட மற்றும் ஒருவர் மீது ஒருவர் அக்கறை காட்ட கற்றுக்கொள்வதற்காக விளையாட்டுப் பகுதியை அளிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. ஆக்கப்பூர்வமான விளையாட்டு, சமூக உரையாடல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையிலும், மாணவர்கள் நிலைத்திறனை உருவாக்கிக் கொள்ள உதவவும், அவர்களின் தசை இயக்க திறன்களில் நிலைத்திறனையும் சமநிலையையும் உருவாக்க மாணவர்களுக்கு உதவுவதற்காகவும் உபகரணங்கள் குறிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அங்கு ஓடுதளம், சரிவான வளையும் ஆர்ம் ஹாங் மற்றும் சிட் அப் நிலையம் ஆகியவை உள்ளன.



மாணவர்கள் சந்திப்பு மையமாகவும் கலந்துரையாடல் பகுதியாகவும் இந்தப் பகுதியைப் பயன்படுத்துவார்கள்.

எங்களின் மகிழ்ச்சியான மாணவர்களின் உற்சாகவொலி அங்கிருந்து தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கும்.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Aidil Bin Amran



KSஇன் முன்னாள் மாணவரான Aidil Bin Amran, தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் வெற்றிகரமான எதிர்காலத்தை உருவாக்கும் இலட்சியத்தைக் கொண்டுள்ள 24 வயது ஆடவர்.

KSஇலிருந்து பட்டம் பெற்றதும், Aidil 'தி காப்பி பீன்' மற்றும் 'டீ லீஃபில்' மூன்று ஆண்டுகளுக்கு பா'ரிஸ்டாவாக வேலை பார்த்தார். அதன்பிறகு 'ஃபோர்க்லிஃப்ட்' ஓட்டுநராக தளவாடத் துறைக்கு வந்தார். தொடர்ந்து கற்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கும் Aidil பாரந்தூக்கி ஓட்டுநர்களுக்கான பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டார். அவர் தமது நிறுவனத்தில் மூன்று முதல் நான்கு பாரந்தூக்கி ஓட்டுநர்களைக் கொண்ட ஒரு குழுவிற்குத் தலைவராக பதவி உயர்வு பெற்றார்.

இவருக்குத் தற்போது திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளது, இவர் ஏப்ரல் 2018இல் திருமணம் செய்யத் திட்டமிட்டுள்ளார். Aidil தமக்கும் தமது மனைவிக்கும் தம்மால் நல்லதொரு வீட்டை அமைத்துக் குடும்பத்தைத் தொடங்க முடியுமென்று எதிர்காலம் குறித்துத் தனக்கு இருக்கும் நம்பிக்கையைச் சற்றுத் தயக்கத்துடன் பகிர்ந்துகொண்டார். வேலையைப் பொறுத்தவரையில் அவர் தமது சொந்த உணவுக்கடையை ஒரு நாள் தொடங்க முடியும் என்று நம்பிக்கை கொண்டுள்ளார்.

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Katong School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | apsn.org.sg/schools/katong-school |
| **முகவரி** | 900, New Upper Changi Road<br>Singapore 467354 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | தான மேரா எம்.ஆர்.டி. |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | எண்கள் 2, 2A, 9, 9A, 14, 14A, 24, 31, 35, 45 |
| **தொலை நோக்கு** | அதிகாரமளிக்கப்பட்ட வாழ்க்கைக்கு ஈடுபாடுமிக்க அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயம் |
| **விழுமியங்கள்** | நேர்மை, ஈடுபாடு, மரியாதை, பொறுப்பு |
| **குறிக்கோள்** | நம்மால் சாதிக்க முடியும் |

| | |
|---|---|
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | **தொடக்கப் பள்ளி:**<br>விளையாட்டு மற்றும் வெளிப்புற நடவடிக்கைகள்:<br>• திடல்தட விளையாட்டுக்கள்<br>• நீச்சல்<br>• பொச்சே (Bocce)<br>• காற்பந்து<br>நிகழ்த்துகலைகள்<br>• ஆர்டிஸ்ட் இன்க்<br>• காட்சிக் கலைகள்<br>• ஓவியமும் கைவினையும்<br><br>**உயர்நிலை:**<br>விளையாட்டு மற்றும் வெளிப்புற நடவடிக்கைகள்:<br>• உருட்டு பந்து<br>• காற்பந்து<br>• திடல்தட விளையாட்டுக்கள்<br>• நீச்சல்<br>• சாரணர் இயக்கம்<br>நிகழ்த்துகலைகள்<br>• நடனம்/பாடகர் குழு<br>• சர்க்கஸ் கலைகள்<br>காட்சிக் கலைகள்<br>• டிஜிட்டல் கலை மற்றும் ரோபாட்டிக்ஸ்<br>• கலை மன்றம் |
| **முக்கியத் திட்டங்கள்** | • உயர்நிலை உடற்கல்வி - நீச்சல் என்பது உடற்கல்வி பாடங்களின் ஒரு பகுதியாகும். மாணவர்கள் தண்ணீரில் அவர்களுக்கு இருக்கும் நம்பிக்கையின் அளவு, நீச்சலில் முன்னனுபவம், நீச்சல் திறன்கள் ஆகியவற்றின் அடிப்படையில் குழுக்களாகப் பிரிக்கப்படுவார்கள்.<br>• சர்க்கஸ் கலைகள் மாணவர்களுக்குத் தங்களின் கடின உழைப்புக் குறித்துப் பெருமைப்படவும் அவர்களின் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது.<br>• வேலை அனுபவத் திட்டம் மாணவர்களை எதிர்கால வேலைக்கு தயார்ப்படுத்துகிறது. மாணவர்கள் ஒவ்வொரு வேலை இணைப்புத்திட்டத்தில் குறைந்தபட்சம் 10 அமர்வுகளில் பங்குபெறுவார்கள். |

# தொழில்நுட்ப அறிவுத்திறத்தை அளிக்கும் TANGLIN SCHOOL

Tanglin School-இல் (TS) அனைத்துப் பாடக்கலைத்திட்டக் களங்களிலும் தகவல்-தொடர்புத் தொழில்நுட்பத்தை (ICT) ஒருங்கிணைப்பது ஈடுபாடற்றுக் கற்பவர்களைத் துடிப்பான படைப்பாளிகளாக மாற்றுவதற்கு உதவுகிறது. உலகமயமாக்கப்பட்ட எதிர்கால மின்னிலக்க வேலை இடத்தில் பயன்முனைப்பாகப் பணியாளர்களாகவும் குடிமக்களாகவும் இருப்பதற்குத் தேவையான திறன்கள், அறிவு மற்றும் ஆக்கப்பூர்வமான இயற்பண்புகள் ஆகியவற்றைப் பெற்றிருப்பர்.

இங்கு, மாணவர்கள் கணினியின் இடைமுகப்பில் உட்பொதிக்கப்பட்டிருக்கும் (எ-டு: மின்னிலக்க-புத்தகம், அசைவு நிறுத்த அசைவூட்டுப் படக்காட்சி, ஐ-மூவீஸ்). செய்திகளைக் கண்டறிவதன் மூலமோ தகவல்களைக் குறிவிலக்கம் செய்வதன் மூலமோ கருத்துப்பரிமாறிக்கொள்கின்றனர். மாணவர்கள் தகவல்-தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி '3டி' மாதிரிகள், 'ரோபாட்டிக்ஸ்', மின்னிலக்க ஓவியக்கலை, ஆளில்லா வானூர்தித் தொழில்நுட்பம், மின்னிலக்கப் நிழற்படக் கலை போன்ற பலவகையான உடனிணைவுச் செயல்திட்டங்களை வடிவமைக்கவும், எழுதவும் திருத்தியமைக்கவும் வாய்ப்புகளைப் பெறுகிறார்கள்.

இந்தத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திட்டங்களுக்கு 2009-ஆம் ஆண்டிலும் 2015ஆம் ஆண்டிலும் ஆசிய சம்மேளனத்தின் அறிவுசார்ந்த இயலாமை மாநாடுகளின்போது ஜப்பான் யோகோஹமாவில் உள்ள சாய்ஸ பல்கலைக்கழகம் இருமுறை மதிப்புமிக்க ஸ்டார் ராஃப்ட் விருதுகளை வழங்கிக் கௌரவித்தது.



இளம் முப்பரிப்பாண வடிவமைப்பாளர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## 'தி ட்ரெஷர் ஸ்கேப்'

'குப்பையிலிருந்து புதையல்' என்பது 'டிரெஷர் ஸ்கேப்பின் கருப்பொளாகும். இங்கு மாணவர்களுக்குப் படைப்பாக்கமிக்க வகையில் தினசரி குப்பையை மதிப்புள்ள புதிய பொருள்களாக மாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. இந்த மறுபயனீட்டு மேம்பாட்டுத் திட்டம் பொறுப்புள்ள குடிமக்களை வளர்த்துச் சுற்றுச்சூழலிலுக்கு ஆக்கப்பூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

திட்டப்பணி சார்ந்த கற்றல் அணுகுமுறையின் கொள்கைகளைப் பின்பற்றி 'டிரஷர் ஸ்கேப்', தொழில்முறை கல்வித் திட்டங்களில் மாணவர்கள் பெற்ற பயிற்சிகளையும் திறன்களையும் அறிவையும் மனப்பாங்குகளையும் கொண்டு முன்பு பயன்படுத்திய அல்லது தேவையற்ற பொருள்களை புத்தாக்கமிக்க பொருள்களாக மாற்றுவதற்கு வழிவகுக்கிறது.



'டிரஷர் ஸ்கேப்பின்' ஒரு கலைப் படைப்பு

## ‘லெகோ’ சிகிச்சைத் திட்டம்

லெகோ’ சிகிச்சைத் திட்டம் ‘ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம்’ குறைபாடு உடைய மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்தித் தகுந்த சமூகக் கருத்துப்பரிமாற்றங்களில் அவர்களை ஈடுபடுபவர்காளாக இருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்கள் லெகோவைப் பயன்படுத்திக் கட்டட அமைப்புகளைக் கட்டி உருவாக்குவதோடு மனோதத்துவ நிபுணர்களுடனும் பேச்சு, மொழி சிகிச்சையாளருடனும் உடனிணைவு விளையாட்டு சிகிச்சை அமர்வுகளில் ஈடுபடுகிறார்கள். டாக்டர் டேனியல் பி. லெகோஃப் (யேல், 2000) அவர்களது கோட்பாட்டைத் தழுவி உருவாக்கப்பட்ட இந்த ‘லெகோ’ சிகிச்சைமுறை நடத்தை கணிப்புச் சிகிச்சை, சகமாணவர் போலச்செய்தல், நடைமுறை கருத்துப்பரிமாற்ற உத்திகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது ஆட்டிசம் உடைய பிள்ளையின் சமூகவியல் ஆற்றல்களை மேம்படுத்திச் சக மாணவர்களுடனான கருத்துப்பரிமாற்றத்தை நீடிக்கச் செய்கிறது.



‘லெகோ’ சிகிச்சைத் திட்டம்

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Hay Qing Hui

Hay Qing Hui 2013இலிருந்து TS-இல் வேலை செய்துவருகிறார். அவர் மேசைப்பந்து குழுவிற்குப் பயிற்சியளிப்பதோடு இலத்தீன் நடனத்தையும் இணைப்பாட நடவடிக்கையாக்க் கற்றுத்தருகிறார்.



ஆனால் Qing Hui-க்கு அனைத்தும் எளிதாகக் கிடைத்துவிடவில்லை. மாணவராக இருந்தபோது Qing Hui வழக்கமான பள்ளியிலிருந்து TSஇல் சேர்ந்தபோது தமது தன்மதிப்பு குறைந்துவிட்டதாக எண்ணித் தடுமாறினார். ஆயினும், TSஇல் கற்றுக்கொள்வதும் வளர்ச்சியடைவதும் அவருக்கு ஒரு குறிக்கோளைக் கொடுத்ததோடு விளையாட்டில் அவருக்கு இருந்த பேரார்வத்தையும் தூண்டியது. அவர் 2007இல் ஷாங்காயில் நடைபெற்ற சிறப்பு ஒலிம்பிக்ஸ் உலக கோடைக்கால விளையாட்டுப் போட்டியில் தடகளப் பிரிவில் சிங்கப்பூர் சார்பாகக் கலந்துகொண்டு, 4x400மீ. தொடரோட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றார். Qing Hui 2011இல் நடந்த சிறப்பு ஒலிம்பிக்ஸ் உலக கோடைக்கால விளையாட்டுப் போட்டியிலும் கலந்துகொண்டார். இதில் அவருடைய கூடைப்பந்து குழு நான்காம் இடத்தைப் பிடித்தது.

அவர் புதிய வாய்ப்புகளைக் கண்டு தாம் தனித்து இல்லை என்பதை உணர்ந்தார். அவர் நடனம் போன்ற மேலும் பல இணைப்பாட நடவடிக்கைகளில் துடிப்புடன் பங்கேற்றார். அவர் 2016-இல் நடைபெற்ற மக்காவ் அறிவுசார்ந்த இயலாமையைக் கொண்ட மக்களுக்கான கலை வளர்ச்சி கருத்தரங்கில் தமது நடனத் திறமையை வெளிக்காட்டினார்.

அவரிடம் தமது சக மாணவர்களுக்கு என்ன கூறி ஊக்கப்படுத்த விரும்புகிறார் என்று கேட்டதற்கு, அவர் “நம்மால் சிறந்த இடத்திற்கு வர முடியும் எனவே, முயற்சியைத் கைவிடாதீர்கள். உங்கள் ஆற்றல்களைத் தெரிந்துகொண்டு, அதை வளர்த்துக்கொள்ளுங்கள்., நீங்களும் வெற்றி பெறுவீர்கள்!”

# Tanglin School




TS படைப்பாக்கமிக்க கண்டுபிடிப்பாளர்கள்



கடல்நாகப் படகு பயணத்திற்குச் செல்லும் மாணவர்கள்



நாடக மன்றத்தில் மகிழ்ச்சியாக இருக்கும் மாணவர்கள்

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Tanglin School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | www.apsn.org.sg |
| **முகவரி** | 143, Alexandra Road, Singapore 159924 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | ரெட்ஹில் MRT நிலையம் |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | 51, 122, 139, 186, 970 |

| | |
|---|---|
| **திட்ட இலக்கு** | சிறப்புத் தேவைகள் உள்ளவர்களைச் சமுதாயத்தின் துடிப்புமிக்க பங்களிப்பாளர்களாக்குவது; பங்காளர்கள் மற்றும் சமுதாயத்தின் திறன்களை ஊக்குவிப்பதும் வளர்ப்பதும் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்திற்கு வழிகாட்டுவதும் ஆதரிப்பதும். |
| **தொலை நோக்கு** | நேர்மை, மீளுந்திறன், கடப்பாடு, மதிப்பு |
| **விழுமியங்கள்** | நேர்மை, மீளுந்திறன், கடப்பாடு, மதிப்பு நான் இயன்றவரை சிறப்பாகச் செயற்படுவேன். |
| **குறிக்கோள்** | நான் இயன்றவரை சிறப்பாகச் செயற்படுவேன். |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | **<u>நிகழ்த்து கலைகள்</u>**<br>• ‘அங்க்ளுங்’ குழு<br>• கலவை நடனம்<br>• நடனக்கலைகள் – லத்தீன் மற்றும் நாட்டிய மண்டப நடனங்கள்<br>• ‘ட்ரூப் ஷாக்’ தாளவாத்திய இசைக்குழு<br>• சீலாட்<br><br>**<u>காட்சிக் கலைகள்</u>**<br>• அலுமினியம் இணைவரிக்கொத்தும் கலை<br>• பாத்திக் ஓவியம்<br>• சிற்பக்கலை<br>• ஓவியக்கலை<br><br>**<u>விளையாட்டுக்கள்</u>**<br>• திடல்தடப் போட்டிகள்<br>• பூப்பந்து<br>• தரைப்பந்து<br>• காற்பந்து<br>• நீச்சல்<br>• மேசைப்பந்து<br><br>**<u>மன்றங்கள்</u>**<br>• நாடக மன்றம்<br>• நிகழ்ச்சி நிர்வாக மன்றம்<br>• புத்தாக்கத் தொழில்முனைப்பு மன்றம்<br>• பல்லூடக மன்றம் |
| **முக்கியத் திட்டங்கள்** | • பசுமையைத் தேர்ந்தெடுங்கள், பசுமையைச் சிந்தியுங்கள், பசுமையை வளர்த்திடுங்கள் (CTGG) என்பது பள்ளி அளவிலான திட்டம். இந்தத் திட்டத்தின்வழி மாணவரிடையே நடவடிக்கைகளின்மூலம் சுற்றுச்சூழல் மாற்றம் குறித்த விழிப்புணர்வை அதிகரித்துப் பொறுப்புமிக்க குடியுணர்வை ஏற்படுத்துவது. |

## கலை கலைக்காக மட்டுமல்ல

### GOS கலையார்வ முயற்சிகள்

வெறும் பாடல், நடனம், நாடகம், ஓவியங்கள் என்னும் கலைகளாக மட்டுமல்லாமல், Grace Orchard School (GOS) தனது மாணவர்களுக்குக் கலைகள் மூலம் அர்த்தமுள்ள வழிகளில் உணர்வுகளை வெளிப்படுத்தும் திறனையும் அளிக்கிறது. இதன் மூலம் மாணவர்கள் தங்களைத் தாங்களே சிறப்பாகப் புரிந்துகொள்வதோடு, அவர்கள் வாழும் சமுதாயத்தில் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபட ஆர்வம் கொள்கின்றனர்.



விளையாட்டுக்கள் மூலம் வேறுபாடின்மை

### ‘வேறுபாடு’ இல்லை

கலையார்வத் தேடல்கள் பலவேளைகளில் GOSஇன் சமுதாய ஈடுபாட்டு முயற்சிகளுக்கு உயிரூட்டுகிறது. ‘வேறுபாடு’ இல்லை இயக்கம் போன்ற முயற்சிகளின்வழி சிறப்புத் தேவைகளையுடையவர்களுக்கும் சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்குமிடையே உள்ள தடைகளைத் தகர்க்க விரும்புகிறது. இந்த எழுச்சியூட்டக்கூடிய முயற்சி பொதுமக்களுடன் சேர்ந்து கலைப்படைப்புகள் ஆக்கம் மூலமும் ராஃபிள்ஸ் கல்வி நிலையம், Methodist Girls’ School, Fairfield Methodist Primary School ஆகிய பள்ளி மாணவர்களுடன் இணைந்து தயாரிக்கப்டும் -நாடகத் தயாரிப்புகள்மூலமும் மக்களிடையே உள்ள ஒருமைபாட்டைக் கொண்டாடுகிறது.

மாணவர்கள் ஆண்டுதோறும் ஜுரோங் ஸ்ப்ரிங் சமுதாய மன்றத்தினருடன் மாபெரும் உடற்பயிற்சி நடவடிக்கைகளில் பங்கு கொள்வார்கள்.


கித்தாரில் வாசிக்கிறார்!


இதயபூர்வமான நடிப்பு

## வகுப்பறைக்கு அப்பாலும் அக்கறை

GOS மாணவர்களைப் பள்ளி நேரத்திற்குப் பிறகு நடைபெறும் சுவாரஸ்யமான, அர்த்தமுள்ள மாணவர் நலக் கவனிப்புத் திட்டத்தின் மூலம் மாணவர்களை ஈடுபடுத்த முயல்கிறது. பொதுநிலைப் பள்ளிகளுடனும் சமூகத் தொழில்முனைப்பு நிறுவனங்களுடனும் வெளிப்புற அமைப்புகளுடனும் சேர்ந்து நடந்தப்படும் இந்த வளமூட்டும் உடனிணைவு நடவடிக்கைகள் வகுப்பறைக்கு அப்பாலும் மாணவர் திறன்களை வளர்த்துத் தரமான அனுபவங்களை அளிக்கின்றன. இந்த நடவடிக்கைகளில் சில நிழற்படமெடுத்தல், பயிலரங்குகள், சைக்கிள் ஓட்டுதலும் ‘ஐகிடோ’வும் ஆகும். இளையர் மையமும் மாணவர்கள் தங்கள் நண்பர்களுடன் அர்த்தமுள்ள கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபட்டு அவர்கள் மற்றவர்களுடனான உறவுநிலையை வளர்க்கும் திறனையும் முடிவெடுக்கும் திறனையும் செம்மைப்படுத்திக் கொள்வதற்கு உகந்த பாதுகாப்பான இடமாகத் திகழ்கிறது.


அட்டைப்பலகை விளையாட்டுகளின்வழிப் பிணைப்பு


வெஸ்ட் கோஸ்ட் பூங்காவில் சைக்கிள் ஓட்டம்.

## வேலை செய்ய தயார்!

கோபி-ஓ!வில் புத்துணர்வூட்டும் ஒரு கோப்பை காபியைப் பெறுவதை அனைவரும் விரும்புவதுபோல். GOS மாணவர்களும் தொழில்முறைக் கல்வித் திட்டத்தின் மூலம் துடிப்புமிக்க வேலை உலகிற்குள் நுழைகின்றனர். கோபி-ஓ! என்பது GOS'க்குச் சொந்தமான பயிற்சிச் சிற்றுண்டிச் சாலை. இங்கு மாணவர்கள் உணவுத் தயாரித்தல் தொடர்பான திறன்களைப் பெறுகிறார்கள்.

தொழிலுக்குமுன் கல்வித் திட்டம் மாணவர்களின் ஆர்வங்களையும் விருப்பங்களையும் கருத்திற்கொண்டு அவர்களை வேலைக்கு தயார் செய்கிறது. இது மாணவர்கள் வேலை உலகம் தொடர்பான புதிய அறிவையும் திறன்களையும் கற்றுக்கொள்ளத் துணைபுரிகிறது. வேலைப் பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டுதலுடன் பல்வேறு தொழில்துறைகள் சமுதாயத்தளங்கள் ஆகியவற்றின்மூலம் மாணவர்கள் நடைமுறைசார்ந்த வேலைச் சூழல்களையும் அனுபவங்களையும் பெறுகிறார்கள்.

உணவு தயாரிக்கும் 'கோபி-ஓ'






குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் உதவியாசிரியர் பயிற்சியளிக்கிறார்



சைக்கிள் சக்கரத்தைச் செப்பனிடுதல்

## GOS சுவைத்தகவல்கள்

- GOS ஒரு பேழையின் வடிவைக் கொண்டுள்ளது. இது பாதுகாப்பின் சின்னம்.
- பள்ளிச் சின்னம் பறக்கும் சிறகுகள் என்று மிகச் சரியாக அழைக்கப்படுகிறது, இது GOS மாணவர்கள் எப்படிக் கழுகைப் போல் சிறகு விரித்துப் பறப்பார்கள் என்பதை நினைவுப்படுத்துகிறது.



## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Noor Hassidah Binti Jamaludin

பழகுவதற்கு இனிமையாகவும், அன்பாகவும், ஆக்கப்பூர்வ ஆற்றல் நிறைந்தவராகவும் Noor Hassidah தமது மாணவர்களுடன் வலுவான நல்லுறவைக் கொண்டிருப்பதோடு பயன்மிக்க வகையிலும் சீரிய முறையிலும் தனி மாணவர்க்கும் சிறு குழு முறையிலும் வகுப்பறையில் கற்பிக்கிறார். அவர் அர்ப்பணிப்பு உணர்வுள்ள ஆசிரியர் மட்டுமல்ல GOSஇல் உள்ள மாணவர்களுக்கு மிகச்சிறந்த முன்மாதிரியும்கூட. ஏனெனில், அவரும் GOS முன்னாள் மாணவர்களுள் ஒருவராவார். Hassidah 2012இல் GOSஇலிருந்து பட்டம் பெற்றார். அவர் அங்கு மாணவியாக இருந்தபோது, அவருக்குப் பல்வேறு தொழிற்கல்வித் துறைகளில் அனுபவம் பெற வாய்ப்பளிக்கப்பட்டது. அவர் உதவியாசிரியராகவும், உதவி எழுத்தராகவும் 'பேக்கிங்' பயிற்சியாளராகவும் போன்ற பல வேலை அனுபவங்களைத் தமது வேலை இணைப்புத்திட்டங்களில் பெற்றார். இந்த அனுபவங்கள் அவர் தமது ஆர்வங்களை வளர்த்துக்கொள்ளவும் ஆற்றல்களைப் புரிந்துகொள்ளவும் உதவின. இன்று Hassidah GOSஇன் ஆசிரியராகப் பெருமையுடன் பணிபுரிகிறார். GOSஇல் கற்றுக்கொடுப்பது அவருக்குப் பழைய நினைவுகளைக் கொண்டுவந்துள்ளது. அவர் தமது மாணவர்கள் விடாமுயற்சியுடன், கடினமாக உழைத்தால் அவர்களின் கனவுகளை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று நம்புகிறார்.



தனிச்சிறப்பு வாய்ந்த சாதனை விருதை வென்ற Hassidah





Hassidah சிறுக்குழுவாக மாணவர்களுக்கு கற்பித்த போதும் பயணப்பாடங்களின் போதும்.

*"உங்கள் மீது நம்பிக்கை கொள்ளும்போது உங்களால் உங்கள் கனவுகளை நனவாக்க முடியும்."*

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | Grace Orchard School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | go.edu.sg |
| திட்ட இலக்கு | முக்கியத்துவம் கருதி வடிவமைக்கப்படும் சிறப்புமிக்க வாழ்க்கைகள் |
| தொலை நோக்கு | விழுமியங்களில் வேரூன்றியிருப்பது; வாழ்க்கைக்குத் தயாராக இருப்பது; மாற்றத்தை ஏற்படுத்தத் தன்னூக்கம் பெற்றது. |

<table>
<tr><td>குறிக்கோள்</td><td colspan="4">அன்பு, நேர்மை, விடாமுயற்சி, பொறுப்புணர்வு, மதிப்பு</td></tr>
<tr><td>முகவரி</td><td colspan="4">6A Jurong West St. 52, Singapore 649297</td></tr>
<tr><td>அருகிலுள்ள MRT நிலையம்(கள்)</td><td colspan="4">லேக்சைட் MRT (EW26) – வெளியேறு பாதை வழியாக வெளியேறி 7 நிமிடங்கள் நடக்கும் தூரத்தில்</td></tr>
<tr><td>அருகிலுள்ள பேருந்து சேவைகள்</td><td colspan="4">ஜூரோங் வெஸ்ட் ஸ்திரீட் 52 வழியாகச் செல்லும் பேருந்து – பேருந்து 335<br>பேருந்து நிலையம் B28411இலிருந்து 1 நிமிடம் நடக்கும் தூரத்தில்</td></tr>
<tr><td>வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்</td><td>விளையாட்டுக்கள்<br>• தடகள விளையாட்டுக்கள்<br>• பூப்பந்து<br>• கூடைப்பந்து<br>• உருட்டுபந்து<br>• காற்பந்து<br>• நீச்சல்</td><td>நிகழ்த்துகலைகள்<br>• பாடகர் குழு<br>• நடனம்<br>• கைமணி இணை வாத்தியம்<br>• இசைக் குழு<br>• RECA (சர்க்கஸ் கலைகள்மூலம் உன்னதத்தைஅடைதல்) மன்றங்கள்</td><td>கூட்டுறைச் படைப்பு<br>• பல்லூடகம்<br>• காட்சிக் கலைகள்</td><td>சீருடைக் குழுக்கள்<br>• சிறுவர் படை<br>• சிறுமியர் படை</td></tr>
<tr><td>முக்கியத் திட்டங்கள்</td><td colspan="4">• RECA (சர்க்கஸ் கலை மூலம் உன்னதத்தை அடைதல்) டைபலோவைப் பயின்படுத்திப் பல வித்தைகளைச் செய்து காட்ட மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கிறது. முதல் MOE-NCSS SPED புத்தாக்க விருது 2007இல் RECAவிற்கு வழங்கப்பட்டது.<br><br>• எங்கள் கலைத் திட்டங்கள் நடனம், நாடகம், இசை, காட்சிக் கலைகள் ஆகியவற்றில் மாணவர்கள் அடிப்படைத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவுகின்றன. இவற்றின் மூலம் தத்தம் எண்ணங்களை அர்த்தமுள்ள வழிகளில் வெளிக்காட்ட இயலும்.<br><br>• நரம்பியல் அடிப்படையிலான உலகளாவிய கற்றல் வடிவமைப்பு (UDL) பணிச்சட்டத்தின் அடிப்படையில் எங்கள் பள்ளியின் அனைத்துக் கற்றல் கற்பித்தல் திட்டங்களும் அமைக்கப்படுகின்றன. இது எங்களை வளர்ந்துவரும் நிபுணர்களிடமும் சுயமாகக் கற்பவர்களிடமும் கவனம் செலுத்த உதவுகிறது<br><br>• ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாட்டு (ASD) ஒருங்கிணைப்புத் திட்டம், அக்குறைபாடு கொண்ட மாணவர்கள் பயன்பெறும் வகையில் குழுநிலைக் கற்றலுக்கு வகை செய்து, MID வகுப்பறைச் சூழலுக்கு மாற்றுவதற்கு உதவுகிறது. இந்தத் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உடனிணைந்து செயற்படக்கூடிய பல துறை குழுவால் நிலைமாற்றத் திட்டம் ஒன்று அமலாக்கம் செய்யப்படும்.</td></tr>
</table>

## முத்திரைத் திட்டம்: நிகழ்த்துகலைகளும் காட்சிக் கலைகளும்



தாளவாத்திய கலைஞர்கள் கல்வி அமைச்சர் (பள்ளிகள்) மற்றும் போக்குவரத்து துறையின் இரண்டாம் அமைச்சர் திரு இங் சீ மெங்குடன் சேர்ந்து இசையமைக்கிறார்கள்.

இளைஞர்கள் கலைகள் மூலமாக மற்றவர்களின் வேறுபட்ட தனி விருப்பங்களையும் கண்ணோட்டங்களையும் ஆராய்ந்தறிகிறார்கள். இந்தக் கலைகளின் மூலம்தான் மக்கள் அவர்களின் எண்ணங்களுக்குக் குரல் கொடுக்க முடிகிறது இந்தக் கலைகளின் மூலமாகத்தான் நாம் நம்மைச் சுற்றியுள்ள அழகையும் உலகையும் மதித்துப் பாராட்ட முடிகிறது. இந்த நம்பிக்கைகளின் அடிப்படையில்தான் Metta School 2003இல் நிகழ்த்துகலைகளும் காட்சிக் கலைகளும் (PVA) எனும் திட்டத்தைத் தொடங்கியது. அன்று முதல், பல மாணவர்கள் இந்தத் திட்டத்தில் சேர்ந்திருக்கிறார்கள். இது பள்ளியின் முத்திரைத் திட்டமாகவும் இருக்கிறது. PVA திட்டம் மாணவர்களைக் கலைகளை ஆராயவும் அனுபவிக்கவும், கலைகளின்பால் திறன்களையும் ஆர்வத்தையும் வளர்த்துக்கொள்ளவும் வழிவகுக்கிறது. சீன இசைக்குழுவில் ஓர் இசைக்கருவியை வாசிப்பது ஆகட்டும் அல்லது மட்பாண்டம் உருவாக்கும் வகுப்புகளில் சிற்பங்களை உருவாக்குவது ஆகட்டும், ஒவ்வொரு மாணவரும் கலைகள் கொண்டு தங்கள் உணர்வுகளையும், எண்ணங்களையும் யோசனைகளை வெளிப்படுத்தக் கற்றுக்கொண்வதோடு தங்கள் படைப்பாக்கத்திலும் மகிழ்ச்சி கொள்கிறார்கள்.



சீன இசைக் குழு

## ஆரோக்கியமான வாழ்க்கைமுறை வாழ்க்கையை இன்பமாக்குகிறது




மேட்டா மாணவர்கள் சமுதாய விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்

Metta School (MS) ஈடுபாடுமிக்க உடற்கல்வித் திட்டங்களை வடிவமைப்பதன் மூலம் ஒவ்வொரு மாணவருக்கும் உடல்வலிமையையும் வேலையில் நீடித்திருப்பதற்கான மனோபலத்தையும் அளிக்கின்றது. இந்த மாணவர்கள் முதலுதவி செய்யும் திறன்களான தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புத் திறன்களையும் பெறுகிறார்கள் இந்த முழுமையான அணுகுமுறையின்மூலம் மாணவர்கள் வேலையில் நீடித்திருக்கவும் அவர்களின் கனவுகளை அடையவும் உடற்கல்வி எவ்வளவு அவசியம் என்பதைத் தெரிந்துகொள்ள மாணவர்களுக்கு உதவியுள்ளது.

பள்ளியில் கற்பிக்கப்படும் பாடங்களைத் தவிர்த்து, ஆசிரியர்கள் “சமுதாயத் தொடர்பு” (Community Connect) திட்டத்தின்மூலம் மாணவர்களுக்குச் சமுதாயத்துடன் ஒருங்கிணைவதற்கு வாய்ப்புக்களை உருவாக்கித் தருகின்றனர். இந்தத் திட்டத்தின்மூலம், பட்டம் பெறுவதற்குத் தயாராக இருக்கும் மாணவர்கள் விளையாட்டுகள், உடற்பயிற்சி ஆகிய நடவடிக்கைகள்மூலம் சமுதாயத்தோடு தொடர்புகொள்ள ஊக்குவிக்கப்படுகின்றனர். இது பள்ளியிலிருந்து சமுதாயத்தில் சுதந்திரமாக வாழ்வதற்கான நிலைமாற்றத்தை எளிதாக்குகிறது.

2016இல், ’சுகாதாரத்திற்கும் உடலுறுதிக்குமான உன்னத நிலையம் (MID)’ என்னும் திட்டப்பணிக்கான MOE-NCSS புத்தாக்க விருதை MS பெற்றது. இந்த விருது பள்ளியில் புத்தாக்கக் கலாசாரத்தை உருவாக்கிப் புத்தாக்கப் பயிற்சிகளை அமலாக்கம் செய்ததன்வழி மாணவர்களின் வளர்ச்சிக்காகப் பள்ளி மேற்கொண்ட முயற்சிகளை அங்கீகரிக்கிறது.

# வளாகத்துக்கும் வகுப்பறைகளைக்கும் அப்பால் கற்றல்




தொழில்முறைத் திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்கள் மியான்மார் – இளைஞர் முன்னேற்ற மையத்தில் உள்ள அனாதை இல்லத்திற்கு வருகைபுரிந்தனர்




ஹாங்காங் யான் சாய் மருத்துவமனை எண் 2 மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த நண்பர்களுடன் கடல்நாகம் மற்றும் சிங்க நடனக் குழுவினர்

மாணவர்கள் நடைமுறைசார்ந்த சூழல்களில் சிறப்பாகக் கற்கிறார்கள் என்பதை நன்கு அறிந்திருப்பாலும் அவர்களது அனுபவ எல்லைகளை விரிவுபடுத்த வாய்ப்பளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவும், MS ஒவ்வொரு மாணவருக்கும் வளாகத்துக்கும் வகுப்பறைகளுக்கும் அப்பாலும் கற்றல் பயணங்களை மேற்கொள்ள வாய்ப்பளிக்கிறது. மாணவர்களின் வகுப்பறைக்கும் அப்பாலும் நடைபெறும் கற்றலுக்குத் துணைபுரியும் திட்டங்களும் நடவடிக்கைகளும் பின்வருமாறு:

## பயணம் செய்யவும் சுதந்திரமாக வாழவும் கற்றுக்கொள்ளல்

ஒவ்வொரு மாணவரும் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தி ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வதற்கான திறன்களைப் பெற மாதந்தோறும் சமூகவியல் ஆற்றலை வளர்ப்பதற்கான சுற்றுலாக்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகின்றன. இந்தச் சுற்றுலாக்களின்போது அவர்கள் உணவுக்கடைகளில் உணவை வாங்குகிறார்கள். அதன்மூலம் அவர்கள் பணத்தைக் கையாளும் திறன்களையும் பெறுகிறார்கள்.



தலைமைத்துவப் பண்பு முகாம்களின்போது உயரத்தில் கயிற்றுப் பயிற்சிகள்

## தொழில்முறைப் பயிற்சித் திட்டங்கள்

வேலை அனுபவத்தின்மூலமும் பணி இணைப்புகள்மூலமும் பராமரிப்பு, உணவுத் தயாரிப்பு, பேக்கிங் ஆகியவற்றிற்கான ஒருங்கிணைக்கப்பட்ட பயிற்சிகளின்மூலமும் மாணவர்கள் தொழில்முறைப் பயிற்சிக்குத் தயார் செய்யப்படுகின்றனர். இந்தத் திட்டங்கள் 17 வயதில் தொழில்முறைப் பயிற்சித்திட்டங்களில் சேரும் மாணவர்களுக்கு நல்ல அடித்தளத்தை அளிக்கிறது.

## உள்ளூர் முகாம்களும் -செயல்வழி விழுமியங்களும் திட்டப்பணிகளும்

ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாடுடைய மாணவர்களுக்கும் (ASD) மிதமான அறிவுசார்ந்த இயலாமையையுடைய மாணவர்களுக்கும் (MID) வேறுபட்ட நோக்க அடிப்படையிலான முகாம்கள் ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவற்றுள் தேசியக் கல்வி முகாம்கள், தலைமைத்துவப் பண்பு முகாம்கள், சாகச முகாம்கள் ஆகியவை அடங்கும். தொழில்முறைத் திட்டங்களில் உள்ள மூத்த மாணவர்கள் செயல்வழி விழுமியத் திட்டப்பணிகளிலும் பங்கேற்கிறார்கள், இளைய மாணவர்கள் தன்னம்பிக்கை, சுயமாகச் செயலாற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய 'என்னுள் இருக்கும் தலைவர்' என்பதை ஆழமாக மனத்தில் பதியவைக்கும் திட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

NE முகாமின் போது மேற்கொண்ட நடவடிக்கைகள்



# Metta School

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Tan Chuan Sheng Jovi



Jovi 2011இல் 'பேக்கிங்கில்' ITE திறன்கள் சான்றளிப்புடன் MSஇலிருந்து பட்டம் பெற்றார். அவர் அங்குப் படிக்கும்போது, வேலைப் பயிற்சியைப் பெற மெரினா பே சேண்ட்ஸ் ஓட்டலில் சேர்ந்தார். பட்டம் பெற்ற பிறகும் அவர் அங்கு தொடர்ந்து வேலை செய்தார்.

இன்று, Jovi அவருடைய விடாமுயற்சி, உற்சாகம் மற்றும் உடன்பாடான மனோபாவம் ஆகியவற்றால் பலமுறை பாராட்டப்பட்டிருக்கிறார். 2017இல் அவருக்கு நீண்டகாலம் வேலை செய்ததற்கான விருது வழங்கப்பட்டது. அவருடைய வேலை வாழ்க்கைப் பற்றிக் கேட்டபோது, Jovi புன்னகைத்துக் கொண்டே வாடிக்கையாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் தேவைகளைத் தாம் பூர்த்திசெய்ய வேண்டிய சூழலில் நல்ல தருணங்களும் மோசமான தருணங்களும் ஏற்பட்டுள்ளன என்று குறிப்பிட்டார். ஆயினும், அவர் MSஇல் கற்றுக்கொண்ட நன்மதிப்புகளும் அக்கபூர்வ எண்ணங்களும் அவரை விடாமுயற்சியுடன் தொடர்ந்து முன்னேற உதவியது. Joviயின் பொழுதுபோக்கு நிழற்படம் எடுப்பது. ஓய்வு நேரத்தில் இயற்கைச்சூழலையும், இடங்களையும் மக்களையும் நிழற்படமெடுக்க அவருக்குப் பிடிக்கும். சில சமயம் திருமணம் மற்றும் விருந்து நிகழ்ச்சிகளில் நிழற்படம் எடுக்க அவர் அழைக்கப்படுகிறார். அவர் சிறுவனாக இருந்து இப்போது எப்படிச் சுதந்திரமாகச் செயற்படும் இளைஞராக மாறியிருக்கிறார் என்பதைப் பார்க்க மகிழ்ச்சியாகவும், ஆறுதலாகவும் இருக்கிறது.

### Lai Bo Cheng

Bo Cheng ஒருமுறை மாண்டரின் ஆர்ச்சர்ட் சிங்கப்பூரின் விருந்தினர் ஒருவரைப் பெருமளவில் கவர்ந்துவிட்டார். அந்த விருந்தினர் 'ட்ரிப் அட்வைஸர்' என்னும் பயண ஆலோசகப் இணையப்பக்கத்தில் 'ஒரு வாயிற்காவலாளியால் தம்முடைய நாள் மிகச் சிறப்பாக அமைந்தது' என்று பதிவு செய்திருந்தார். விருந்தினர்களை வரவேற்கும்போது தரமான சேவையை வழங்க வேண்டுமென்ற முயற்சியில், Bo Cheng விருந்தினர்களைப் புன்னகையுடன் வரவேற்று, "இந்த நாள் இனிய நாளாகட்டும்!" அல்லது "இன்றைய தினம் சிறப்பான நாளாக அமையட்டும்!" என்று தவறாமல் கூறிவிடுவார். வாயிற்காவலராக இருந்தவர் வாகனப்பாதை தூதராகப் பணியுயர்வு பெற்றார். அவருக்கு 2014இல் 'என்னேபிளிங்' முதலாளிகள் விருதுகள் விழாவில் 'முன்மாதிரி ஊழியருக்கான விருதும்' 2014இன் மே தின முன்மாதிரி பங்காளித்துவ விருதுகள் விழாவில் 'தனிநபர் விருதும்' வழங்கப்பட்டன.




Lai Bo Cheng (நடுவில் உள்ள இளைஞர்) மாண்டரின் ஆர்ச்சர்ட்டில் நடைபெற்ற மே தின பங்காளித்துவ விருதுகள் 2014 விழாவில் விருது பெறுகிறார்.

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | Metta School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | mettaschool.edu.sg |
| முகவரி | 30 Simei Street 1, Singapore 529949 |
| அருகிலுள்ள பேருந்து சேவைகள் | பேருந்து 9, 12, 38 & 20 |

| | |
|---|---|
| **திட்ட இலக்கு** | தரமிக்க முழுமையான கல்வியை வழங்குவதனமூலம் மாணவர்களை அவர்களின் முழுமையான ஆற்றலைப் பெறச் செய்வது. |
| **தொலை நோக்கு** | மெட்டா மாணவர் சுதந்திரமான*, அர்த்தமுள்ள# வாழ்க்கையை வாழ்வார்e<br><br>*சுதந்திரம் என்றால்<br>✓ அன்றாட வாழ்வில் சுய நிர்வகிப்பு<br>✓ ஆதாயமுள்ள வகையில் வேலையில் அமர்த்தப்படுவது<br>#அர்த்தமுள்ள என்றால்s<br>✓ வேலையிலும் பொழுதுபோக்கிலும் சமச்சீர்த்தன்மை<br>✓ ஆக்கபூர்வமான தன்மதிப்பு<br>✓ சமுதாயத்தில் ஈடுபாடு |
| **விழுமியங்கள்** | மீளுந்தன்மை, பொறுப்புணர்வு, திறந்த மனப்பான்மை, பரிவு, அறிவுடைமை |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | • பூப்பந்து<br>• உருட்டுபந்து<br>• சிங்க நடனம்<br>• சாரணர் இயக்கம்<br>• காற்பந்து<br>• நீச்சல்<br>• மேசைப்பந்து<br><br>• அங்குலாங்<br>• சீன இசைக்குழு<br>• சர்க்கஸ் கலை<br>• நடனம்<br>• தாளவாத்தியம்<br>• இசையும் உடலசைவும்<br>• யுக்கலேலி<br>• ஊஷு<br>• பேச்சு மற்றும் நாடகம்<br><br>• கலையும் கைவினையும்<br>• பாத்திக் ஓவியம்<br>• சீன எழுத்து வரைகலையும் ஓவியக்கலையும்<br>• மின்னிலக்கக் கலை<br>• மொசைக் கலை<br>• நிழற்படக்கலை<br>• மட்பாண்டக் கலை |
| **முக்கியத் திட்டங்கள்** | • நிகழ்த்துகலைகளும் காட்சிக் கலைகளும் மாணவர்களை அவர்களின் உணர்வுகளையும், எண்ணங்களையும் படைப்பாக்கத் திறனையும் வெளிக்காட்டவும், கலைகளைப் போற்றவும் வழிவகுக்கின்றன.<br>• சுகாதார உடலுறுதித் திட்டம் மாணவர்கள் உடலுறுதியைப் பெறுவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கைமுறையை வாழ வழிவகுக்கிறது; அவர்களது உணர்வுபூர்வ நலனை மேம்படுத்துகிறது; அவர்களை சமுதாயத்துடன் ஒருங்கிணைத்துப் பாதுகாப்புத் திறன்களைப் பெறவும் வழிசெய்கிறது.<br>• தொழில்முறைப்பயிற்சி – தொழில்நுட்பக் கல்வித் (ITE) திறன் சான்றிதழ் (ISC) பராமரிப்பு, உணவுத் தயாரிப்பு, பேக்கிங் பயிற்சிகள், விருந்தோம்பல் சேவைகளுக்கு அளிக்கப்படும் நிலைபெற்ற தரச் சான்றிதழாகும். |

## குழந்தையின் தேவைக்கேற்ப அமைவது



புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள ஆசிரியருடன் இணைந்து செயலாற்றுகின்றனர்.

மாணவர்களின் தேவைகளை மனதிற்கொண்டு, Fernvale Gardens School (FGS), தனது வகுப்பறைகளில் தேவையான அமைப்புகளையும் காட்சிசார்ந்த ஆதரவுச் சாதனங்களையும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியுள்ளது. இதன்வழி மாணவர்களால் அவர்களது சுற்றுப்புறச்சூழல்களைப் புரிந்துகொள்ளவும், புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளவும் சுதந்திரமாக வாழவும் இயல்கிறது. மேலும், ஆசிரியர்கள் தேவைக்கேற்பக் கற்பதற்குப் பயன்படுத்தும் பயிற்றுகருவிகளைத் தயாரிப்பதால் ஒவ்வொரு பிள்ளையும் கற்றும் வலுவான முறையில் வளர்ச்சியடைந்தும் பல வழிகளில் செயலாற்றியும் எண்ணங்களை வெளிப்படுத்தியும் சிந்திக்கிறார்.



மாணவர்கள் சுயமாக வேலை செய்கின்றனர்.



இடது வலது பற்றிய கருத்தாக்கத்தைக் கற்றுக்கொள்ளும் மாணவர்கள்



மாணவர்கள் ஒருவர் மற்றொருவரிடமிருந்து கற்றுக்கொள்கின்றனர்.



இண்டர்-SPED கிரியேட்டிவ் சேலஞ்சின் நிறைவுப் படைப்பு

## தொழில்முறைப்பயிற்சியும் பள்ளியிலிருந்து வேலையிட நிலைமாற்றத்துக்கான திட்டங்கள்

தொழில்முறைப் பயிற்சித் திட்டம் 13 முதல் 18 வயது வரையிலான மாணவர்களிடம் படிப்படியாகத் திறன்களை வளர்த்து பாதுகாப்பான ஆதரவான தேவைக்கேற்ற அல்லது பொதுவான வேலைக்கு ஏதுவான பள்ளிக்குப் பிந்திய கல்விப்பாதைகளுக்குத் தயார் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்கள் உணவும் பானமும் சில்லறை வணிக செயற்பாடு, விருந்தோம்பல் சேவைகள் ஆகிய தொழில்துறைகளுக்குத் தேவையான வேலை தயார்நிலைத் திறன்களையும் பணித்திறன்களையும் பெறுகிறார்கள். மாணவர்கள் பல்வேறு தொழில் துறைகளில் நடைமுறைசார்ந்த வேலை சூழல்களில் தாங்கள் கற்றுக்கொண்டவற்றைச் செயற்படுத்த வாய்ப்பளிக்கப்படுகிறது. FGS, மாணவர்கள் அவர்களின் இலக்குகளை அடைய உதவுவதற்காகப் பெற்றோருடனும் பராமரிப்பாளர்களுடனும் நெருக்கமாகச் செயற்படுவதில் நம்பிக்கை கொண்டுள்ளது. 2017இல் மாணவர்கள் அவர்களின் அறிவாற்றலையும் திறன்களையும் நன்கு பயன்படுத்தி 'இண்டர்-SPED கிரியேட்டிவ் சேலஞ்சில்' 2வது நிலையில் வந்தனர்.



இண்டெர்-SPED கிரியேட்டிவ் சேலஞ்சிற்கான படைப்புகளைக் காட்சிக்கு வைத்தல் – மலர் அலங்காரம், கோழிச் சோறு உணவு வகை, 'மாக்டெய்ல்' கைக்குட்டை ஒரிகாமி

பள்ளியிலிருந்து வேலையிட (School – to-work) (S2W) நிலைமாற்றத் திட்டம் வேலை செய்யும் ஆற்றலையுடைய மாணவர்களுக்குப் பட்டம் பெற்ற பிறகு தேவைக்கேற்ற பயிற்சி கல்விப்பாதைகளையும் வேலை ஆதரவு விருப்பத் தெரிவுகளையும் அளிக்கிறது. மாணவர்கள் நடைமுறைசார்ந்த தொழில் அமைப்புகளில் உகந்த வேலை அனுபவத்தைப் பெறவும் மாணவர்களுக்கு உதவும்வண்ணம் வேலை அனுபவத் திட்டங்களிலும் சேர்க்கப்படலாம்.



விளையாட்டு மன்றத்
திடல்தடப் பயிற்சி

## முழுமையான கல்வி

இணைப்பாட (CCA) திட்டங்கள் மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை மேம்படுத்தும்.

‘தி பெர்ஃபார்மன்ஸ் ஆர்ட்ஸ்’ குழு ஸ்பானிய நடனத்தில் சிறந்து விளங்குகிறது. இந்தக் குழு ‘தி பர்ப்பிள்’ அணிவகுப்பு, உச்சநீதிமன்ற தேசிய தின அனுசரிப்பு விழா, மற்றும் சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்ஸ் நிகழ்ச்சிகள் போன்ற வெளிப்புறப் பொது நிகழ்ச்சிகள் பலவற்றில் தனது திறனை வெளிக்காட்டியுள்ளது.



விளையாட்டு மன்றமும், சிங்கப்பூர் சிறப்பு ஒலிம்பிக்ஸ் சிங்கப்பூர் மாற்றுத்திறன் விளையாட்டு மன்றம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பதன்மூலம் மாணவர்களது உடல் உள்ளுரத்தையும் அனுபவங்களையும் பல்வேறு விளையாட்டுகளில்மூலம் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்கள் வில்வித்தை, பொக்சி, திடல்தட விளையாட்டுகள், காற்பந்து உருட்டுபந்து போன்ற பல்வேறு விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.



நகைச்சுவை நிகழ்ச்சி



உருட்டுபந்து

## பெற்றோர் ஆதரவுக் குழு (PSG)

பெற்றோர் ஆதரவுக் குழு (PSG) தனது சேவைகளை வழங்குவதன்வழியும் தனது நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொண்டும் மாணவர்களின் நலனையும் கற்றலையும் மேம்படுத்த நேரத்தை செலவிடுவதன்வழியும் பள்ளிக்குத் தம் பங்கை ஆற்றுகிறது. மேலும், அக்குழு உறுப்பினர்கள் பள்ளியின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான கருத்தையும் யோசனைகளையும் வழங்குகின்றனர்.



‘பர்ப்பிள்’ அணிவகுப்பு 2016இல்
பெற்றோர் ஆதரவுக் குழு உறுப்பினர்கள்




ஹாய் பின் இறால் வளர்ப்புப் பண்ணையில் பெற்றோர்-பிள்ளை பிணைப்பு நடவடிக்கை

*லூகஸ் கடந்த 3 ஆண்டுகளாக ஃபெர்ன்வேலில் 'மைன்ஸ்' பள்ளியில் படித்துவருகிறார். ஆசிரியர்கள், சமூக சேவகர்கள் சிகிச்சையாளர்க்கள் ஆகியோருடன் இணைந்து ஈடுபடுவதில் நாங்கள் நல்ல அனுபவங்களைப் பெற்றோம். இது மிக நெருக்கமான சமுதாயமாக இருப்பதால் அனைத்து விஷயங்களிலும் கவனம் செலுத்தப்பட்டுச் பிரச்சினைகளுக்கு வேகமாகத் தீர்வு காணப்படுகின்றன! என் மகன் இந்தப் பெரிய குடும்பத்தில் ஓர் உறுப்பினராக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்!*

*– Adel Ang*

*(11 வயது நிரம்பிய லூகஸ் ஸேவியர் யானின் தாயார்)*

*மைன்ஸ்' என்பதன் ஆதரவின்றி எங்களது பிள்ளையின் வளர்ச்சியில் நாங்கள் அதிக மனநிறைவையோ மகிழ்ச்சியையோ பெற்றிருக்கமுடியாது. என் பிள்ளையின் ஆற்றல்களில் நம்பிக்கை கொண்ட அர்ப்பணிப்பு உணர்வோடு, அயராது உழைத்த ஆசிரியர்களுக்கும் சிகிச்சையாளர்களுக்கும் நாங்கள் எங்களின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் என்னுடைய குழந்தைவளர்ப்பு பயணத்திலும் எனக்கு ஊக்கமளித்துள்ளனர்.*

*– Michelle Hee*

*(18 வயது நிரம்பிய Shawn Chia தாயார்,)*

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Nur Alfian Hakim Bin Halim

அவரது FGS கல்விப் பயணம் முழுவதும், Nur Alfian Hakim Bin Halim எப்போதும் கற்றுக்கொள்வதற்கு ஆர்வமாக இருப்பார். அவருடைய இந்த ஆக்ககரமான மனோபாவம் அவரை வெற்றிப்பாதையை நோக்கிச் செல்ல வழிவகுத்தது.



'பார்க் ராயலில்' வெளிவேலை இணைப்புத் திட்டத்தில் சேர்தல்

Hakimமின் தொழில்முறைப் பயிற்சியின் ஒரு பகுதியாக, அவருக்குப் பங்காளித்துவ தொழில்மனைகளுக்குச் சென்று வேலைச் சூழலைப் பற்றி கற்கவும், செயற்பாடுகளைப் பற்றி அறியவும் வாய்ப்புக் கிடைத்தது. வேலை அனுபவத்திட்டத்தின்போது அவரது சீரிய வேலையிட செயற்பாடு 'பார்க் ராயல்' சேவை விடுதிகளில் அவருக்குப் பகுதி நேர வேலையைப் பெற்றுத்தந்தது.



## கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | MINDS - Fernvale Gardens School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | minds.org.sg/FGS |
| முகவரி | 7 Fernvale Road, Singapore 797635 |
| அருகிலுள்ள MRT நிலையம்(கள்) | ஃபெர்ன்வேல் LRT (செங்காங் MRTஇலிருந்து வந்தால்) |
| அருகிலுள்ள பேருந்து சேவைகள் | 50, 163 (செங்காங் ஈஸ்ட் சாலை)<br>70, 50, 103, 854 (இயோ சு காங் சாலை- 5 நிமிட நடக்கும் தூரத்தில்) |
| திட்ட இலக்கு | துடிப்பான கற்கும் சூழலை வழங்குவதன்மூலம் மாணவர்களை சுதந்திரமாகச் செயற்பட்டுச் சமுதாயத்தோடு ஒருங்கிணைப்பதை ஊக்குவிப்பது |
| தொலை நோக்கு | ஒவ்வொரு தனிநபருக்கும் முக்கியத்துவமளிக்கும் உன்னதப் பள்ளி |
| விழுமியங்கள் | வலுவான பண்புநலன் இருதரப்பு மரியாதை நேர்மை<br>வாழ்நாள் முழுவதும் கற்றல்<br>உன்னதம் |
| வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள் | • சாரணர் இயக்கம்<br>• பிரௌனீஸ் மற்றும் சாரணியர் இயக்கம்<br>• விளையாட்டு மன்றம்<br>• FGS ‘பெர்ஃபார்மன்ஸ் ஆர்ட்ஸ்’ (நடனம்)<br>• கலை மன்றம்<br>• இணைப்பாடத்தொகுதி நடவடிக்கைகள் |
| முக்கியத் திட்டங்கள் | • காட்சிக் கலைகள் நிகழ்த்து கலைகள் ஆகியவை மாணவர்களுக்குக் கலைகளில் பல்வேறு அனுபவங்களை வழங்கி, அவர்கள் கலைகளைப் போற்றுவதற்கும் அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கவும் வழிவகுக்கின்றன |

## ஸ்டார்’ திட்டப்பணி



Lee Kong Chian Gardens School-இன் (LGS) ‘ஸ்டார்’ திட்டப்பணி என்பது புத்தாக்கக் கற்றல் அணுகுமுறை ஆகும். இது மாணவர்கள் அனுபவக்கற்றலில் ஈடுபடுவதற்கு கூடுதல் வாய்ப்பளிக்கிறது. இதன் தொடர்பில் மாணவர்கள் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளுக்கான (ADL) திறன்களைப் பெறுவதை மீள்வலியுறுத்தும் வண்ணம் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஆறு கற்றல் நிலையங்கள் உள்ளன. ஒவ்வொரு கற்றல் நிலையமும் வெவ்வேறு சூழல்களை ஆராய்ந்தறிவதற்கு வழவகுக்கிறது. இச்சூழல்கள் வீடு முதல் சமுதாயம் வரையுள்ள பல்வேறு சூழல்களைப் பிரதிபலிக்கின்றன. இவர்களது புத்தாக்கமிக்க கற்றல் பயிற்றுமுறைமைகளை அங்கீகரிக்கும்வகையில் 2014-இல் MOE – NCSS புத்தாக்க விருது வழங்கப்பட்டது.



ADL திறன்களைப் பயன்படுத்தும் மாணவர்கள்







## பள்ளியிலிருந்து வேலையிடத்துக்கும் (S2W) நிலைமாற்றத்துக்குமான திட்டம்

LGS வேலை செய்யும் திறமையுடைய மாணவர்களுக்குத் சமுதாயத்துடன் ஒன்றிணைவதற்கும் எதிர்காலத்தில் நிறைவான வாழ்க்கையை வாழ்வதற்கும் தேவையான திறன்களை வழங்க LGS தற்போது வேலைவாய்ப்புகளை வழங்கிவரும் பங்காளர்களுடனும் இனி வழங்கவிருக்கும் பங்காளர்களுடனும் நெருக்கமாகச் செயற்படுகிறது.

மாணவர்கள் தாங்கள் கற்ற தொழில்முறைத் திறன்களையும் அறிவையும் பயன்படுத்துவதற்கு ஏற்ற நடைமுறைசார்ந்த வாய்ப்புகளை வழங்குவதற்காகப் பல்வேறு தொழில்துறைப் பங்காளர்களுடன் வேலை இணைப்புத் திட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. LGS-ஐச் சுற்றியுள்ள வெற்றிடங்களும் சிற்றங்காடி, ’இக்கோ ஹேவன்’ சிறப்பு விடுதிப்பயிற்சி அறை ஆகியவற்றை உள்ளடக்குமாறு மறுவடிவமைப்பு செய்யப்பட்டுள்ளன.






## சூப்பர் ட்ரூப்பர்கள்

‘தி சூப்பர் ட்ரூப்பர்’ இசைக்குழு மாணவர்களுக்கு இசைவழியே தங்களுடைய ஆற்றல்களையும் திறமைகளையும் கண்டறியும் பேராவலைத் தூண்டுகினறனர்.

# சமுதாயத்தோடு தொடர்புகொள்ளல்

பல்வேறு நடவடிக்கைகளின்வழி Queenstown Secondary School-ஐச் சேர்ந்த மாணவர்களுடன் பங்காளித்துவ நிலையில் ஈடுபட LGS மாணவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. உதாரணத்திற்கு, இவ்விரண்டு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் சிற்றுண்டி வைக்கும் பெட்டிகளுக்கான கலைவடிவத்தை இணைந்து வடிவமைத்து அப்பெட்டிகளில் சிற்றுண்டி வைத்து அண்டை குடியிருப்புப் பேட்டைகளில் வசித்துவரும் குடியிருப்பாளர்களுக்கு வழங்கினார்கள்.



இரண்டு பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள் சிற்றுண்டிப் பெட்டிகளில் சிற்றுண்டிகளை அடுக்கி வைக்கிறார்கள்



LGS-ஐச் சேர்ந்த மாணவரிடமிருந்து சிற்றுண்டிப் பெட்டியைக் குடியிருப்பாளர் ஒருவர் பெறுகிறார்

## BIG L CAFE

பள்ளியிலேயே இயங்கும் BIG L CAFE என்னும் சிற்றுண்டிச் சாலை, நீட்டிக்கப்பட்ட தொழில்முறைப் பயிற்சித் திட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் உணவும் பானமும், உணவு சுகாதாரம் ஆகிய துறைகளில் தாங்கள் கற்றுக்கொண்ட திறன்களைப் பயன்படுத்த உதவும் முக்கியக் கருவியாகச் செயற்படுகிறது. மாணவர்கள் இந்தச் சிற்றுண்டிச் சாலையில் வேலை செய்து பெற்ற அனுபவம், இரண்டு நாள் 'எனேபிளிங் வில்லேஜில்' உள்ள சிற்றுண்டிச் சாலையில் வேலை செய்வதற்கு அவர்களைத் தயார்படுத்திக்கொள்ள உதவுகிறது. அவர்கள் உணவைத் தயாரித்துப் பரிமாறுவதும் காசாளராக செயற்படுவதும் போன்ற சிற்றுண்டிச்சாலை நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.



விருந்தினருக்கு உணவு பரிமாறும் மாணவர்



பண பதிவேட்டு இயந்திரத்தை நிர்வகிக்கக் கற்றுக்கொள்ளல்

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Teo You Quan



Teo You Quan, 2015இல் மெக்டொனால்ட்'ஸில் மூன்று மாதக்கால வேலை அனுபவத்திட்டத்தில் பங்கேற்றார். அவர் வேலை அனுபவத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்ததும், அவருக்கு ஜனவரி 2016இல் மெக்டொனால்ட்ஸில் வேலை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. You Quan தற்போது பணியாளராக வேலை செய்கிறார். அவருடைய பணிகளுள் மேசைகளைச் சுத்தம் செய்தல், தேவைப்படும் பொருள்களை மீண்டும் நிரப்ப ஆவன செய்தல் ஆகியவை அடங்கியிருக்கும்.



"எங்கள் பிள்ளையின் ஆசிரியர்கள் இல்லாவிடில் எங்கள் பிள்ளைக்கு எப்படிக் கற்றுத் தருவது என்பது எங்களுக்கே தெரிந்திருக்காது. அவனுடைய ஆசிரியர்களால் மட்டுமே அவனைப் புரிந்துகொள்ளமுடியும். சில நேரம் நாங்கள் பேசுவது அவனுக்குப் புரியாது, ஆனால் அவனுடைய ஆசிரியர்கள் பேசும்போது அதை அவன் கேட்டுக்கொள்கிறான். எனவே நாங்கள் அவனுடைய ஆசிரியர்களுக்கு நன்றி கூற விரும்புகிறோம். நம் பிள்ளை நன்கு வளர்ந்து சுயமாக செயற்படக்கூடிய திறன்களைப் பெற வேண்டுமென்று விரும்பினால் அவர்களைப் பள்ளி ஆசிரியர்கள்மீது நம்பிக்கைவைத்து அவர்களோடு இணைந்து செயற்பட வேண்டுமென்று பெற்றோர்களை ஊக்குவிப்பேன்

*ஒரு வீடியோ நேர்காணலில் Teo You Quan குவானின் பெற்றோர்கள்*

### Nur Farahnisha Bte Sahlan

கடின உழைப்பும், தன்முனைப்பும் உடைய Farahnisha கல்விசார்ந்த துறைகளிலும் கல்விசாராத துறைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு முன்மாதிரி மாணவி. சுயமாகக் கற்கக்கூடியவர். இவர் தம்முடைய அனைத்து வேலைகளையும் தானாகச் செய்து கொள்வதோடு தமது சக நண்பர்களுக்கு வழிகாட்டுவதில் ஆசிரியர்களுக்கு உதவினார். அவர் பொறுப்பான, முன்மாதிரியாக செயற்படும் தலைவரும்கூட. மாணவத் தலைவராக, Farahnisha தமது கடமைகளை நன்றாக நிறைவேற்றினார். குழுவுடன் இணைந்து செயற்படகூடியவரான இவர் தமது சக மாணவத் தலைவர்கள் அவர்களது கடமைகளை நிறைவேற்ற நினைவூட்டி அவர்களுக்குத் தேவைப்படும்போது உதவியும் வந்தார். Farahnisha சிறந்த விளையாட்டு வீராங்கனையுமாவார். அவர் சிங்கப்பூர் சிறப்பு ஒலிம்பிக்ஸ் தேசிய விளையாட்டுக்கள் 2017-இல் (பூப்பந்து) வெண்கலப் பதக்கம் வென்றார். அவருக்குக் கலைகளில் அதிக ஆர்வம் உள்ளது. அவர் பாடகர்குழு, நடனம், 'பெல்ஸ்' போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். தொடர்ந்து தமது தொழில்முறைப் பயிற்சித் திறன்களை மெக்டொனால்ட்'ஸ், செண்ட்ரல் லாண்ட்ரி, ராதா எக்ஸ்போர்ட்டில் ஆகிய தொழில் நிறுவனங்களில் 2015 முதல் 2017 வரை வேலை இணைப்புத்திட்டங்களின்வழி ஈடுபட்டு மேம்படுத்திக்கொண்டார் நடைமுறை வேலைப் பயிற்சி முன்னோட்டத் திட்டத்தின் (ஜாப் ஷேடோயிங்) ஒரு பகுதியாக Farahnisha 'பேன் பசிஃபிக்' ஹோட்டலிலும் பணியாற்றினார். அவர் அங்கு மிகவும் நன்றாகப் பணியாற்றியதால், அந்த ஹோட்டல் நிர்வாகம் அவருக்கு நான்கு மாதத்திற்கு வேலை அனுபவத்திட்டத்தை அளித்தது.



கல்வி அமைச்சர் (உயர்கல்வியும் திறன்களும்) மற்றும் இரண்டாம் பாதுகாப்பு அமைச்சர் திரு Ong Ye Kung அவர்களிடமிருந்து LKY-ESA விருதினை Farahnisha பெறுகிறார்



# கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | MINDS - Lee Kong Chian Gardens School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | minds.org.sg/LGS |
| முகவரி | 802 Margaret Drive, Singapore 149311 |
| அருகிலுள்ள MRT நிலையம்(கள்) | ரெட்ஹில் MRT |
| அருகிலுள்ள பேருந்து சேவைகள் | பேருந்துகள்: 132, 32, 111, 122 டேங்க்ளின் சாலை<br>பேருந்துகள்: 111, 970, 51, 139, 64,145 அலெக்ஸாண்ட்ரா சாலை வழியாக |
| திட்ட இலக்கு | துடிப்பான கற்கும் சூழலை வழங்குவதன்மூலம் மாணவர்களைச் சுதந்திரமாகச் செயற்பட்டு சமுதாயத்தோடு ஒருங்கிணைப்பதை ஊக்குவிப்பது |
| தொலை நோக்கு | ஒவ்வொரு தனிநபருக்கும் முக்கியத்துவமளிக்கும் உன்னதப் பள்ளி |
| விழுமியங்கள் | வலுவான பண்புநலன்<br>பரஸ்பர மரியாதை<br>நேர்மை<br>வாழ்நாள் முழுவதும் கற்றல்<br>உன்னதம் |
| வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள் | • பசுமை மன்றம்<br>• தகவல் தொடர்புத் தொழில்நுட்ப மன்றம்<br>• லிங்க்ஸ் சாரணர் இயக்கம்<br>• நிகழ்த்துகலைகள்<br>• விளையாட்டுக் குழு<br>• காட்சிக் கலைகள் |
| முக்கியத் திட்டங்கள் | • ‘சூப்பர் ட்ரூப்பர்’ நிகழ்த்துகலைக் குழு மாணவர்களைத் துடிப்புமிக்க, சமுதாயத்திற்குப் பங்களிக்கும் குடிமக்களாக வளர்வதற்கு அவர்களின் ஆற்றல்களையும் திறன்களையும் மேம்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கிறது.<br>• சுற்றுச்சூழல் நட்புத் திட்டம் (Eco Buddy) பணியாளர்கள், மாணவர்கள், பங்குதாரர்கள் பங்காளர்கள் ஆகியோரிடையே சுற்றுச்சூழலை மதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.<br>• பள்ளியிலிருந்து வேலையிடத் (S2W) திட்டம், வேலையைப் பெறவும், வேலையில் நிலைத்திருக்கவும் தேவையான திறன்களை மாணவர்களுக்கு அளித்து நடைமுறைசார்ந்த கற்றல் அனுபவங்களை வழங்குகிறது.<br>• நிலைமாற்றத் திட்டம் முழுமையான தனிநபர் நிலைமாற்றத் திட்டத்தை மேம்படுத்துவதன்மூலம் பள்ளி வாழ்க்கைக்குப் பிந்திய வாழ்க்கைக்குச் சீராக மாறுவதற்கு உதவுகிறது |

## அறிவை விரிவுபடுத்துதலும் ஆற்றலை உணர்தலும்

### PATHS- குடியியலும் நற்குணமும் கல்வித் திட்டம் (CCE)

MINDS – Towner Gardens School-இன் (TGS) சமூக உணர்வு கற்றல் திட்டமான PATHS (மாற்றி யோசிக்கும் உத்திகளை ஊக்குவித்தல்) மாணவர்களுக்குச் சைகைகளின்மூலமும் எளிய விதிமுறைகள் மூலமும் தங்கள் சொந்த உணர்வுகளை நிர்வகிக்கக் கற்றுக்கொடுப்பதில் கவனம் செலுத்துகிறது. மாணவர்கள் தங்கள் உணர்வுகளை அடையாளம் காணவும் வெளிப்படுத்தவும், பாராட்டுக்களைத் தெரிவிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள். மேலும் மதிப்பு, பொறுப்புணர்வு, பரிவு போன்ற விழுமியங்களும் CCE ஆசிரியர்களாலும் மாணவர் பிரதிநிதிகளாலும் பள்ளிக்கூட்டத்தின்போது வலியுறுத்தப்படுகின்றன. மாணவர்கள் கனிவன்பு மர அறிவிப்பு பலகை (Kindness Tree Board) 'மிஸ்டர்' 'மிஸ்' பொறுப்புணர்வு, 'மிஸ்டர்' 'மிஸ்' மதிப்பு போன்ற பாராட்டுகள் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றனர்.



ஃப்ரெட்டரிக் திறமையாக உணவுத் தட்டுக்களைக் கழுவித் துடைக்கிறார்



மாணவி பொறுப்புடன் இருப்பது பற்றி தான் புரிந்துகொண்டதைப் பகிர்ந்துகொள்கிறார்



அயின் நான்கு மணிநேர வேலைமாற்றத்தின்போது, அவர் தமது பணிகளை நிறைவேற்றக் கடினமாக உழைக்கிறார்

### தொழில்முறைப்பயிற்சி அனுபவத் திட்டம் (VoX)

தொழில்முறைப்பயிற்சி அனுபவத் திட்டம் என்பது 17 முதல் 18 வயது நிரம்பிய மாணவர்கள் தேவைகளுக்கேற்ப மாற்றம் செய்யப்பட்ட கல்வி, தொழில்முறைப் பயிற்சித் திட்டமாகும். இந்தத் திட்டம் மாணவர்கள் தங்கள் பள்ளி வாழ்க்கையின்போது நடைமுறை சார்ந்த வேலை அனுபவங்களைப் பெற வாய்ப்புகளை உருவாக்கித் தருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன்மூலம் மாணவர்கள் பொதுச் சந்தையில் வேலை செய்வதற்கான திறன்களைப் பெற்று, வேலையில் நிலைத்திருப்பார்கள். அவர்களின் கல்விசார்ந்த பாடத்திட்டம் தொழில்முறை இணைப்புகள் ஆகியவற்றுடன் சேர்த்து, மாணவரின் கற்றலையும் பயிற்சியையும் மேம்படுத்த அவர்களது மென்திறன் பயிற்சி, திட்டப்பணி வேலை ஆகியவையும் வலியுறுத்தப்படுகின்றன.




மாணவர்களின் ஆற்றல்கள், திறமைகள் பற்றிய குழுப்படைப்பு

## பேரார்வத்தை விதைத்தல், திறமைகளைக் கண்டறிதல்

### 'ஸ்பீச் டேக்ஸ் ஃப்லைட்'

'ஸ்பீச் டேக்ஸ் ஃப்லைட்' என்னும் திட்டம் மாணவர்கள் மேடைப்பேச்சில் நம்பிக்கையை வளர்த்துக்கொள்வதற்கான தளத்தை அமைத்துத்தருகிறது. ஆண்டின் இறுதியில், மாணவர்கள் 'டோஸ்ட்மாஸ்டர்' போட்டியில் ஒன்றில் ஆர்வத்துடன் பங்கேற்பார்கள். இதில் ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் ஒரு பிரதிநிதி அதே நிலையைச் சேர்ந்த அவர்களின் வகுப்புத் தோழருடன் போட்டியிடுவார். பள்ளி நிகழ்ச்சிகளின்போது சில மாணவர்கள் அவர்களின் ஆசிரியர்களுடன் சேர்ந்து நிகழ்ச்சியைப் படைக்க நெறியாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். TGS மாணவர்கள் பிரியாவிடைப் பேச்சாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, அவர்கள் MINDS பள்ளிகளின் பட்டமளிப்பு விழாவின்போது பள்ளி சார்பாக உரையாற்றினர்.



மூத்த மாணவர் ஒருவர் தன்னம்பிக்கையுடன் உரையாற்றுகிறார்

## இசையும் உடல் அசைவும் இணைப்பாட நடவடிக்கை (CCA)- 'கூல் கிட்ஸ்'

'கூல் கிட்ஸ்' என்னும் நடனக் குழு, TGS-இன் இசையும் உடல் அசைவும் இணைப்பாட நடவடிக்கையின் ஒரு பகுதியாகும். குழுவில் உள்ள மாணவர்கள், வெவ்வேறு இசை உணர்வு காரணமாகவும் உடல் ஒருங்கிணைப்பின் காரணமாகவும் நடன வழமைகளைத் திறம்படக் கற்பதில் சவால்களை எதிர்நோக்கியபோதும் அவர்களது விடாமுயற்சியாலும், குழுவிணர்வினாலும் வழக்கமான பயிற்சியாலும் அவற்றை எதிர்கொண்டு வெற்றி பெற்றுள்ளார்கள். இது சிங்கப்பூர் சிறப்பு ஒலிம்பிக்ஸ் தேசிய விளையாட்டுக்கள், சிங்கப்பூர் இளைஞர் விழா, 'பர்ப்பிள்' அணிவகுப்பு போன்ற நிகழ்வுகளின்போது அவர்கள் திறமையை வெளிக்காட்டியபோது கிடைத்த கைத்தட்டல்களில் தெரிகிறது,






ஒன்KM அங்காடியில் நடைபெற்ற SYF கொண்டாட்டங்களின் போது மாணவர்கள் 'பீட்பாக்ஸிங்'கில் தங்கள் திறமையை வெளிக்காட்டுகிறார்கள்

RSAF திறந்தவெளிக் கண்காட்சியின்போது தங்கள் திறமையை வெளிக்காட்டும் 'கூல்கிட்ஸ்'



ஒன்KM அங்காடியில் SYF

> *எனது குழந்தை நடனமாடுவதை மிகவும் விரும்புகிறாள். அவள் தனது திறமையைத் தன்னம்பிக்கையுடன் வெளிப்படுத்துவதற்கும் கூட பள்ளி அவளுக்கு வாய்ப்புகளை வழங்கியுள்ளது. அவள் சில புதிய நடன அசைவுகளைக் கற்றுக்கொள்ளும் போதெல்லாம், அவற்றை வீட்டில் பயிற்சி செய்கிறாள். நடனமாடுவது அவளை மகிழ்ச்சியடையச் செய்கிறது. அவள் நடனமாடும் போது எப்பொழுதும் புன்னகையுடன் இருக்கிறாள்.*
>
> *– ஒரு பெற்றோர் கூறியது*

## ஆராய்ந்தறிவதை ஊக்குவிப்பதும் கற்பதற்கான ஆவலைத் தூண்டுவதும்

**உடலுறுதியுடனும் ஆரோக்கியத்துடனும் இருத்தல் - – 1-3-5 உடலுறுதித் திட்டம்**

TGSஇல் சுகாதாரமாக வாழும் கலாசாரத்தை ஊக்குவிக்க 1-3-5 உடலுறுதித்திட்டம் உடற்கல்வி, உடல்நலக் கல்வி ஆகிய துறைகளால் 2017இல் அறிமுகம் செய்யப்பட்டது. இந்தத் திட்டம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் ஒன்றாகச் சேர்ந்து உடற்பயிற்சி செய்ய ஊக்குவிக்கிறது. இதில் ஒவ்வொரு நாளும், மூளைப் பயிற்சி, வலுப்படுத்தும் பயிற்சி கடினமான பயிற்சி போன்ற குறிப்பிட்ட ஒரு உடற்பயிற்சியில் கவனம் செலுத்தப்படுகிறது.



மாணவர்கள் முழங்காலை மடக்கிப் உடற்பயிற்சி செய்தல்

**விளையாட்டின்வழியே கணிதம்**

விளையாட்டு என்பது கற்பதற்கான இயல்பான அணுகுமுறை. இது மாணவர்கள் ஆராய்ந்தறிந்துகொள்ளவும், துப்பறியவும் மறுஉருவாக்கம் செய்யவும் புதியனவற்றைப் புரிந்துகொள்ளவும் ஒரு பயனுள்ள அணுகுமுறையாகும். கற்றலுக்கு ஆதரவளிக்க கூடிக்கற்றல் விளையாட்டுடன், புதிர்களும் சேர்க்கப்பட்டுள்ளன. பல மாணவர்களுக்குக் கணிதக் கோட்பாடுகளை கற்றுக்கொள்ளும் பணி என்பது கடினமானதாகவும், அச்சுறுத்தக்கூடியதாகவும் இருக்கும். எனவே, டவுனரில் உள்ள கணிதத்துறையும் தகவல்-தொடர்புத் தொழில்நுட்பத் (ICT) துறையும் கற்றல் கற்பித்தலை மிகவும் மகிழ்ச்சிமிக்கதாகவும் ஈடுபாடுமிக்கதாகவும் உருவாக்க விளையாட்டை எப்படிப் பயன்படுத்தலாம் என்பதைக் கண்டறிய பல வழிகளை ஆராய்ந்துள்ளன.



வடிவங்களைக் கண்டறிதல்



"எனக்கு எண் 3 கிடைத்துவிட்டது!"

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Charmaine Goh

Charmaine Goh செப்டம்பர் 2015இலிருந்து 'அஜிசென் ராமென் என்னும் கடையில் வேலை செய்துவருகிறார். தொடக்கத்தில் பானங்களை மட்டும் தயார் செய்யும் வேலையில் ஈடுபட்ட அவருக்குப் படிப்படியாக வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. Charmaine தற்போது ஐப்பேட்டைப் பயன்படுத்தி உணவுகளைத் தெரிவு செய்வதற்கும், பொருள்கள் குறித்த சலுகைகள் பற்றிப் பகிர்ந்துகொள்வதற்கும் வாடிக்கையாளர்களுக்கு வழிகாட்டுகிறார். மேலும் வாடிக்கையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து அவர்களுக்கு உணவும் பரிமாறுகிறார். அவருடைய மேலாளர், செல்வி. Sharon Ng, Charmaine பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்யும் திறனையும், உதவி செய்யும் எண்ணத்தையும் பாராட்டினார்.





### Wesley Tan

TGSஇலிருந்து பட்டம் பெற்ற பிறகு, Wesley Tan மார்ச் 2016இல் 'குயின்ஸ் காஃபி பிரைவேட் லிமிட்டெடில்' வேலைக்குச் சேர்வதற்கு முன் பொதுச் சந்தையில் சில வேலைகளைப்பற்றி ஆராய்ந்துகொண்டிருந்தார். அவருடைய உரிமையாளரும் சக பணியாளர்களும் அவரை நன்றாக நடத்துவதால் அவருக்கு வேலை செய்யப் பிடித்திருந்தது. அவர் நல்ல மனோபாவத்தைக் கொண்டிருப்பது அவசியம் என்பதையும், ஒருவர் தமக்குக் கிடைத்த வேலையைப் போற்றவேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளார். ஏனெனில் வேலை யாருக்கும் எளிதாகக் கிடைத்துவிடாது என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | MINDS - Towner Gardens School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | minds.org.sg/TGS |
| முகவரி | 1B Lengkong Lima, Singapore 417557 |
| அருகிலுள்ள MRT நிலையம்(கள்) | கேம்பங்கன் MRT நிலையம் |
| அருகிலுள்ள பேருந்து சேவைகள் | பேருந்து எண் 2, 7, 24, 25, 26, 28, 30, 33, 42, 67, 854 |

| | |
|---|---|
| **திட்ட இலக்கு** | துடிப்பான கற்கும் சூழலை வழங்குவதன்மூலம் மாணவர்களைச் சுதந்திரமாகச் செயற்பட்டுச் சமுதாயத்தோடு ஒருங்கிணைப்பதை ஊக்குவிப்பது |
| **தொலை நோக்கு** | ஒவ்வொரு தனிநபருக்கும் முக்கியத்துவமளிக்கும் உன்னதப் பள்ளி |
| **விழுமியங்கள்** | வலுவான பண்புநலன் பரஸ்பர மரியாதை<br>நேர்மை<br>வாழ்நாள் முழுவதும் கற்றல்<br>உன்னதம் |
| **தத்துவம்** | ஒவ்வொரிடமும் கற்றுக்கொள்ளும் திறனும் ஆற்றலும் உண்டு. அவற்றை வளர்த்துவிட வேண்டும். |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | • ஓவியக் கைவினை கலை மன்றம்<br>• தோட்டவேலை மன்றம்<br>• தகவல் தொடர்புத் தொழில்நுட்ப மன்றம்<br>• இசை மற்றும் அசைவு<br>• சாரணர் இயக்கம்<br>• விளையாட்டுக்கள்<br>• சமூக மனமகிழ் மன்றம் |
| **முக்கியத் திட்டங்கள்** | • PATHS-CCE என்பது மாணவர்களின் சமூக உணர்வு வளர்ச்சியையும் பண்பு உருவாக்கத்தையும் மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் திறன்சார்ந்த கற்றல் திட்டமாகும்.<br>• தொழில்முறை அனுபவத் (VoX) திட்டம் என்பது 17 வயது முதல் 18 வயதுடைய பொதுச்சந்தையில் வேலை செய்யும் ஆற்றலையுடைய மூத்த மாணவர்களுக்குத் தேவைக்கேற்ற மாற்றியமைக்கப்பட்ட கல்வி தொழில்முறைப் பயிற்சித் திட்டமாகும்.<br>• ஸ்பீச் டேக்ஸ் ஃப்லைட்' என்பது பல்வேறு வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் வாய்மொழிப் படைப்புகளை நிகழ்த்தும் பள்ளிசார்ந்த கருத்துப்பரிமாற்றத் திறன் திட்டமாகும்.<br>• கவின்கலை – இசையும் உடல் அசைவும் என்பது இசையிலும் உடல் அசைவிலும் திறமையுடையவர்களைத் தேடி அவர்களது திறன்களை மேலும் மெருகூட்டிப் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கவைக்கும் முத்திரைத் திட்டமாகும். |

## ‘PAPA’ படித்தல்

படித்தல் என்பது தனித்து நடைபெறும் செயலாக இருக்கவேண்டியதில்லை- பிள்ளைகளுடன் பெற்றோர்களும் சேர்ந்து ஈடுபடும்போது அது அதிகப் பயனளிக்கும். 2016இல் அறிமுகம் செய்யப்பட்ட மாணவரும் பெற்றோருக்குமான (PAPA) வாசிப்புத் திட்டம் பெற்றோர்களை வீட்டில் அவர்களின் பிள்ளைகளுடன் சேர்ந்து படிக்க ஊக்குவிக்கிறது. பிள்ளைகளுக்குப் பள்ளியில் படங்களைக் கொண்ட அடிப்படை பனுவல்களைப் படிக்கக் கற்றுத்தரப்பட்டாலும், பெற்றோர்கள் PAPA வாசிப்புத் திட்டத்தின்மூலம் வீட்டில் படிக்கும் பழக்கத்தை மீள்வலியுறுத்த வேண்டும். ஒரு பிள்ளை வளர்ச்சியடையும்போது பல்வேறு நிலைகளிலுள்ள புத்தகங்கள் பிள்ளையின் கல்வியறிவை மேம்படுத்துவதற்கு அறிமுகம் செய்யப்படும்.







## நீட்டிக்கப்பட்ட தொழில்முறைப் பயிற்சி

பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்கள் பெற்றோர் ஆகியோரிடமிருந்து கிடைக்கும் ஆதரவினால் வேலை உலகிற்குத் தயாராகும்போது ஏற்படும் அச்சவுணர்வு குறைகிறது. 16 முதல் 18 வயது நிரம்பிய மேனிலை மூத்த மாணவர்கள் தங்களது தொழில்முறைப் பயிற்சித்திறன்களை வேலை அனுபவம், இணைப்புத்திட்டங்களின்மூலம் மீள்வலியுறுத்திக்கொள்கிறார்கள். இந்த நடைமுறைசார்ந்த சூழல்கள் பள்ளியிலிருந்து பட்டம் பெற்று வரும் மாணவர்கள் வேலை செய்வதற்குத் தேவையான மென்திறன்களையும் உள்ளுரத்தையும் வளர்த்துக்கொள்ள உதவுகிறது

## ‘தாத்தா பாட்டியோடு உணவுண்டு அளவளாவுதல்’

முந்தைய தலைமுறையின் ஞானத்தையும் அனுபவத்தையும் கௌரவிப்பது WGSஇன் குடியியலும் நற்குணமும் கல்வித் திட்டத்தின் அடிப்படையாகும். 2016-இல் தொடங்கப்பட்ட, தாத்தா பாட்டிகளுக்கான உணவு என்னும் திட்டம் மூத்த நிலையிலுள்ள மாணவர்கள் மாதத்திற்கு ஒருமுறை அவர்களது தாத்தா பாட்டிகளுக்கு உணவு தயார் செய்து பரிமாறுவதோடு கலந்துரையாடும் தளமாக விளங்குகிறது. தற்போது இந்தத் திட்டத்தில் அக்கம்பக்கத்திலுள்ள மூத்த குடிமக்களையும் சேர்த்துக்கொள்ளும் வகையில் மாறியுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம், மாணவர்கள் மற்றவர்களுடன் கருத்துப்பரிமாற்றம் செய்வதற்கான தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவதோடு பிறரை மதிக்கவும் கற்றுக்கொள்கிறார்கள்.



முக்கிய விருந்தினர்களுக்குப் பரிமாறும் மாணவர்



தாத்தா பாட்டியோடு உணவு தயாரிக்கும் மாணவர்

## ஆழுணர் ஈடுபாட்டுத் திட்டம்



சமுகத் தொடர்பை அதிகரிக்க, WGSஇன் மேல்நிலை இளைய மாணவர்களும் மற்றும் Chongfu School-இன் ஐந்தாம் ஆறாம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களும் விளையாட்டுக்கள், ஓவியப் படைப்புகள் நடனம் போன்ற இணைப்பள்ளி நடவடிக்கைககளில் பள்ளித்தவணையின்போது பங்கேற்கிறார்கள்.

## சுவைத் தகவல்கள்



**பாறைச்சுவர்**

2016இல் இந்த சிறப்பு அம்சம் அமைக்கப்பெற்ற முதல் MINDS பள்ளியாக விளங்குகிறது. இது மேல் உடற்பகுதி, கை உரம், கண்-கை ஒருங்கிணைப்பு, ஆகியவற்றைப் பலப்படுத்துவதோடு மாணவர்களின் தன்னம்பிக்கையையும் வலுப்படுத்துகிறது.



**உடற்பயிற்சிக் கூடம்**

மாணவர்களின் உடற்பருமன் உடல் உள்ளுரம் குன்றிய பிரச்சினைகளைச் சமாளிக்க 2017இல் இது அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்வழி WGS மாணவர்களின் உடல் உள்ளுரத்தைப் பெருக்கவும், பள்ளியின் உடற்பருமன் விகிதத்தைக் குறைக்கவும் முடியுமென்று நம்புகிறது.



**நீர்வேளாண்மை**

WGS-இலுள்ள நீர்வேளாண்மை அமைப்பு மாணவர்களுக்கு அறிவியலைக் கற்கவும் பரிவு, பொறுப்புணர்வு, குழுவுணர்வு ஆகிய விழுமியங்களைக் கற்றுக்கொள்ளவதற்கு மற்றொரு தளமாக அமைகிறது.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Emeth Chua Jia Jun மற்றும் Shania Kate Monsalve

2017இல், Emeth Chua Jia Jun மற்றும் Shania Kate Monsalve இருவருடம் ஈஷூன் சமூக மருத்துவமனை (YCH) ஆதரவின் பேரில் வேலைவாய்ப்பைப் பெற்றனர். பள்ளியிலிருந்து வேலையிடத் திட்டத்தின் (S2W) ஒரு பகுதியாக, இருவரும் YCHஇல் இணைப்புத்திட்டத்தில் சேர்ந்தனர். SG என்னேபளின் ஆதரவைப் பெற்ற YCHஇல் தற்போது அவர்கள் பணியாளர்களாக வேலை செய்துவருகின்றனர். அவர்களின் பெற்றோர்கள் அவர்களது வேலை இணைப்புத்திட்டங்களுக்கு ஆதரவளித்தும், அவர்களது வேலைப் பயிற்றுவிப்பாளருடன் ஒருங்கிணைந்து செயற்பட்டும் சுயமாகப் பயணம் செய்யும் அவர்களுடைய திறன்களை மேலும் மேம்படுத்துவதில் முக்கியப் பங்குவகித்தனர்.



பாத்திரம் கழுவும் பிரிவில் வேலை செய்யும் எமெத்



நோயாளிகளின் தேநீர் இடைவேளைக்கான கோப்பைகளையும் தட்டுகளையும் தயார்செய்யும் ஷானியா

### Goh Jia Chun Shawn

Goh Jia Chun Shawn, W.E. சமூகவியல் நிறுவனம் அளித்த வேலை இணைப்புத்திட்டத்தில் குறிப்பிட்ட காலம் ஈடுபட்ட பிறகு அந்த நிறுவனத்திலேயே அவருக்கு வேலை கிடைத்தது. அவருடைய வேலைப் பயிற்றுவிப்பாளர் பள்ளி விடுமுறையின்போது வேலை அனுபவத்திட்டத்தைப் பெற உதவினார். அவர் அந்த நிறுவனத்தில் வேலைக்கு அமர்த்தப்படும் அளவிற்குச் சிறப்பாகச் செயற்பட்டார்.



W.E. Shawn நிறுவனத்தில் வேலை செய்யும் ஷான்

# கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | MINDS-Woodlands Gardens School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | minds.org.sg/WGS |
| **முகவரி** | 30 Woodlands Ring Road #01-01, Singapore 737883 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | அட்மைரால்டி MRT நிலையம் |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | 904, 912, 912A, 913, 964, 965, 969 |
| **திட்ட இலக்கு** | மாணவர்களைச் சுதந்திரமாகச் செயற்படவும் சமுதாயத்தோடு ஒருங்கிணைப்பதையும் ஊக்குவிக்கும் துடிப்பான கற்கும் சூழலை உருவாக்குவது |
| **தொலை நோக்கு** | ஒவ்வொரு தனிநபருக்கும் முக்கியத்துவமளிக்கும் உன்னதப் பள்ளி |
| **விழுமியங்கள்** | வலுவான பண்புநலன்<br>பரஸ்பர மரியாதை<br>நேர்மை<br>வாழ்நாள் முழுவதும் கற்றல்<br>உன்னதம் |
| **குறிக்கோள்** | சிறந்து விளங்குதல் |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | • விளையாட்டுக்கள்<br>• நிகழ்த்துகலைகள்<br>• சாரணர் இயக்கம்<br>• ஜடெக்<br>• பொழுதுபோக்கு மன்றம் (சிறப்பு நிலைக்கானவருக்கு) |
| **முக்கியத் திட்டங்கள்** | • PaPa வாசிப்புத் திட்டம் வீட்டில் பெற்றோர்களைப் பிள்ளைகளுடன் வாசிப்பதை ஊக்குவிக்கும் திட்டமாகும்.<br>• நீட்டிக்கப்பட்ட தொழில்முறைப் பயிற்சி (மூத்த நிலை மாணவர்களுக்கு) வேலை அனுபவ இணைப்புத்திட்டங்களின் மூலம் மூத்த மாணவர்களின் தொழில்முறைப் பயிற்சியை மீள்வலியுறுத்துகிறது.<br>• தாத்தா பாட்டிகளுக்கான உணவுத்திட்டம் தனித்துவம் வாய்ந்த நற்குணமும் குடியியல் கல்வி முயற்சியாகும். இது மாணவர்கள் சமுதாயத்திலுள்ள வயதானவர்களுக்குச் சேவையளிப்பதற்கும் கலந்துரையாடுவதற்கும் தயார்செய்ய ஊக்குவிக்கிறது.<br>• பயில்முறைத்திட்டம் (மேல் இளைய நிலை மாணவர்களுக்கானது) மாணவர்களைச் சொங்ஃபூ மாணவர்களுடன் கருத்துப்பரிமாறிக்கொள்ளவும் இணைந்து செயற்படவும் ஊக்குவிக்கிறது. |

# பள்ளித் திட்டங்களும் கல்வித் தடங்களும்

Eden School (ES), ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாடுடைய (ASD) பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் ஏற்ற தரமான கல்வியை வழங்குகிறது. நீண்ட காலம் சுதந்திரமாகச் செயற்பட அடிப்படை வாழ்க்கைத் திறன்கள் அவசியம் என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. செயல்முறைக் கல்வி, அன்றாட வாழ்க்கைத் திறன்கள், சமூகத் தொடர்பு, ஓய்வுநேரம், தொழில்முறைப் பயிற்சித் திறன்கள் ஆகியவை அர்ப்பணிப்பு உணர்வுள்ள பயிற்சி பெற்ற நிபுணர்களால் கற்றுத்தரப்படுகின்றன. கவனமாகக் கற்றுக்கொடுப்பதன்மூலமும், ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகளின்மூலமும் மாணவர்கள் வீட்டிலும் சமுதாயத்திலும் துடிப்புடனும் அர்த்தத்துடனும் பங்கேற்க உதவும் ஏற்ற திறன்களைப் பெறுவார்கள்.

ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட விருப்பங்கள், ஆர்வங்கள், தேவைகள் ஆற்றல்கள் ஆகியவை ஆவணப்படுத்தப்பட்ட விவரக்குறிப்புகள் இருக்கின்றன. இந்தத் தகவல்களைப் பயன்படுத்தித் தனிநபர் கல்வித் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. மேலும், மாணவர்களின் வேறுபட்ட கற்றல் தேவைகளுக்கு ஏற்ப வகுப்பு சூழல்களும் அமைக்கப்பட்டிருகின்றன.

பொதுவாக, இரண்டு தடங்களில் மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர்:

*சிறார் வயதுநிலை(7 – 12 வயது)*
அடிப்படை முக்கியத் திறன்களைக் கற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. மாணவர்களின் கற்றல் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டபின் அதன் அடிப்படையில் அவர்கள் குறிப்பிட்ட வகுப்புகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.

*பதின்ம வயதுநிலை (13 – 18 வயது)*
வேலை அல்லது அன்றாட நடவடிக்கை நிலையங்கள் ஆகிய மாற்றங்களுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்கான முக்கிய அடிப்படைத் திறன்களில் அவர்களுக்குத், தொழில்முறை, சமுதாய அமைப்புச் சூழல்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

வேலை செய்யும் திறனுள்ள மாணவர்கள் உணவுத் தயாரிப்பு, சுற்றுச்சூழலைச் சுத்தம் செய்தல், அலுவலகங்கள் ஆகிய சூழல்களில் வேலை செய்வதற்குத் தேவையான வன்திறன்களையும் மென்திறன்களையும் கற்றுக்கொள்கிறார்கள்.



ES-இல் உள்ள கல்வியாளர்கள் குழு



மாணவர்கள் உணவுத் தயாரிப்புப் பணியிடத்தில்

## EDEN SCHOOL
## திறன் வளர்ச்சித் திட்டம்

ZerYinn என்பவர் ES திறன் வளர்ச்சித் திட்டத்தின் மாணவராவார். மூன்று வயதில் ZerYinn என்பாருக்கு ASD இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் தம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் பேசுவதிலும் பழகுவதிலும் சவால்களைச் சந்தித்தார். ஆயினும், அவருடைய கலைப்படைப்புகளின்மூலம், ZerYinn தம்முடைய எண்ணங்களையும், வாழ்க்கை குறித்த துடிப்பான நோக்கையும் தடையின்றி வெளிப்படுத்தினார்.

ASD கொண்ட மாணவர்களுக்கு அவர்களின் எண்ணங்களையும் உணர்வுகளையும் தெரிவிப்பதற்குப் பல்வேறு வழிகள் தேவைப்படும் என்பதை அறிந்த ES, பலவகையான விளையாட்டுக்களையும் கலைகளையும் உள்ளடக்கிய திறன் வளர்ச்சித் திட்டத்தை மாணவர்களுக்கு வழங்கி உதவுகிறது.

கலை, திடல்தட விளையாட்டுக்கள், நீச்சல், உருட்டுபந்து, இசை ஆகியவற்றல் திறமைகளை வளர்ப்பதன்மூலம் மாணவர்களைப் பள்ளிக்கு அப்பால் உள்ள வாழ்க்கைக்குத் தயார் செய்யும் திறன்களையும் ஆக்கபூர்வமான மனோபாவங்களையும் வளர்க்கிறது.



அதிபர் சவாலின் ஓர் அங்கமாக ஏற்பாடு செய்யப்பட்ட சந்திரப் புத்தாண்டு 2018 திட்டப்பணியில் ZerYinnனின் கலைப்படைப்பு இஸ்தானாவால் தேர்ந்தெடுக்கப்பட்டு பீங்கான் தட்டுகளில் அச்சிடப்பட்டது.

ஆறு வயதாக இருக்கும்போது கலையில் ஆர்வத்தை வெளிப்படுத்தித் தமது திறமையை வளர்த்துக்கொள்ள ஆதரவைப் பெற்ற ZerYinn போலவே வேறு பல மாணவர்களுக்கும் அவர்களின் படைப்புகளைப் பள்ளியிலோ பொது இடங்களிலோ பெருமையுடன் காட்சிக்கு வைக்க வாய்ப்பளிக்கப்படுகிறது.



மலாக்காவில் 'அமேசிங் ரேஸ்'



பெர்த்தில் விலங்குகளுக்கு உணவளித்தல்

## ஸ்டெப்பிங் அவுட் – கற்றல் பயணங்கள் முயற்சி

ES-இல் முறையான பணிச்சட்ட அமைப்பின்மூலம், மாணவர்கள் உள்ளூர் இன்ப உலாக்களுக்கும் முகாம்களுக்கும் பல்வேறு கால அளவுகளைக் கொண்ட வெளிநாட்டு கற்றல் பயணங்களுக்கும் செல்கின்றனர். இவற்றின்வழி கிடைக்கும் அனுபவங்களினால், மாணவர்கள் சிறந்த கருத்துப்பரிமாற்றத்திறனையும், சமூகத் திறன்களையும் நெகிழ்வுத்தன்மையையும் பெறுகின்றனர்.

பினாங்கில் பாரம்பரிய பலகாரத்தைச் செய்ய கற்றுக்கொள்ளுதல் பெய்ஜிங்கில் உள்ள சீன பெருஞ்சுவரை ஏறுதல், பெர்த்தில் பழங்களை பறித்தல் போன்ற நடவடிக்கைகளின்மூலம் மாணவர்கள் மறக்கமுடியாத அனுபவங்களைப் பெறுகிறார்கள். கற்றல் பயணம் முடிந்த பிறகும் இத்தகைய சுற்றுலாக்கள்தான் சுவாரஸ்யமான உரையாடல்களின்போது பெரிதும் இடம்பெறுகின்றன.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Abundance Lim



Abundance ஒரு கலைப்படைப்பை உருவாக்குகிறார்

Abundance Lim தமக்கு 13 வயதாக இருந்தபோது 2012இல் ஈடனில் சேர்ந்தார். ஆரம்பத்தில் அவர் எதிர்பார்க்கப்பட்ட பள்ளி நடத்தையைப் பின்பற்றச் சிரமப்பட்டார். அதனால் அவர் அன்றாடம் தமது உணர்வுகளைக் கத்தியும், அலறியும் அழுதும் வெளிப்படுத்துவார். அவர் எரிச்சலடைந்தபோது தம்மைச் சுற்றியிருக்கும் பொருள்களை தூக்கி எறிந்து, அவருடைய ஆசிரியர்களையும் நண்பர்களையும் அடிப்பார்.

ஆயினும், அவருடைய ஆசிரியர்களின் வழிகாட்டுதலாலும் பள்ளியின் நிபுணக் குழுவினராலும் Abundance மெல்ல தம் உணர்வுகளை நிர்வகிப்பத்தில் முயன்று மாறினார். அவர் சுயகட்டுப்பாட்டுடன் இருப்பதற்கான திறனை வளர்த்துக்கொண்டார்.

இன்று Abundance உற்சாகம் நிறைந்த சிறுமி. அவர் தன்முனைப்புடைப்பவராகவும், உதவி தேவைப்படுபவர்களுக்கு எப்போதும் உதவுவதற்குத் தயாராகவும் இருக்கிறார். அவர் பள்ளியின் தொழில்முறைப் பயிற்சித் திட்டத்தில் உணவு தயாரிக்கும் திறன்களைக் கற்றுக்கொண்டிருக்கிறார்; அவர் தமக்குக் கொடுக்கப்படும் வேலைகளில் நன்கு கவனம் செலுத்தக்கூடியவராகவும் உள்ளூரம் உடையவராகவும் இருக்கிறார்.

Abundance-க்கு ஓவியம் வரைவதிலும் கைவினைப் பொருள்கள் செய்வதிலும் ஆர்வம் அதிகம். அவர் நுட்பமான கலைப்படைப்புகளை குறிப்பாக, உணவுப்பொருள்களிலும் அவருக்குப் பிடித்த பிற பொருள்களிலும் உருவாக்குவதில் அதிக ஆர்வத்தை வெளிக்காட்டுகிறார். அவர் வண்ணப்பேனாவையும் வண்ணச்சாயங்களையும் பயன்படுத்தி வரைந்த, "இரவு நேரத்தில் சாங்கி விமான நிலையம்'" என்று தலைப்பிலான கலைப்படைப்பு மிகச் சிறந்த கலைகள் சிங்கப்பூர் (VSA) SG50 போட்டியில் 2வது பரிசை அவருக்குப் பெற்றுத் தந்தது.

2017இல் லீ You Quan –முன்மாதிரியான மாணவர் விருதை வென்ற இரு மாணவர்களில் இவரும் ஒருவர். டிசம்பர் 2017இல் பட்டம் பெற்ற Abundance தற்போது வேலைத்திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையத்தில் (E2C) வேலைத்திறன் பயிற்சியைப் பெற்றுவருகிறார்

### நீ செய்யும் அனைத்தும்

நீ செய்யும் அனைத்தையும் நான் பாராட்டுகிறேன்
மிகவும் உதவியாகவும் உயர்ந்த எண்ணத்துடனும் நடந்துகொள்கிறாய்
தொடக்கத்திலிருந்தே எனக்கு ஆதரவாய் இருந்துவருகிறாய்
நான் கவலையாய் இருக்கும்போது நீ மரம் போல் உறுதியாய் இருந்தாய்.
நீ நிறையச் செய்துள்ளாய்; உனது இதயம் கனிவு நிறைந்தது
உனது அழகிய மனது பிறருக்கு உதவிசெய்ய நினைக்கிறது
உன்னுடைய தகுதிகள் அனைத்தும் ஒன்று சேரும்போது மிகவும் அரிதானவையாகின்றன
நீ தினமும் காலை புன்னகையுடனும் பரிவுடனும் எழுகிறாய்
நீ செய்யும் அனைத்தையும் நான் மதிக்கிறேன், பாராட்டுகிறேன்
நீ மிகவும் அற்புதமான நபர், நீ எப்போதும் ஆச்சரியப்படவைக்கிறாய்
உனக்கு எனது ஆழ்மனத்திலிருந்து நன்றிக் கூற விரும்புகிறேன்
பலரின் வாழ்வில் உனக்கு பெரிய இடம் உண்டு



ஆசிரியரின் உதவியுடனும் பெற்றோரும் பிள்ளையும் எண்ணப் பிரதிபலிப்பு செய்கின்றனர்

**Nor'ashikeen, Aqram மற்றும் Aqeel ஆகியோரின் பெற்றோர்**

இந்தக்கவிதை ESஇல் படிக்கும் இரண்டு பிள்ளைகளின் பெற்றோர் எழுதியது. அவர் தங்கள் பிள்ளைகளைப் பேணி வளர்த்த பள்ளிக்கு நன்றி கூறும் வகையில் இதனை எழுதினார்.

# கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Eden School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | edenschool.edu.sg |
| **முகவரி** | 101 Bukit Batok West Avenue 3 Singapore 659168 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | புகிட் பாதோக் LRT |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | 66, 157, 174, 174e, 178, 506 |
| **திட்ட இலக்கு** | ஆட்டிசம் உடைய பிள்ளைகளுக்கு ஏற்றதும் தரமிக்கதுமான கல்வியை வழங்குவதன்மூலம் அர்த்தத்தையும், கண்ணியத்தையும், சுதந்திரத்தையும் அளிப்பது. |
| **தொலை நோக்கு** | அனைவரும் விரும்பும் தொழில்முறைப் பள்ளியாக உருவாகி, ஒவ்வொரு மாணவரின் பணியாளரின் ஆற்றலையும் வாழ்க்கைத்தரத்தையும் மிகுதியாக்குவது |
| **விழுமியங்கள்** | பண்புநலன், ஆற்றல், கருணை, திட நம்பிக்கை, பங்களிப்பு |
| **குறிக்கோள்** | ஆற்றலின் உச்சம் அடையப்பெறுதல் |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | கலை, உருட்டு பந்து, கீபோர்ட் இசைக்கருவி, தாளவாத்தியம், வாசித்தல் மன்றம், உடலுறுதி மன்றம், உடற்பயிற்சிக்கூடம், யூக்கலேலி இசைக்கருவி, கைமணிகள், ஒலிப்புகள் |
| **முக்கியத் திட்டங்கள்** | நாங்கள் ஆட்டிசம் கற்றலுக்கு உகந்த சூழலை வழங்குவதோடு ஆதாரம் அடிப்படையிலான ஆட்டிசம் கற்பித்தலியலை அனைத்து நிலை மாணவர்களுக்கும் வழங்குகிறோம்.<br><br>ESஇல் பயிலும் மாணவர்களுக்கு உறுதியான வேலை பழக்கவழக்கங்கள் கற்றுத்தரப்படுகின்றன. மேலும் அவர்கள் அட்டவணை அமைத்தல், வேலை அமைப்புமுறை கண்பார்வைக்கான ஆதரவு போன்ற முக்கிய ஆட்டிசத்துக்கான உத்திகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முறைப்படுத்தபட்ட கற்றல் சூழல்களில் கற்கின்றனர்.<br><br>பள்ளி முழுவதுக்குமான "திட்டமிடு, தயார்படுத்து ஆதரவளி" என்னும் அணுகுமுறை, மாணவர்கள் அனைத்துப் பள்ளி, சமுதாய வெளிநாட்டு நடவடிக்கைகளில் அர்த்தமுள்ள வகையில் பங்கேற்பதை உறுதிசெய்கிறது.<br><br>வீட்டிலும் சமுதாயத்திலும் ஆட்டிசம் உத்திகளைப் பயன்படுத்துவதில் பெற்றோர்களின் ஈடுபாடு எங்கள் மாணவர்களின் வாழ்க்கை விளைவுகளை தரமான தாக்குவதில் முக்கியமாக இருக்கிறது. பெற்றோரின் முறையான ஈடுபாடும் பயிற்சியும் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்படுகிறது. |

PATHLIGHT SCHOOL
*Where lives are transformed*

# ஓவியர் வளர்ச்சித் திட்டம் (ADP)

## யாவரையும் உள்ளடக்குவதை ஆதரித்தல்; திறன்களைக் கொண்டாடுதல்

MOE-NCSS புத்தாக்க விருது பெற்ற ஓவியர் வளர்ச்சித் திட்டம் (ADP) மாணவர்களின் ஓவியத் திறமையை வெளிப்படுத்தி, அவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. நிபுணத்துவமிக்க ஓவியப் பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டுதலுடன், மாணவ ஓவியர்கள் ஓவியக் கண்காட்சிகளில் பங்கேற்று, விற்பனை செய்யப்படும் படைப்புகளுக்கான உரிமத் தொகைகளைப் பெற்றார்கள். இதன்வழி ஒருவரது திறமை நல்ல வேலை பழக்கங்களைக் கொண்டிருக்கும்போது அது கண்ணியமான வருமானத்திற்கு வழிவகுக்கும் என்பதை அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் உணர்த்த உதவுகிறது.



ஃபுலட்டன் ஹோட்டலில் "ஆட்டிசத்திற்கான கலை" கண்காட்சி




PS தெர்மோஸ் உடன் இணைந்து

முன்பு ADPஇல் படித்த Joshua Lim -க்கு ADP-இல் இருந்தது நல்ல வேலைப் பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளவும், உயர்கல்விக்குத் தயாராவதற்கான திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உதவியது. அவருடைய அம்மாவும் ADP மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தமது மகன் அதிக நம்பிக்கையுடனும் சுதந்திரமாகவும் இருப்பதற்கு உதவின என்று கூறுகிறார்.

# தகவல் தொழில்நுட்பமும் வடிவமைப்பும் அகாடமி (ITDA)

## எதிர்காலத்திற்குத் தேவையான திறன்களைக் கொண்ட மாணவர்களை மின்னிலக்க யுகத்திற்கு தயார்செய்கிறது

பாத்லைட் மாணவர்கள் அனைவருக்கும் அடிப்படையாகத் தகவல் தொழில்நுட்பப் பாடக்கலைத்திட்டம் இருக்கிறது. இதற்கான பாடங்கள் தொழில்துறைப் பயிற்றுவிப்பாளர்களால் கற்பிக்கப்படுகிறது. "பள்ளிக்குள் பள்ளி" என்கிற நிலையில் தகவல் தொழில்நுட்பமும் (IT) வடிவமைப்பும் அகாடமி (ITDA) ஆற்றல் மிகுந்த எதிர்காலத் தொழில்நுட்பத் தலைவர்களைக் கொண்ட அடுத்த தலைமுறைக் கற்றல் சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் பாடக்கலைத்திட்டம் பின்வரும் கற்றல் விளைவுகளையும் அனுபவங்களையும் உள்ளடக்கியுள்ளது:

| கற்றல் விளைவுகள் | 5 கற்றல் அனுபவங்கள் |
|---|---|
| 1. *மின்னிலக்கக் கல்வியறிவு – திறன்களில் ஆற்றல், தகவல்-தொடர்புத் தொழில்நுட்பச் செயல்முறைகளும் வழக்கங்களும்*<br>2. *படைப்பாக்கம் – பிரச்சினைக்குத் தீர்வு காணும் திறன்; படைப்பிற்கும் உருவாக்கத்திற்கும் தகவல் தொழில்நுட்பத்திறன்களையும் கலைநயப் புரிந்துணர்வைச் சேர்த்துப் பயன்படுத்தும் திறனைக் கொண்டிருப்பது*<br>3. *உற்பத்தித் திறன் – தகவல்-தொடர்புத் தொழில்நுட்பத் திறன்களை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் திறன்*<br>4. *தொடர்பிணைப்பு – மற்றவர்களுடன் கருத்துப்பரிமாற்றம் செய்யவும் உடனிணைந்து செயற்படவும்கூடிய திறன்* | குறிக்கோள்கள்:<br>• உளக்கற்பனைத் திறனையும், திட்டப்பணிக்கான திறன்களையும் மேம்படுத்தி அனைத்துக் களங்களிலும் கருவிகளைப் பயன்படுத்துவதில் புதுமையை உருவாக்கிக் கொள்வது<br>• வளர்ந்துவரும் தொழில்நுட்பக் கருத்துருக்களும் எதிர்காலத்திற்குத் தயாராக இருப்பதற்கு வேண்டிய கருவிகள்<br>1. ஹலோ தொழில்நுட்பம்<br>2. 'ஹேக் ஷேக்'<br>3. மின்னிலக்கப் ஊடகக் கூடம்<br>4. 'விளையாட்டு ஸோன்'<br>5. 'ஃபேப் லேப்' |

2014-இல் பள்ளியின் கற்பனைத்திறன் உருவாக்கத் திட்டத்திற்கு MOE-NCSS புத்தாக்க விருது வழங்கப்பட்டது. இது மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதில் ஆக்கபூர்வமான விளைவுகளை அடைந்ததற்காக வழங்கப்பட்டது. தகவல்-தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகளின்மூலம், மாணவர்கள் அவர்களின் படைப்பாக்கத்தையும் யோசனைகளையும் வெளிப்படுத்துவதற்கும் புதிய வழிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.



தகவல்-தொடர்புத் தொழில்நுட்பக் கருவிகளையும் லெகோ கல்வி வளங்களையும் பயன்படுத்திச் சொந்த பல்லூடகப் பணியை உருவாக்குவது

## “ப்ராஜெக்ட் ஒன்”

### மாணவர்களை முழுமையாக வளர்ச்சியடைய வைப்பது

2015-இல் தொடங்கப்பட்ட “ப்ராஜெக்ட் ஒன்” திட்டம் மாணவர்களின் முழுமையாக வளர்ச்சியை மேம்படுத்த மறக்கமுடியாத அனுபவங்களையும் சாதனைகளையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மாணவர்கள் வளம்நிறைந்த பாடத்திட்டத்தை அனுபவித்து மகிழ்வார்கள். இது பின்வரும் ஐந்து களங்களில் அவர்களுக்கு வெவ்வேறு அனுபவங்களை தரும்:

- அழகியல்
- அறிதிறன்
- அறநெறி
- உடலியல்
- சமூகவுணர்வியல்



உயர்நிலை நான்காம் வகுப்பு மாணவர்கள் முகாமின்போது காயாக்கிங்கில் பங்கேற்றனர்

“ப்ராஜெக்ட் ஒன்” திட்டத்தின் தொலைநோக்கானது மாணவர்கள் பாத்லைட்டில் பள்ளிப்படிப்பை முடிப்பதற்குமுன் இந்த ஐந்து களங்களில் பலவித முதல் முறை அனுபவங்களையும் முக்கிய அனுபவங்களையும் பெறுவது ஆகும். ஓர் இசைக்கருவியை வாசிப்பது ஒரு புத்தகப் படைப்பில் ஈடுபடுவது, உள்ளூர்/வெளிநாட்டு முகாமில் பங்கேற்பது, விளையாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பது, நடவடிக்கையின்மூலம் சமுதாயத்திற்கு பங்களிப்பது போன்ற உதாரணங்களை உள்ளடக்கும்.



உயர்நிலை நான்காம் வகுப்பு மாணவர்கள் தேசிய மாணவர் குடிமைத் தற்காப்புப படை Chong Boon Secondary School-மாணவர்களுடன் SG பாதுகாப்பு பயிலரங்கில் பங்கேற்றனர்



உயர்நிலை ஒன்றில் பயிலும் மாணவர்கள் ஈஷுஒனில் அமந்திருக்கும் ’ஓர்ட்டோ’வுக்கு (ORTO) Yio Chu Kang Secondary School-ஐச் சேர்ந்த நண்பர்களுடன் நட்புரீதியான இறால் பிடிக்கும் போட்டியில் பங்கேற்கச் சென்றனர்.

## உயர்நிலைப்பள்ளித் துணைப்பள்ளிப் பங்காளித்துவம்P

### “பெஸ்ட் ஆப் போது வோல்ட்ஸ்” அர்த்தமுள்ள ஒருங்கிணைப்பு மாதிரி வடிவம்

துணைப்பள்ளி பங்காளித்துவ மாதிரி அமைப்புமுறை ஒருங்கிணைப்பை நான்கு நிலைகளில் ஊக்குவிக்கிறது: உடல்சார்ந்தவை, கல்விசார்ந்தவை, சமூகம் சார்ந்தவை மற்றும் தொழில்சார்ந்தவை.

பாத்லைட் மாணவர்கள் தினமும் பங்காளித்துவப் பள்ளிகளுக்குச் சென்று, இடைவேளையின்போதும், குறிப்பிட்ட பள்ளி நிகழ்வுகள்/வகுப்புகளின் போதும் அந்தப் பள்ளி மாணவர்களுடன் நட்புடன் பழகுவார்கள். தயாராக இருக்கும் மாணவர்கள், பொதுநிலைப் பள்ளிகளில் கல்வி கற்கத் தேர்ந்தெடுக்கப்படலாம். இந்த அர்த்தமுள்ள ஒருங்கிணைப்பு முறை பாத்லைட் மாணவர்களைச் உயர்கல்வி நிறுவனங்களுக்கான நிலைமாற்றத்துக்குச் சிறந்த முறையில் தயார் செய்யும்.

மேலும் இது ஆட்டிசம் உள்ளவர்களைப் பற்றிய விழிப்புணர்வைப் பொதுநிலைச் சமூகத்தினரிடைய ஏற்படுத்தி, அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயத்தை ஊக்குவிக்கும்.

2014-ஆம் ஆண்டு இங்கு படித்த மாணவரான இங் லி ஜியே, “எனக்குப் பொதுநிலைப் பள்ளிகள் எப்படிச் செயற்படுகின்றன என்பதுபற்றியும் பொதுநிலைப் பள்ளி மாணவர்களின் வேறுபட்ட ஆளுமைகளைப்பற்றியும் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கும். அவர்கள் என்னுடைய அடிப்படைக் கணிதப் பாடத்தின்போதும் கூட்டு அறிவியல் பாடத்தின்போதும் நிறையக் கேள்விகள் கேட்பார்கள். இது எனக்கு மிகவும் பிடித்தது. ஏனெனில் அது அவர்களது ஆராயும் ஆர்வத்தையும் கற்றலிலுள்ள ஆர்வத்தையும் காட்டுகிறது.” என்று கூறினார்.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Elliot Chia

Elliot Chia, வயது 22, இப்போது சிங்கப்பூர் ‘டிஜிபென்’ தொழில்நுட்பக் கழகத்தில் மின்னிலக்கக் கலையும் அசைவூட்டுப்படப் பட்டப்படிப்பைப் படித்துவருகிறார். அவர், தாம் இன்று இந்த நல்ல நிலைக்கு வந்ததற்குப் பாத்லைட்டில் தமக்குக் கிடைத்த அனுபவங்கள்தான் காரணம் என்று கூறினார்.

அவர் மாணவராக இருந்தபோது, ஆசிரியர்கள் அவருக்குக் காட்சிக் கலைகளில் ஆர்வமும் திறமையும் இருப்பதைக் கண்டுபிடித்து அவரை ADP திட்டத்தில் சேர்த்தனர். “ADP திட்டத்தின்மூலம், என்னுடைய கலைத் திறன்களை மேம்படுத்திக்கொள்ளவும், என்னுடைய படைப்புகளைப் பொதுமக்களின் பார்வைக்கு வைப்பதற்கும், நல்ல வேலைப் பழக்கங்களை ஏற்படுத்திக்கொள்ளவும் எனக்கு வாய்ப்பளிக்கப்பட்டது. பாத்லைட்டில் படித்தபோது நான் தகவல் தொடர்பு மன்றத்தில் (CCA) இருந்தேன்., நான் சிங்கப்பூர் பலதுறைத் தொழிற்கல்லூரியில் பட்டம் பெற்றதும் விடுமுறைகளின்போது பாடங்களைக் கற்றுக்கொள்ளப் பணியிடைக்கல்விப் பயிற்றுவிப்பாளராகச ITDAவில் சேர்ந்தேன். இந்த விலைமதிப்பற்ற அனுபவங்கள் இல்லையென்றால், இன்று அசைவூட்டப்படத்துறையில் எனக்கு இருந்த ஆர்வத்தைத் தொடர்ந்திருக்கமுடியாது,” என்று அவர் கூறினார்.



எலியட் சியா, PSஇன் முன்னாள் மாணவர்

### Abdul Quddus Iqbal Bin Johari

2004இல் Pathlight School தொடங்கியபோது சேர்ந்த 41 முன்னோடி மாணவர்களுள் 23 வயது Abdul QuddusIqbal Bin Johari -யும் ஒருவராக இருந்தார். பொதுநிலைப் பள்ளியிலிருந்து 11 வயதில் பாத்லைட்டில் சேர்ந்த இக்பாலுக்கு ஆட்டிசமுடைய மாணவர்களுக்கு ஏற்ற அமைப்புப் பயனளித்து அவருடைய சிறப்பியல்பை வெளிக்காட்ட உதவியது. அவர் GCE N-வழக்கநிலை தகுதிகளைப் பெற்று 2010இல் தொழில்நுட்பக் கல்விக்கழகத்தில் சேர்ந்தார். அவர் அதில் உடலுறுதிப் பயிற்சிக்கான ‘நைடெக்’ சான்றிதழைப் பெற்றார். இன்று அவர் சான்றுபெற்ற விளையாட்டுப் பயிற்சியாளராகவும் பயிற்றுவிப்பாளராகவும் இருக்கிறார். அவர், உடற்கல்வியில் கற்றல் ஆதரவு உதவியாளராக PSஇல் வேலை செய்கிறார்.




Abdul Quddus Iqbal Johari, PSஇன் முன்னாள் மாணவர்

# கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Pathlight School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | pathlight.org.sg |
| **திட்ட இலக்கு** | ஆட்டிசத்தில் கவனம் செலுத்தும் பாத்லைட், சிங்கப்பூரில் ஆட்டிசம் உடைய மாணவர்களுக்கு வாழ்க்கைக்குத் தயாராகும் திறன்களுடன் சேர்ந்த பொதுநிலைக் கல்விப் பாடக்கலைத்திட்டத்தை வழங்கும் முதல் பள்ளி.<br><br>மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கற்றல் பயணத்தை அளித்து, கல்வியிலும் வாழ்க்கைத் திறன்களிலும் ஒவ்வொரு மாணவரின் ஆற்றலை மிகுதிப்படுத்துவது பள்ளியின் இலக்காகும். |
| **தொலை நோக்கு** | வாழ்க்கையை மாற்றக்கூடிய வகையில் அனைவரையும் உள்ளடக்கியதும். துடிப்புமிக்கதுமான, கற்றல் சமுதாயத்திற்கான குரலாகவும் முன்மாதிரியாகவும் இருப்பது. |
| **முகவரி** | Campus 1<br>5 Ang Mo Kio Avenue 10, Singapore 569739<br><br>Campus 2<br>6 Ang Mo Kio Street 44, Singapore 569253 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | இரண்டு வளாகங்களுக்கும்<br>NS16 ஆங் மோ கியோ பேருந்து சேவை 261ஐ பயன்படுத்த வேண்டும்<br>NS17 பிஷான் பேருந்து சேவை 55ஐ பயன்படுத்த வேண்டும்.<br>அருகிலுள்ள பேருந்து சேவைகள் |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | இரண்டு வளாகங்களுக்கும்<br>ஆங் மோ கியோ அவென்யூ 10: 45, 55, 261<br>ஆங் மோ கியோ அவென்யூ 3: 25, 55, 73, 74, 76, 132, 165, 268, 74E |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | **தொடக்கப் பள்ளி**<br>திடல்தட விளையாட்டுகள்<br>மன்றம் நடன மன்றம்<br>நாடக மன்றம்<br>பாடகர் குழு<br>Pathlight School இசைக்குழு<br>தகவல் தொழில்நுட்ப மன்றம்<br><br>**உயர்நிலைப் பள்ளி மற்றும் தொழில்முறைத் தடம்**<br>அசைவூட்டம்<br>குறியீடு இடல்<br>பாத்லைட் ரன்னர்ஸ்<br>பாத்லைட் இளைஞர் பாடகர் குழு<br>நிகழ்த்துகலைகள் மன்றம்<br>நிழற்படக்கலை<br>ரோபாட்டிக்ஸ்<br>'ஸ்டம்'<br>காட்சிக் கலை மன்றம்<br>இசைக் குழு<br>விளையாட்டு மன்றம்<br>சாரணர் இயக்கம்<br>வீடியோகிராஃபி முக்கியத் திட்டங்கள் |
| **முக்கியத் திட்டங்கள்** | 1. ஒவியர் வளர்ச்சித் திட்டம்<br>2. தகவல் தொழில்நுட்பமும் வடிவமைப்பும் அகாடமி<br>3. ப்ராஜெக்ட் ஒன்<br>4. துணைப்பள்ளிப் பங்காளித்துவம் |

## பலதுறைக் குழு

St. Andrew's Autism School (SAAS) மாணவர்களின் புலன்சார்ந்த கட்டுப்பாட்டுத் தேவைகளுக்கான பலதுறை அணுகுமுறையைக் கடைப்பிடிக்கிறது. மனோதத்துவ நிபுணர்கள், தொழில்சார் சிகிச்சையாளர்கள், பேச்சுக்கான சிகிச்சையாளர்கள் இசைக்கான சிகிச்சையாளர்கள் ஆகியோர் மாணவர்களின் கற்றலை மேம்படுத்துவதற்கும் தனிநபர் கல்வி இலக்குகளை மாணவர்கள் அடைவதற்கும் ஆதரவாக இருக்கின்றனர். சமூக சேவகர்களும் மனோதத்துவ நிபுணர்களும் பெற்றோர் ஆதரவு குழுவுடன் இணைந்து குடும்ப உறுப்பினர்களுக்கும் பராமரிப்பாளர்களுக்கும் வழிகாட்டுதலும், பயிற்சியும் ஆதரவும் வழங்கிவருகின்றனர்.

## முறைப்படுத்தப்பட்ட நிலைமாற்றம்

மாணவர்கள் அனைவரும் 13 வயதிலிருந்து முறைப்படுத்தபட்ட நிலைமாற்றத் திட்டமிடுதலில் ஈடுபடுகின்றனர். இது அவர்கள் 18 வயதிற்குப் பிந்திய விளைவுகளை அடைய போதுமான ஒடுபாதையை வழங்குகிறது. பள்ளியிலிருந்து வேலையிட மாற்றத்துக்கான (S2W) திட்டம், கல்வி அமைச்சும், சமுதாய, குடும்ப மேம்பாட்டு அமைச்சும், SG என்னேபள் ஆகியவற்றுடன் இணைந்து வேலைக்குச் செல்லத் தகுதியுள்ள இளைஞர்களுக்கு அதிகப் பயிற்சியையும் ஆதரவையும் அளிக்கின்றன.

## ஒருங்கிணைக்கபப்பட்ட திட்டங்கள்

உணர்வுகளை வெளிக்காட்டும் கலைகள், தேவைக்கேற்ப மாற்றியமைக்கக்கூடிய உடற்கல்வி, இணைப்பாட நடவடிக்கைகள் ஆகியவை மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை மேம்படுத்தும். அனைத்துக் கற்றல் களங்களிலும் நற்குணமும் குடியியலும் கல்வியும், தகவல் தொடர்புத் தொழில்நுட்பமும் ஒருங்கிணைக்கப்படுவது கற்றல் விளைவுகளை அதிகப்படுத்தும். சமுதாயம் சார்ந்த கற்றலில் மாணவர்கள் செயல்முறைக் கல்வி, சமூகவியல் கருத்துப்பரிமாற்றத் திறன்கள் ஆகியவற்றுடன் பொதுவான திறன்களையும் பெறுவதோடு சுயமாக இயங்குவதற்கும், தன்னாட்சி உணர்வையும் கண்ணியத்தையும் வளர்த்துக்கொள்வதற்கான தன்னம்பிக்கையைப் பெறுவார்கள்.






## ஒன்றுகூடி உதவுவோம்

### உலக ஆட்டிசம் விழிப்புணர்வு

SAAS மாணவர்கள், 2012இல் உலக ஆட்டிசம் விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து அதனைக் அனுசரிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் பொது நிகழ்வு ஆட்டிசம் குறித்த விழிப்புணர்வையும் அறிவையும் அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு. பல வேளைகளில் கவனிக்காமல் விடப்பட்ட, ஆட்டிசம் உடைய நபர்களின் ஆற்றலையும் திறன்களையும் கொண்டாடுகிறது. இது ஆட்டிசத்துடன் வாழும் தனிநபர்கள் சமுதாயத்தாலும் பொது நிகழ்ச்சிகளிலும் அரவணைக்கப்படுவதற்கான தருணத்தை அளிக்கிறது. மாணவர்களும் ஆசிரியர்களும் கலை நிகழ்ச்சிகள், திடீர் குழு நடனங்கள், அக்கம்பக்க வருகை, பொது மக்கள் பார்வை நிகழ்ச்சிகள், பொது விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

### உணவளிப்பதற்கான நடைப்பயணம்

SAAS மாணவர்கள், தென் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு அரிசியை வழங்க நிதிகளைத் திரட்டுவதற்காக, உணவளிப்பதற்கான நடைப்பயணம் என்னும் முயற்சியில் பங்கேற்றுச் சமுதாயத்திற்கு உதவக் கற்றுக்கொள்கின்றனர். பள்ளி தொடங்குவதற்கு முன்பான இந்த அன்றாட நடைப்பயணங்கள் இந்த சிறந்த நோக்கத்திற்குப் பங்களிப்பதற்காகத் தேவைக்கேற்ப மாற்றியமைக்கபட்டுள்ளன.




ஏழைக் குடும்பங்களுக்கு அரிசியை நன்கொடையாக அளிக்க குறிப்பிட்ட தூரம் நடந்து டோக்கன்களை சேகரிக்கின்றனர்

### உலகமே, இதோ நான் வருகிறேன்!

சிறப்புப் பயிற்சி பெற்ற பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்கள் ஆகியோரின் ஆதரவுடன், பெற்றோர் ஆதரவுக் குழுவால் ஏற்பாடு செய்யப்படும் வெளிநாட்டுப் பயணங்களின்போது இடங்களையும் சமுதாயங்களையும் பார்த்து அனுபவம் பெற மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும். மாணவர்கள் பள்ளியில் கற்றுக்கொண்ட திறன்களைப் பொதுமைப்படுத்தி, அவர்களின் வீடுகளுக்கும் நெருக்கமான சமுதாயத்துக்கும் அப்பாலும் பயன்படுத்தப் பயிற்சி பெறுகின்றனர். இந்தப் பயணங்களின்போது மாணவர்கள் மகிழ்ச்சியாக ஈடுபடவும் அர்த்தமுள்ளதாக இருக்கவும் தயார்செய்வதற்குக் காட்சித் திட்டங்களும் அமைப்புகளும் துணைபுரிகின்றன.



வெளிநாட்டுச் சுற்றுலாவில் மகிழ்ச்சியாக இருக்கும் மாணவர்கள் – பலருக்கு அவர்களின் குடும்பத்தினருடன் செல்வது இதுவே முதல் முறை.

## வாழ்வதற்கான கற்றல் பயிலரங்கு

நலன்விரும்பி நிறுவனம் ஒன்று வழங்கும் ‘கார்ப்பரேட்’ சமூகப் பொறுப்புணர்வுத் (CSR) திட்டத்தின்கீழ் மூத்த மாணவர்களுக்கு வழக்கமான வாழ்க்கைத்தொழில் பணிகள் (மின்னியல் பொருள்களுக்கான மூடிகளின் பாகங்களை இணைத்து அடுக்குதல்) வழங்கப்படுகிறது. இதன்வழி மாணவர்கள் வாழ்க்கைத்தொழில் அனுபவத்தைப் பெறுகின்றனர். மூன்று வாரங்களில் சுமார் 5000 மூடிகளின் பாகங்கள் மிக நேர்த்தியாக இணைக்கப்படுகின்றன. இதன்வழி மாணவர்கள் உகந்த வேலையிட நடத்தையையும், வேலையை நிலைப்பாட்டோடு செய்யக்கூடிய வேகத்தையும் தரமான உற்பத்தி விளைவைக் கொடுப்பதற்கும் கற்றுக்கொள்கிறார்கள்.



“வாழ்தல் மற்றும் கற்றல் பயிலரங்கில் பணிபுரிதல்”

## கலர்ஸ்’ சிற்றுண்டிச் சாலையில்

மூத்த மாணவர்கள் குழுக்களில் சிற்றுண்டிகளையும் பானங்களையும் பரிமாறும் வேலையில் ஈடுபடும்போது உணவைப் பொட்டலம் செய்வது பணத்தைக் கையாளுவது போன்ற பொறுப்புகளை ஏற்பதோடு பள்ளித்தோழர்களுடன் கலந்துரையாடுகிறார்கள். அவர்கள் வேலைக்குத் தயாராகும் திறன்களைக் கற்று, எதிர்காலத் தொழில்முறை வாய்ப்புகளுக்கான ஆர்வத்தையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக்கொள்கிறார்கள். இளையப் பள்ளித்தோழர்கள் சமுதாயத்திற்குச் சென்று பணியாற்றுவதற்கு முன் தேவையான பணத்தை நிர்வகிக்கும் திறன்களைப் பயிற்சிகளின்மூலம் வளர்த்துக்கொள்கிறார்கள்.



சிற்றுண்டிச் சாலையில்



Edibles@Elliot



## EDIBLES @ ELLIOT

பழ மரங்களையும் பல்வேறு வகையான மூலிகைகளும் காய்கறிகளும் கொண்டிருக்கும் எங்கள் தோட்டம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இயற்கையை அனுபவித்து மகிழ ஓர் அமைதியான சூழலைத் தருகிறது., மாணவர்கள் எங்கள் தோட்டத்தில் தண்ணீர் பாய்ச்சுதல், பயிர் செய்தல், அறுவடை செய்தல், உரமிடுதல் கலப்பு உரமாக்குதல் போன்ற பல்வேறு வேளாண்மை நடவடிக்கைகளைக் கற்றுக்கொண்டு பயிற்சியில் ஈடுபடுகிறார்கள்.



## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Liu Kai En

SPED வாழ்க்கை, கற்றல், வேலை விளைவுகள், நிலைமாற்றத்துக்கான திட்டமிடுதல் ஆகியவற்றைப்பற்றிய பெற்றோருடன் நடைபெற்ற கலந்துரையாடலுக்குப் பிறகு, Kai En குடும்பத்தினர் தோட்டக்கலை/அறுவடை செய்தல், பராமரிப்பு, மளிகைப்பொருள்கள் வாங்குவது, சமையற்கலைத் திறன்கள், அலுவலகத் திறன்கள், வளர்ப்புப் பிராணியைப் பராமரித்தல் சுயமாகக் குளித்தல் போன்றவற்றை வலியுறுத்தும்வண்ணம் ஒரு செயல் திட்டத்தை வடிவமைத்தார்கள். Kai En அவருக்குப் பிடித்தமான மிளகாய்ச் செடிக்கு மகிழ்ச்சியாக தண்ணீர் ஊற்றி, வளர்ந்த மிளகாயைத் திறமிக்க முறையில் நறுக்கி, அவருடைய உணவில் அதைச் சேர்த்துச் சாப்பிடுவதைப் பார்ப்பது மனத்திற்கு மகிழ்ச்சியளித்தது. மேலும் அவர் தமது தலையணை உறைகளையும் படுக்கை விரிப்புகளையும் மாற்றுதல் அறையைச் சுத்தம் செய்து துடைத்தல் போன்ற வேலைகளைப் பொறுமையாகச் செய்கிறார். டெலி சிகிச்சை நாய் வாரந்தோறும் சிகிச்சைக்கு வரும். Kai En டெலியைப் பராமரிக்கவும் அதை நடைப்பயிற்சிக்குப் பொறுப்புடன் அழைத்துச்செல்லவும் கற்றுக்கொண்டார். தொடர்ந்து கிடைத்துவரும் அனைவரது ஆதரவினாலும் பொறுமையாலும் Kai En தொடர்ந்து பல மைல்கற்களைத் தொடுவார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.





### Jeon Joon Hyeong

13 வயதில் ஜூன் Joon Hyeong கிற்கு “இல்லை! எனக்கு வேண்டாம்!” என்று மட்டுமே சொல்லத் தெரியும். பல வேளைகளில் அவர் அடம் பிடிப்பதோடு, ஆசிரியர்களை உதைக்கவும் செய்தார். அவர் இரண்டு ஆண்டுகளாக மனக்கவலை பிரச்சனைகளுக்காக மருந்து சாப்பிட்டுவந்தார். ஆனால், தற்போது 19 வயதாகும், ஜூன் Joon Hyeong திறமிக்க ஆபரண வடிவமைப்பாளராக விளங்குகிறார்! அவர் சவால்மிக்க வேலை தயார்நிலை மதிப்பீட்டை எதிர்கொண்டார். அதற்கு அவர் அவரது தாயாரிடன் ஆதரவைப் பெற்றார். அவருடைய அம்மா அவரை விடாமுயற்சியுடன் இருக்க ஊக்குவித்தார். ஜூன் Joon Hyeong வேலையில் சேர்வதற்கு முன் அவரது மென்திறன்களை மேம்படுத்திக்கொள்ள வாய்ப்பளிக்கப்பட்டது. ஜூன் Joon Hyeong கின் முன்னேற்றம், அவருடைய ஆசிரியர்களின் பொறுமையான பங்களிப்பின்மூலம் சாத்தியமானது.







*Hadi வழிகாட்டுதலை வழங்கக்கூடிய கருணையுள்ளம் கொண்ட பள்ளி ஆசிரியர்களின் அரவணைப்பில் ஹாடி இருக்கிறார். அவன் வாழ்க்கைத்திறன்கள், சமூகத் திறன்கள் பலவற்றைக் கற்றுக்கொண்டு, அதிகளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளார்.*

*– 12 வயது நிரம்பிய ஹாடியின் தாயார்*



*நான் பராமரிப்பாளர்களுக்கான AAC பயிற்சியின்போது என் மகனின் தேவைகளை நான் அறிந்தபோதும் அவரே வேண்டுகோள்களை முன்வைக்க அனுமதிப்பதன் முக்கியத்துவத்தைப்பற்றிக் கற்றுக்கொண்டேன். வீட்டுப்பயிற்சிச் சாதனம் வீட்டில் பயிற்சி செய்து பார்ப்பதற்கு எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது.*

*– 15 வயது நிரம்பிய Karthik தந்தை*



சாப்பிட மாட்டேன் என்று வன்மையாக மறுத்து விலக்கிய பல்வேறு பழங்களையும் உணவையும் இப்போது சாம் சாப்பிட முயல்கிறான். இது எங்களின் கவலையைப் பெருமளவில் குறைத்திருக்கிறது! மேலும் அவர் இப்போதெல்லாம் பொது இடங்களில் அடம்பிடித்து ஆர்ப்பரிப்பதைக் கைவிட்டுச் சுயக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்கிறார். இதற்கு நாங்கள் அவருடைய வகுப்பு ஆசிரியருக்குத்தான் நன்றியும் பாராட்டையும் தெரிவிக்கவேண்டும்.

– 15 வயது நிரம்பிய சாமின் பெற்றோர்




எங்களுக்குப் பள்ளி முகாம் பிடிக்கும். எங்களுக்கு நாய்களைப் பிடிக்கும். அவை வித்தைகள் செய்துகாட்டின., நாங்கள் அவற்றுடன் நிழற்படங்கள் எடுத்துக்கொண்டோம். நாங்கள் பல்வேறு வேலைகளுக்கான பெரிய அளவிலான விளம்பர அட்டைகளைத் தயாரிப்பதும் எங்களுக்குப் பிடித்திருந்தது

– 9 முதல் 11 வயது நிரம்பிய ஜுனியர் பிரிவு சிறுவர்கள் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற பள்ளி முகாமைப் பற்றி விவரிக்கின்றனர் (கருப்பொருள் - வேலைகள்)

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | St. Andrew's Autism School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | saac.org.sg |
| திட்ட இலக்கு | ஈடுபாட்டுடன் கற்பவர்கள். ஊக்குவிக்கும் ஆசிரியர்கள்.அதிகரிக்கும் ஆற்றல் |
| தொலை நோக்கு | மகிழ்ச்சியாக கற்பவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் உன்னதப் பள்ளி. முகவரி |
| முகவரி | 1 Elliot Road, Singapore 458686 |
| அருகிலுள்ள MRT நிலையம்(கள்) | பிடோக் MRT நிலையம் |
| அருகிலுள்ள பேருந்து சேவைகள் | 16, 31, 197, 10, 12, 14 |
| வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள் | • நீர்விளையாட்டுக்கள்<br>• திடல்தட விளையாட்டுக்கள்<br>• பந்து விளையாட்டுக்கள்<br>• களிமண் மன்றம்<br>• கணினி மன்றம்<br>• சமையல்<br>• நடனம்<br>• நாடகம்<br>• உடலுறுதி மன்றம்<br>• தோட்டக்கலை<br>• லெகோ<br>• இசை<br>• அறிவியல் மன்றம்<br>• சாரணர் இயக்கம்<br>• கயிற்றாட்டம் |
| முக்கியத் திட்டங்கள் | ஒவ்வொரு பிள்ளையும் முக்கியமானவரே. ஒவ்வொரு பிள்ளையாலும் கற்க முடியும் என்று SAAS நம்புகிறது. SAAS பிள்ளையை மையமாகக் கொண்ட கற்றலில் கவனம் செலுத்துகிறது. மேலும், ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் குறைபாட்டிற்கு (ASD) உகந்த அணுகுமுறைகளையும் கற்பித்தல் முறைகளையும் பயன்படுத்திப் பெற்றோர்களுடன் உடனிணைந்து செயற்பட்டுப் பிள்ளையிடத்தில் சிறந்த விளைவுகளை ஏற்படுத்த விழைகின்றது. |



## தொழில்நுட்பம் மூலம் கற்றல்

மின்னியல் பொருள்களையும் சாதனங்களையும் கண்டு தயக்கம் கொள்ளாமல் AWWA School மாணவர்கள் வகுப்பறைகளில் ஐப்பேடுகள், இருவழித்தொடுதிரைகள் மெய்நிகர் தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் நிபுணர்களாக உள்ளனர். இந்த மேம்பட்ட தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) கருவிகளும் உதவிச் சாதனங்களும் மாணவர்களை

ஆற்றலுடையவர்களாகவும் அவர்களது கற்றலையும் மற்றவர்களுடன் அவர்கள் மேற்கொள்ளும் கருத்துப்பரிமாற்றத்தையும் மேம்படுத்துகின்றன. ‘மேஜிக் கார்ப்பெட்’(Magic Carpet) ‘ஐ கேஸ்’ (Eye Gaze) போன்ற கருவிகள் புலன்சார் ஒருங்கிணைப்பு சிகிச்சைமுறையில் பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. இவை மாணவர்களின் இயக்கத் திறன்களையும் கை கண் ஒருங்கிணைப்பையும் மேம்படுத்துவதற்குப் உதவுகின்றன., தகவல்-தொடர்புத் தொழில்நுட்பம் (ICT) மூலம் கற்பதுஇருவழித் தொடர்பை ஏற்படுத்துகிறது. இதன்வழி மாணவர்களின் குழுவுணர்வும் சமூகத்திறன்களும் வளர்க்கின்றன என்பது மிக முக்கியமானதாகும்.



‘போலோகுவோ2கோ’வைப் பயன்படுத்தி உறுதிமொழி எடுத்தல்



மேஜிக் கார்ப்பெட்டில் ஒருவரோடொருவர் பழகுதல்



கருத்துப்பரிமாற்றத்திற்கு ‘ஐ கேஸை’ பயன்படுத்துதல்



மொழிப்பாடத்தின் போது முகமூடிகள் உருவாக்குகின்றனர்.



AWWA விளையாட்டுப்பொருள் நூலகத்தில் கதை சொல்கிறார்



கதைபுத்தகங்கள் மூலம் மொழியைக் கற்கின்றனர்

## வெறும் படித்தல் மட்டுமன்று

AWWA School-இல் மொழிப்பாடங்கள் பாடல், நடனம் பொம்மலாட்டங்கள்வழி நடத்தப்படுகின்றன. பெரிய புத்தகங்களைப் படித்தலையும், ‘அடாப்டட் கிட்ஸ் ரீட்’, ‘கீலிங்க்ஸ் கைடட் ரீடிங்’ போன்ற திட்டங்களையும் தவிர்த்து மாணவர்கள் கருப்பொருளையொட்டி நடத்தப்படும் நடவடிக்கைகளின்வழியும் மொழியை ஆர்வத்துடன் கற்கின்றனர்.இவற்றுள் அன்றாட வாழ்க்கையின் அம்சங்கள் அக்கம்பக்கக் குடியிருப்புப்பேட்டைகளுக்கும் சிங்கப்பூரின் கண்கவர் இடங்களுக்கும் மேற்கொள்ளும் பயணங்களும் உள்ளடக்கப்படலாம். நடைமுறைக்கு ஏற்ற சூழலில் கற்பது மொழி கற்றலை மகிழ்வூட்டுவதாயும் மாணவர்களுக்குப் பொருந்துவதாகவும் அமையும்.

*“மொழிப் பாடங்கள், வாய்மொழிக் கருத்துப்பரிமாற்றத்தினால் மகிழ்ச்சித்தரக்கூடியதாகவும் இருவழித் தொடர்புடையதாகவும் உள்ளன. ஆசிரியர்கள் பொம்மைகள்,’ விஷுவல் இஃபெக்ட்ஸ்’, கதைகள், 3டி- இஃபெக்ட்ஸ்’ஆகியவற்றைப் பயன்படுத்துகின்றனர். அவை மிகவும் நன்றாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கின்றன.”*

*– Mr Teo Wee Kiat, பத்து வயது நிரம்பிய மாணவர்*
*டியோ ஸி ஈயின் தந்தை*

## ஊர்கூடித் தேர் இழுக்கும் முயற்சி

பள்ளியில் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் மட்டுமன்றிப் பல்வேறு துறைகளும் மாணவர்களின் கற்றலுக்கும் நலனுக்கும் ஆதரிவளிக்கின்றன:

- சிகிச்சை துறை பிள்ளையின் முழுமையான வளர்ச்சிக்காக ஆசிரியர்கள், சிகிச்சையாளர்கள் மாணவர்களின் குடும்பத்தினர்களுடன் பயன்விளைவுமிக்க வகையில் உடனிணைந்து செயற்படுவதோடு கருத்துப்பரிமாற்றத்தையும் மேற்கொள்கிறது.

- செவிலியியல் துறை மருத்துவச் சேவைகளையும், பல்மருத்துவ சேவைகளையும் வழங்குவதோடு பள்ளியில் அன்றாடம் நடைபெறும் நடவடிக்கைகளினால் ஏற்பக்கூடிய முதலுதவி ஆதரவையும் அளிக்கின்றது.

- உளவியல் துறை பரிந்துரை செய்யும் நோக்கத்திற்காக மாணவர்களின் செயற்பாட்டுத்திறன் அறிதிறன் ஆற்றல்களையும் முறைசார்ந்த, முறைசாரா முறைகளின்வழி மதிப்பீடுகளை மேற்கொள்கின்றன. நடத்தையை நிர்வகிக்கவும் கற்றலை அதிகப்படுத்தவும் தனிநபர் இடையீட்டுத் திட்டங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

- சமூக சேவைத் துறை ஆதரவுத் திட்டங்கள், ஆலோசனை வழங்குதல் பரிந்துரைகள் செய்தல் ஆகிய சேவைகளின்மூலம் கட்டமைப்பை ஏற்படுத்திக்கொண்டு குடும்பங்களின் மீளுந்தன்மையை வளர்க்கவும் வளங்களைப் பெருக்கவும் உதவுகின்றன.

இசை சிகிச்சையின் போது மாணவர்கள்





பெற்றோர் பிள்ளை பிணைப்புக்கான நேரம்

## துணைப்பள்ளிப் பங்காளித்துவம்

பயன்விளைவுமிக்க வகையில் சமூகத்துடன் ஒருங்கிணைவதை ஊக்குவிப்பதற்காக AWWA School-லும் போவன் உயர்நிலைப்பள்ளியும் 2012-இலிருந்து துணைப்பள்ளிப் பங்காளர்களாக இருந்துவருகின்றன. அன்றுமுதல், இரண்டு பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள் இணை இடைவேளை, காலை உடற்பயிற்சிகள், இணைப்பாட நடவடிக்கைகள் தேசிய தின அனுசரிப்பு நிகழ்ச்சி ஆகியவற்றின் மூலம் நட்பை வளர்த்துக்கொள்கிறார்கள். இருவருக்கும் பயனளிக்கும் இந்த முயற்சி போவன் பள்ளி மாணவர்கள் பரிவும் மதிப்பும் போன்ற முக்கிய விழுமியங்களைக் கற்றுக்கொள்ள உதவுகிறது. மேலும் பொதுநிலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுடன் AWWAவைச் சேர்ந்த மாணவர்கள் நட்புடனும் ஈடுபாட்டுடனும் பழகுவது அவர்களுடைய உகந்த சமூகத் திறன்களையும் நடத்தைகளையும் மேம்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கிறது.

> *“என்னுடைய மாணவர்கள் அவர்களது போவன் நண்பர்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்பதைத் தெரிந்துகொள்வதில் நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.”*
>
> *– Ms Hannah Fan, உடற்கல்வித்துறை தலைவர், AWWA School*



காலை உடற்பயிற்சிகளின்போது காற்பந்துப் போட்டிக்கு முன் நடைபெறும் மிதமான உடற்பயிற்சி



வாழ்க்கைத்திறன் பயிற்சியின் போது ஒருவருக்கொருவர் உதவி செய்கின்றனர்

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Nurshafiqa Bte Abdullah

மூளைப் பாதிப்பால் ஏற்படும் முடக்கு வாதம் கொண்ட Nurshafiqa அவரது உறவினர்களால் பராமரிக்கப்படுகின்றார். அவர் AWWA School-க்கு முதன்முறையாக மாற்றப்பட்டபோது கூச்ச சுபாவத்துடனும், தம்மிடம் உள்ள திறன்களை அறியாதவராகவும் இருந்தார். ஆயினும், அவரது சிரமமான நிலையைச் சமாளித்து தம்மைக் கற்றல் அனுபவத்தில் முழுமையாக ஈடுபடுத்தி, தற்போது நம்பிக்கையுள்ள ஓர் இளம் பெண்ணாக வளர்ந்துள்ளார். அவர் துடிப்புடன் தமது இணைப்பாட நடவடிக்கையான ‘பொக்சியா’வில் பங்கேற்றார். போட்டிகளின்போது அவர் நேர்மையான விளையாட்டுப் பண்புகளைக் வெளிகாட்டி முன்னுதாரணமாக இருந்ததால் அனைவராலும் பாராட்டப்பட்டார். மேலும் 2015இல் நடைபெற்ற பொது மக்கள் பார்வைநாளின்போது விழா நெறியாளராக பொறுப்பேற்கும் சவாலை ஏற்றுக்கொண்டார். பட்டம் பெற்றதும், Nurshafiqa மாற்றுத்திறனாளிகளுக்கென வடிவமைக்கப்பட்ட ‘ஷெல்டர்ட்’ பயிலரங்கில் சேர்ந்தார். அதன்வழி அவர் வேலைக்கும் வீட்டிற்கும் சுதந்திரமாகப் பயணம் செய்யக் கற்றுக்கொண்டுள்ளார்



# கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | AWWA School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | awwa.org.sg |
| **திட்ட இலக்கு** | சுயமாக இயங்கும் ஆற்றலைப் பெருக்கிச் சிறப்பு தேவைகளையுடைய மாணவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது |
| **தொலை நோக்கு** | மாணவர்களுக்கு முழுமையானதும், பேணி வளர்க்கும் சூழலையும் அமைத்துக்கொடுத்து அதில் சிறப்புத்தேவைக் கல்வியையும் ஆதரவுச் சேவைகளையும் அளிப்பது. |
| **விழுமியங்கள்** | பரிவு,அக்கறை, பொறுப்புணர்வு, கடப்பாடு, நேர்மை, குழுவுணர்வு |
| **முகவரி** | 11 Lorong Napiri, Singapore 547532 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | சிராங்கூன் MRT, ஆங் மோ கியோ MRT மற்றும் ஹவ்கங் MRT |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | பேருந்து சேவைகள்: 43, 70, 70M, 73, 103, 109, 156, 854 |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | **விளையாட்டுக்கள்**: • கூடைப்பந்து • பொக்சியா • சீருடற்பயிற்சி • இன்லைன்-ஸ்கேட்டிங் • காற்பந்து • நீச்சல் • திடல்தட விளையாட்டு<br>**நிகழ்த்துகலைகள்**: • நாடகம் • கை மணி ஒலிப்புகள் • உடல் அசைவும் நடனமும் • தாளவாத்திய மன்றங்கள்<br>**கலை மன்றம்**: • தொழில்முனைவர் மன்றம் • பசுமை மன்றம் • தகவல்-தொடர்புத் தொழில்நுட்ப மன்றம் • வெளிப்புற சாகச மன்றம் • அறிவியல் மன்றம்<br>**சீருடைக் குழு**: • சிறுவர் சாரணர் படை |
| **முக்கியத் திட்டங்கள்** | • வேலையிட அறிமுகம், வேலை அனுபவத் திட்டம் ஆகியவை மாணவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு ஆக்கபூர்வமான விளைவை ஏற்படுவதற்கான வாய்ப்பை அதிகரிக்க அவர்களுக்கு அதிக ஆதரவையும் ஆரம்பக்கட்டப் பயிற்சியையும் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br>• விளையாட்டுகள், நிகழ்த்துகலைகள், மன்றங்கள் சிறுவர் சாரணர் இயக்கம் ஆகியவற்றின்மூலம் விழுமியங்களையும் ஆற்றல்களையும் வளர்த்துக்கொண்டு மாணவர்கள் தங்கள் ஆர்வங்களையும் திறன்களையும் அடையாளம் காண இணைப்பாட நடவடிக்கைத் திட்டங்கள் உதவுகின்றன.<br>• தகவல்-தொடர்புத் தொழில்நுட்பமும் உதவி தொழில்நுட்பங்களும் மாணவர்களுக்கு ஆற்றலை அளித்து, அவர்களது கற்றல் கற்பித்தலை மேம்படுத்தி மதிப்பளிக்கிறது. |

## RCMDS-இல் ‘சீட்ஸ்’ சிற்றுண்டிச் சாலை

சிங்கப்பூரின் ரெயின்போ நிலையத்தில் நீங்கள் எங்கள் மாணவர்களின் படைப்பாக்கமிக்க கலைப்படைப்புகளைப் பார்ப்பதோடு அவற்றை மோந்தும் சுவைத்தும் பார்க்கலாம்.

Rainbow Centre Margaret Drive School-இல் (RCMDS) அமைந்துள்ள எங்கள் சமூக வணிக நிறுவனமான ‘சீட்ஸ்’ சிற்றுண்டிச் சாலையில் மாணவர்கள் உணவும் பானமும் துறையில் வேலை செய்யப் பயிற்சி பெறும்போது காப்பியின் நறுமணம் காற்றில் கலந்துவருவதை உணர்வீர்கள்.

மாணவர்கள் வெறும் காப்பியை மட்டும் பரிமாறுவதில்லை – அவர்கள் காப்பியில் கலைப்படைப்பையும் சேர்த்துப் பரிமாறுகிறார்கள்.

காப்பியைத் தயாரிப்பதோடு, அவர்கள் சிற்றுண்டிச் சாலை இயங்கும் முறையைப்பற்றியும் வாடிக்கையாளர் சேவை பற்றியும் கற்றுக்கொள்வார்கள்.

உங்களுக்குக் காபி பிடிக்காது என்றால் கவலைப்படாதீர்கள், மாணவர்களுக்கு அருமையான ‘ஹாட் சாக்லெட்’ பானத்தைத் தயாரிக்கவும் கற்றுத்தரப்படுகிறது



சீட்ஸ் சிற்றுண்டிச் சாலையில் தனது ‘லாத்தே’ கலைப்படைப்புடன் மாணவர் ஸ்ரீ ராகவேந்த்ரா

STARSஇல் எங்கள் மாணவர்களின் உடன்பிறப்புகள்

## பல உதவிக் கரங்களின் அரவணைப்பில் வளரும் குழந்தை

RCMDSஐ சேர்ந்த மாணவர்களின் பெற்றோர்கள் இயலாமைகளையுடைய தங்களது பிள்ளைகளை வளர்ப்பதற்குச் சமூக சேவகர்கள் முதல் ஆதரவு குழுக்கள் வரை அனைவரின் வழிகாட்டுதலையும் உதவியையும் பெற முடியும்.

எங்களின் குடும்ப வாழ்க்கை சேவைகள் திட்டம், தூண்களாக விளங்கும் பெற்றோர் ஆதரவுக் குழு, மாண்டரின் பேசும் ஆதரவுக் குழு, மலாய் பேசும் ஆதரவுக் குழு, தந்தைகளின் குரல் STARS (சிறப்பான உடன்பிறப்புகள்) போன்ற ஆதரவுச்சேவைகளை ஏற்பாடு செய்கிறது. இவை அனைத்தும் குடும்பங்களுக்கு வளங்களையும் உத்திகளையும் அளிப்பதோடு பிரச்சினைகளும் தேவைகளையம் கேட்டு ஆதரவும் அளிக்கிறது.

Stars உள்ள நமது மாணவர்களின் உடன்பிறப்புகள்



மேலும், பெற்றோர் செயற்குழு (பெற்றோர்களுக்கான முக்கியக் குழு), பள்ளி தலைமைத்துவத்தின் ஆதரவுடன் பெற்றோர்களுக்கான பேச்சுக்களுக்கும், நிகழ்வுகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது.



## ‘கேன்வசில்’ கலைத் திறன் திட்டம்

உங்களுக்குப் பிடித்த பானத்தை அருந்திக்கொண்டே, சிற்றுண்டிச் சாலையைச் சுற்றிப்பாருங்கள். எங்கள் மாணவர்களின் பல்வேறு படைப்பாக்க வெளிப்பாடுகள் உங்கள் கண்களுக்குத் தெரியும்.



முகமும் நானும் என்னும் தமது கலைப்படைப்புடன் மாணவர் நோவா டான்

மார்கரெட் டிரைவ் வளாகத்தில் உள்ள எங்களின் புதிய கலைக்கூடமான கேன்வஸ், ரெயின்போ மையம் முழுவதுக்குமான கலைத் திறன் திட்டம் காட்சிக் கலைகளில் திறமிக்க 17-18 வயதுடைய மாணவர்களுக்காக நடத்தப்படுகிறது.

மதியுரை வழிகாட்டுதல் மூலமும் பல்வேறு கலைப் பாணிகளை அறிமுகப்படுத்துவதன்மூலமும் எங்கள் மாணவர்கள் கலைசார்ந்த வேலைக்கான திறன்களை வளர்த்துக்கொண்டு அவற்றில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களைப் பெறுகிறார்கள். ‘சீட்ஸ்’ சிற்றுண்டிச் சாலையில் மட்டுமல்லாமல், எங்கள் மாணவர்களுக்குக் கண்காட்சிகளிலும் அவர்களின் கலைப்படைப்புகளைக் காட்சிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.



## விளையாடிக் களிப்போம்

சில வேளைகளில், எங்கள் மாணவர்களுக்கு விளையாட்டுகளைப்பற்றி மகிழ்ச்சிக்கொள்ள வைப்பது சிரமமான ஒன்றாக இருக்கும். ஆனால், எங்களின் விளையாட்டுகள் செயற்குழு பள்ளிசார்ந்த உடற்பயிற்சி நடவடிக்கைகளிலும், சமூக நடவடிக்கைகளிலும் பெற்றோர் ஈடுபடக்கூடிய நடவடிக்கைகளிலும் எங்கள் மாணவர்களை மெல்ல ஆர்வத்தை ஏற்படுத்திக்கொள்ள ஊக்குவித்துள்ளது.

வழக்கமான உடற்கல்விப் பாடங்கள் பல்வேறு வயதுடைய மாணவர்களின் திறன்களில் கவனம் செலுத்திப் பல்வேறு மகிழ்ச்சியூட்டும் ‘இன்லைன் ஸ்கேட்டிங்’ திடல்தட விளையாட்டுகள் போன்ற சவால்மிக்க நடவடிக்கைகளை, உள்ளடக்கிய பணிச்சட்டத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

எங்கள் மாணவர்கள் சிங்கப்பூர் மாற்றுத்திறனாளுக்கான விளையாட்டு மன்றம், பொதுநிலைப் பள்ளிகள் சிங்கப்பூர் சிறப்பு ஒலிம்பிக்ஸ் ஆகியவை நடத்தும் விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கேற்கின்றனர். ஒருமித்த கூடைப்பந்து போட்டியில் பங்கேற்றது இதற்கு ஓர் உதாரணமாகும்.

இந்த நிகழ்வுகள் எங்கள் மாணவர்களுக்கும் வேறு பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கருத்துப்பரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கும் ஒருங்கிணைவதற்கும் வாய்ப்புகளை அளித்து, முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன.

விளையாட்டின் மூலம் குடும்பப்பிணைப்பை அதிகரிக்க பெற்றோர்களும் குடும்ப உறுப்பினர்களும் ‘எக்கிடன்’ நெடுந்தொலை ஓட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் சேர்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

‘ஐ-வின்’ திட்டம் என்பது எங்களுடைய புதிய முயற்சிகளுள் ஒன்றாகும். இதில் உடல் பருமன் அதிகமுள்ள மாணவர்கள் அளவிடப்பட்ட எடைக்குறைப்புத் திட்டத்திற்குச் செல்ல தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உடற்பயிற்சியுடன் சேர்த்து ஆரோக்கியமான உணவுப்பழக்கத்தை மேற்கொள்வதும் மாணவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் இந்தச் செயல்முறையில் ஈடுபடுத்துவதும் இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Noah Tan Kai

Noah, 5 வயதிலிருந்து RCMDSஇல் படித்துவருகிறார். தொடக்கத்தில் இவர் குறுகியநேர இணைகவனிக்கும்தன்மையைக் கொண்டிருந்தார். மேலும் அவருடைய கற்றலைத் தடை செய்யக்கூடிய நடத்தைகளையும் வெளிப்படுத்தினார். மாற்றமில்லாத தெளிவான முறைப்படுத்தப்பட்ட அமைப்பை வழங்கியதன்மூலம் Noah தன் அன்றாட நடவடிக்கைகளை அமைதியுடன் செய்யத் தொடங்கினார்.

தற்போது Noah தமது உணர்வுகளை சிறப்பாக நிர்வகிக்கக்கூடிய ஓர் இளைஞராக விளங்குகிறார். அவரின் தாயாருடன் நெருங்கி உடனிணைந்து செயற்படுவதும் மிக முக்கியமான ஒன்றாக அமைந்தது. இதன்மூலம் அவர் பேச்சு வளர்ச்சியடைந்தது. இப்போது அவரால் தமது விருப்பங்களைத் தெரிவிக்க முடிகிறது.



‘புலாய்ஸ்’ ஓவிய ஏலத்தில் பிரதிநிதி ஒருவருக்கு ஓர் அன்பளிப்பை வழங்கும் Noah




நிதி திரட்டும் நிகழ்ச்சியில் Noah
(பிரதமர் லீ சியென் லூங்கிற்கு அருகில்)

Noahவுக்குப் புதிய சூழலில் ஒன்றிப்போவதற்கு நேரம் தேவைப்பட்டாலும் அல்லது தொடுதிறன் மிகைப்புக் காரணமாக அவருக்கு அறிமுகமில்லாத பொருள்களைக் கையாளுவதற்குத் தயாராவதற்கு நேரம் தேவைப்பட்டாலும் அவர் தற்போது கலையின்மீதுகொண்ட ஆர்வத்தையும் திறனையும் வளர்த்துவருகிறார்.

Noah பல்வேறு ஓவியக் கண்காட்சிகளிலும் ஓவிய ஏலங்களிலும் பங்கேற்று, தமது ஓவியங்களை வழங்கியுள்ளார். அவர் ரெயின்போ நிலையத்தின் கலைத்திறன் திட்டத்தின் ஓர் அங்கத்தினர்.

## கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Rainbow Centre - Margaret Drive School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | rainbowcentre.org.sg |
| **முகவரி** | 501 Margaret Drive, Singapore 149306 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | குயின்ஸ்டவுன் நிலையம் |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | 32 மற்றும் 122 |
| **திட்ட இலக்கு** | இயலாமைகளையுடையவர்கள் அவர்களது குடும்பத்தினர் ஆகியோரின் வாழ்க்கைத் தரத்தைப் பின்வரும் வழிகளில் மேம்படுத்துவது:<br>• தனிநபரை மையமாகக் கொண்ட திட்டங்களையும் சேவைகளையும் வழங்கி முழுமையான ஆற்றலை அடைய வைக்க ஊக்குவிப்பது;<br>• தேவைகளையும் நாட்டங்களையும் ஆதரிக்கும் புத்தாக்கத்தை முன்னடத்திச் சென்று செயல்திறன்களை வளர்ப்பது;<br>• அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை இணைந்து உருவாக்குவதில் பங்காளர்களையும் பொதுமக்களையும் ஈடுபடுத்துவதை ஆதரிப்பது |

| | |
|---|---|
| **தொலை நோக்கு** | இயலாமைகளுக்கும் அப்பால்: அனைவரையும் உள்ளடக்கும் சமுதாயத்தில் செழித்தோங்கி வளர்வதற்கான ஆற்றலைப் பெறுவது. |
| **விழுமியங்கள்** | நாங்கள் ஒவ்வொரு தனிநபரின் இயல்பையும் தனித்துவத்தையும் மதிப்பதோடு பரிவோடும் சேவையாற்றி ஒவ்வொரு தனிநபரின் திறனையும் கண்டறிந்து, வளர்த்து, கொண்டாடும் அர்ப்பணிப்பு உணர்வோடு செயற்படுவோம். நாங்கள் நேர்மையோடு செயலாற்றி எங்கள் இலக்கை ஆதரிக்கும் பணியாளர்களுடனும், குடும்பங்களுடனும் சமுதாயத்தினரின் ஒருங்கிணைந்த குழுவுணர்வைக்கொண்டு சாதிப்போம். இயலாமைகளைக் கொண்ட நபர்களுக்குப் புத்தாக்கத்தைப் பின்பற்றிச் சேவைகள் வழங்குவதில் உன்னதத்தை அடைய முயல்வதன்மூலம் ஆற்றலை அதிகப்படுத்தவதோடு, சமுதாயத்தில் செழிந்தோங்கி வளர்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கவோம். |
| **குறிக்கோள்** | ஆற்றலளிப்பது. சேர்த்துக்கொள்வது. வளர்ச்சியடைய வைப்பது |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | எங்களின் இணைப்பாட நடவடிக்கைகள் மூன்று முக்கியமான பிரிவுகளைக் கொண்டுள்ளன – விளையாட்டுக்கள், கலைகள் (நிகழ்த்துகலைகள் காட்சி கலைகள்) தகவல்தொடர்பு தொழில்நுட்பம் (ICT).<br>உள்ளடங்கியிருக்கும் நடவடிக்கைகள்:<br>• உடற்பயிற்சிக் கூடம்<br>• பாறைசுவர் ஏறுதல்<br>• காயாகிங்<br>• பாத்தெக் ஓவியம்<br>• 2D கலை<br>• கைமணி ஒலிப்புகள்<br>• நாடகம்<br>• களிமண்ணில் பொருள்கள் செய்தல்<br>• புதியன நாடும் நடனம்<br>• ரோபாட்டிக்ஸ் |
| **முக்கியத் திட்டங்கள்** | • 7 – 10 வயதினருக்கான ‘ஜூனியர்’ திட்டம் மாணவர்களுக்குக் கற்றலை மேற்கொள்வதற்கும் கற்றலை அணுகுவதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br>• சமுதாயத்தை எதிர்கொள்ளவும், புரிந்துகொள்ளவும் அதில் செயற்படவும் 11-14 வயது வரையிலான மாணவர்களுக்கு உதவும் நடுநிலைத் திட்டம். மாணவர்கள் அவர்களின் தனிப்பட்ட நாட்டங்கள், ஆற்றல்கள் விருப்பங்கள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளப் பல்வேறு வகையான நடவடிக்கைகளில் பங்கேற்பார்கள்.<br>• 15-18 வயதினருக்கான சீனியர் திட்டம் மாணவர்களை முதிர்ந்த பருவத்திற்கான நிலைமாற்றத்திற்குத் தயார் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் தங்களது தனிப்பட்ட அடையாளம், தனிப்பட்ட செயற்பாடு ஆகியவற்றையும் சமுதாயத்தில் சுயமாகச் செயற்படுவதற்கும் மாணவர்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்துகிறது.<br>• சிகிச்சை சேவைகள் எங்கள் மாணவர்களுக்காகப் பல துறை அறிவைப் பெறச் செய்வதன்மூலம், ஆழமான கலந்துரையாடலை ஊக்குவித்து, முழுமையான சேவைத் திட்டமிடுவதையும் நோக்கி செல்கின்றன.<br>• பள்ளி மாணவர் தலைமைத்துவத் திட்டம் பண்புநல வளர்ச்சிக்கு வாய்ப்புகளை வழங்குகிறது. மாணவத் தலைவர்கள் மேடைப் பேச்சுத்திறன்களில் பயிற்சிபெறுகிறார்கள். இது அவர்கள் பள்ளி நிகழ்ச்சிகளை வழிநடத்துவதற்கு உதவும் அதோடு அனைவருக்கும் முன்மாதிரிகளாக இருப்பதற்கான அடிப்படை விழுமியங்களும் அவர்களுக்குக் கற்றுத்தரப்படுகின்றன. |

## பிள்ளையின் வளர்ச்சியில் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் பங்கு உண்டு



ஆசிரியர்களும் உதவி நிபுணர்களும் மாணவர்களைப் பல்வேறு கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றனர்

ஒரு பிள்ளையின் வளர்ச்சிக்குச் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் பங்கு உண்டு என்பதை உணர்ந்த ரெயின்போ நிலையத்தின் ஈஷூன் பார்க் பிள்ளைகளை ஆற்றல்மிக்கவர்களாக்கப் பலதரப்பட்ட மக்களை ஒன்றிணைப்பதற்கான தைரியமான அடிகளை எடுத்துவைத்துள்ளது. பேணி வளர்க்கும் ஆசிரியர்களாகட்டும், பரிவுகாட்டும் உதவி நிபுணர்களாகட்டும், சவால்களைச் சந்திக்க உதவும் வேலைப் பயிற்றுவிப்பாளர்களாகட்டும் அல்லது ஆதரவளிக்கும் குடும்பத்தினர்களாகட்டும், பள்ளி அவர்களை ஒன்றாக இணைப்பதற்குப் பல வாய்ப்புகளை உருவாக்கித் தந்து பிள்ளைகள் இன்றைய உலகிற்கு ஏற்ற வகையில் வளர்ச்சியடையவும் நடந்துகொள்ளவும் உதவுவதற்காக ஆதரவு சேவைகளையும் திட்டங்களையும் கொண்ட நீள்திரையை உருவாக்கித் தருகிறது.



ரெயின்போ சமையலறையில் பள்ளிசார்ந்த தொழில்முறைப் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்கள்

சீனியர் திட்டத்தில் நடைமுறைசார்ந்த கற்றல் அனுபவங்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காக, பள்ளி வளாகத்திலேயே, பூங்காவோரத்தோட்டம் (தோட்டக்கலையிலும் நிலவனப்பிலும் பயிற்சியளித்தல்), RCYPS பயிலரங்கு (கைவினைப் பொருள்கள் செய்தல், ஒன்று சேர்த்தல், பொட்டலம், சில்லறை வணிகச் சேவைகள்), ரெயின்போ சமையலறை (உணவும் பானமும் சேவைகள்), லாண்ட்ரோமேட் (சலவை சேவைகளில் பயிற்சி) ஆகியவற்றை அமைத்துள்ளது.



## மார்கரெட் டிரைவில் உள்ள சீட்ஸ் சிற்றுண்டிச் சாலை

வேலைக்குத் தயார் செய்யும் திட்டம் (WPP), தொழில்முறைப் பயிற்சி பெறுவதற்கான ஆற்றலைக் கொண்ட 17 – 18 வயது நிரம்பிய மாணவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்வழி WPP இல் உள்ள மாணவர்கள் வேலை இடத்தில் தேவைப்படும் அவசியமான திறன்களைக் கற்றுக்கொள்வதற்கான இரண்டு வேலை அனுபவத்திட்ட வாய்ப்புகளை ஈராண்டுகளுக்கு வழங்குகிறது. மார்கரெட் டிரைவில் உள்ள ‘சீட்ஸ்’ சிற்றுண்டிச் சாலை வளாகம் வேலை இடங்களில் ஒன்றாகும்.

மூத்த மாணவர் திட்டம் Faisal Abdullah Afendoulis, சீட்ஸ் சிற்றுண்டிச் சாலையில் தனது தொழில்முறைப் பயிற்சியை மேற்கொள்கிறார்

## கேன்வசில் கலைத்திறன் திட்டம்



மார்கரெட் டிரைவ் வளாகத்தில் உள்ள எங்களின் புதிய கலைக்கூடமான கேன்வஸ், ரெயின்போ மையம் முழுவதுக்குமான கலைத் திறன் திட்டம் காட்சிக் கலைகளில் திறமிக்க 17-18 வயதுடைய மாணவர்களுக்காக நடத்தப்படுகிறது.

மதியுரை வழிகாட்டுதல் மூலமும் பல்வேறு கலைப் பாணிகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் எங்கள் மாணவர்கள் கலைசார்ந்த வேலைக்கான திறன்களை வளர்த்துக்கொண்டு அவற்றில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களைப் பெறுகிறார்கள்

கலைத்திறன் திட்டத்தில் சேர்வதற்கு அடையாளங்காணப்பட்ட முகமது டேனியல் ஐசாக், RC30வது ஆண்டுநிறைவுக்கான ஈஸிலிங்க் அட்டையை வடிவமைத்தார்



Yazid என்னும் கலைப் பயிற்றுவிப்பாளர் கலை அமர்வின்போது திலக்கை ஈடுபடுத்துகிறார்

## மைஸ்பேஸ்

RCYPSஇன் தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்களின் பல சேவை மையமான மைஸ்பேஸில் அனைத்துத் திறன்களையும் கொண்ட மாணவர்கள் இருவழிக் கருத்துப்பரிமாற்றக் கற்றலில் பங்கேற்று, அண்மையில் அறிமுகமான நவீனத் தொழில்நுட்பத்தைத் தேர்ந்தெடுக்கலாம். மாணவர்கள் எண்ணறிவு, எழுத்தறிவு சமூகவுணர்வுத் திறன்கள் ஆகிய பயிற்சிகளில் மடிக்கணினிகள் அல்லது ஐபேட்டுகளைப் பயன்படுத்திக் குழுவாகவோ அல்லது தனிநிலையிலோ செயற்படுகிறார்கள்.



ICT மையத்தில் தொழில்நுட்பத்தின் உதவியுடன் கற்கும் மாணவர்கள்

பல்வேறு உதவி தொழில்நுட்பச் சாதனங்கள் உடல் அல்லது அறிவுசார் குறைபாடுகளைக் கொண்ட மாணவர்கள் கணினியில் எளிதாக மென்பொருளைப் பயன்படுத்த வைக்கிறது. இருவழிக் கருத்துப்பரிமாற்றக் கற்றல் கற்பித்தல் தொடுதிரைகள், தடம்பார்த்து அசைவை உணரும் ஃப்ளோர் ப்ரொஜெக்ஷன் போன்ற மிகச் உயரிய ஊடகக் கருவிகளால் இது சாத்தியமாகியுள்ளது



சிறப்பு விருந்தினரான, அதிபர் ஹலிமா யாகோப்பிற்கு பரிமாறும் மாணவர்கள்

## YPS - ரெயின்போ சமையலறை

உணவும் பானமும் சார்ந்த தொழில்முறைப் பயிற்சிக்காக ரெயின்போ சமையலறை அமைக்கப்பட்டது. இந்தக் கற்றல் பகுதி பேக்கிங் (சுடுதல்) கருவிகள், தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் அடுப்பு பாத்திரம் கழுவும் இயந்தரங்களை கருவிகள் போன்ற தொழில் துறைசார்ந்த கருவிகளைக் கொண்டுள்ளது. மாணவர்கள் இங்கு வர்த்தக சமையலறைகளில் இருப்பதைப் போன்ற கருவிகளைப் பயன்படுத்தப் பயிற்சி அளிக்கப்படும். இதன்மூலம் அவர்கள் தங்கள் திறன்களை நடைமுறை சார்ந்த சூழல்களில் வளர்த்துக்கொள்ளமுடிகிறது.

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Harish s/o Ganesan

Harish 2008இல் RCYPS சேர்ந்தபோது மிகவும்

பதற்றம் கொண்டவராகவும் இறுக்கான தன்மை கொண்டவராகவும் இருந்தார். அவர் தமது சுய கட்டுப்பாட்டிற்காக அடிக்கடி சர்க்கரை உணவை நாடும் நிலையில் இருந்தார். முறைப்படுத்தபட்ட கற்பித்தல், அனுபவழிக் கற்றல், சமுதாய நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்கேற்றல் ஆகியவற்றின்மூலமும் வலுவான குடும்ப ஆதரவின் மூலமும் Harish RCYPSஇல் தமது சகமாணவர்களுக்கு முன்மாதிரியாகவும், ஆசிரியர்களுக்கு ஊக்கம் தருபவராகவும் வளர்ந்திருக்கிறார். Harish 2012இலிருந்து RCYPSஇல் மாணவர் தலைவராக இருந்தார். அவர் தமது நல்ல இயல்பாலும் தலைமைத்துவத் திறன்களாலும் மற்ற மாணவத் தலைவர்களுக்கு ஊக்கமளித்திருக்கிறார்.

தமது ஆசிரியர்களிடமும் சகமாணவர்களிடமும் தமது உணர்வுகளையும் பிரதிபலிப்புகளையும் பதிவு செய்ததன்மூலமும் பகிர்ந்துகொண்டதன்மூலமும் Harish தம் உணர்வுகளைச் சிறப்பாக நிர்வகிக்கவும் கட்டுப்படுத்தவும் கற்றுக்கொண்டார்.

2015இல், பள்ளியின் முதல் வேலை அனுபவத்திட்டக் கற்றல் இணைப்புத்திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் RCYPS மாணவர் குழுவில் ஹரிஷுªம் ஒருவர். பள்ளியில் சில ஆண்டுகள் சில்லறை வணிகப் பயிற்சியைப் பெற்ற பிறகு, அவரால் சிற்றுண்டிகளையும் நொறுக்குத்தீனிகளையும் விற்பனை செய்யும் சிறு கடையின் செயற்பாடுகளில் உதவ முடிந்தது. இதன்காரணமாக, அவரால் அவருடைய கூச்ச சுபாவத்தையும் பதற்றத்தையும் சமாளிக்க முடிந்தது. கூடெக் புவாட் மருத்துவமனையில் உள்ள மருந்தகமான ‘ஏபள் ஸ்டுடியோவில்’ தனது சில்லறை வணிக திறன்களை மேலும் வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பையும் பெற்றார்.

2016இல் ‘ஜாயண்ட் எக்ஸ்பிரஸ்’ பேரங்காடியில் தமது இரண்டாவது கற்றல் அனுபவத்தின்போது, அவர் மனிதவள மேலாளரை பெருமளவில் கவர்ந்தார். இதனால், அந்த நிறுவனம் அவர்களின் RCஇன் வேலை அனுபவத்திட்டத்தில் அவரை இணைத்துக்கொண்டது.

2017இல், RCயில் உணவும் சுகாதாரக்குமான சான்றிதழைப் பெற்ற சில மாணவர்களில் ஒருவர் என்னும் சாதனையைப் புரிந்தார். அவருக்கு Lee Kuan Yew-முன்மாதிரி மாணவர் விருது வழங்கப்பட்டது.







## கண்ணோட்டம்

| | |
|---|---|
| **பள்ளியின் பெயர்** | Rainbow Centre - Yishun Park School |
| **பள்ளியின் இணையத்தள முகவரி** | rainbowcentre.org.sg |
| **முகவரி** | 15 Yishun Street 61, Singapore 768548 |
| **அருகிலுள்ள MRT நிலையம்(கள்)** | காதிப் நிலையம் |
| **அருகிலுள்ள பேருந்து சேவைகள்** | 812 |
| **திட்ட இலக்கு** | இயலாமைகளையுடையவர்களையும் அவர்களின் குடும்பத்தினருடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதில் கடப்பாடு கொண்டுள்ளோம்:<br>• தனிநபரை மையமாகக் கொண்ட திட்டங்களையும் சேவைகளையும் வழங்கி முழுமையான ஆற்றலை அடைய வைக்க ஊக்குவிப்பது;<br>• தேவைகளுக்கும் நாட்டங்களுக்கும் ஆதரிக்கும் புத்தாக்கத்தை முன்னடத்திச் சென்று செயல்திறன்களை வளர்ப்பது;<br>• அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை இணைந்து உருவாக்குவதில் பங்காளர்களையும் பொதுமக்களையும் ஈடுபடுத்துவதை ஆதரிப்பது |

| | |
|---|---|
| **தொலை நோக்கு** | இயலாமைகளுக்கும் அப்பால்: அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தில் செழித்தோங்கி வளர்வதற்கான ஆற்றலைப் பெறுவது. |
| **விழுமியங்கள்** | நாங்கள் ஒவ்வொரு தனிநபரின் இயல்பையும் தனித்துவத்தையும் மதிப்பதோடும் பரிவோடும் சேவையாற்றி ஒவ்வொரு தனிநபரின் திறனையும் கண்டறிந்து, வளர்த்து, கொண்டாடும் அர்ப்பணிப்பு உணர்வோடு செயற்படுவோம். நாங்கள் நேர்மையோடு செயலாற்றி எங்கள் இலக்கை ஆதரிக்கும் பணியாளர்களுடனும், குடும்பங்களுடனும் சமுதாயத்தினரின் ஒருங்கிணைந்த குழுவுணர்வைக்கொண்டு சாதிப்போம்.<br><br>இயலாமைகளைக் கொண்ட நபர்களுக்குப் புத்தாக்கத்தைப் பின்பற்றிச் சேவைகள் வழங்குவதில் உன்னதத்தை அடைய முயல்வதன்மூலம் ஆற்றலை அதிகப்படுத்தவதோடு, சமுதாயத்தில் செழிந்தோங்கி வளர்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கவோம். |
| **குறிக்கோள்** | ஆற்றலளிப்பது. சேர்த்துக்கொள்வது. வளர்ச்சியடைய வைப்பது |
| **வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்** | எங்களின் இணைப்பாட நடவடிக்கைகள மூன்று முக்கியமான பிரிவுகளைக் கொண்டுள்ளன – விளையாட்டுக்கள், கலைகள் (நிகழ்த்துகலை மற்றும் காட்சிக் கலைகள்) மற்றும் தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம் (ICT).<br><br>உள்ளடங்கிய செயற்பாடுகள்:<br>• உடற்பயிற்சிக் கூடம்<br>• பாறைசுவர் ஏறுதல்<br>• காயாகிங்<br>• பாடுதெக் ஓவியம்<br>• 2டி கலை<br>• கைமணி ஒலிப்புகள்<br>• நாடகம்<br>• களிமண்ணில் பொருள்கள் செய்தல்<br>• புதியன தேடும் நடனம்<br>• ரோபாட்டிக்ஸ் |
| **முக்கியத் திட்டங்கள்** | • 7 – 10 வயதினருக்கான ‘ஜூனியர்’ திட்டம் மாணவர்களுக்குக் கற்றலை மேற்கொள்வதற்கும் கற்றலை அணுகுவதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br><br>• சமுதாயத்தை எதிர்கொள்ளவும், புரிந்துகொள்ளவும் அதில் செயற்படவும் 11-14 வயது வரையிலான மாணவர்களுக்கு உதவும் நடுநிலைத் திட்டம். மாணவர்கள் அவர்களின் தனிப்பட்ட நாட்டங்கள், ஆற்றல்கள் விருப்பங்கள் ஆகியவற்றைத் தெரிந்துகொள்ளப் பல்வேறு வகையான நடவடிக்கைகளில் பங்கேற்பார்கள்.<br><br>• 15-18 வயதினருக்கான சீனியர் திட்டம் மாணவர்களை முதிர்ந்த பருவத்திற்கான நிலைமாற்றத்திற்குத் தயார் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் தங்களது தனிப்பட்ட அடையாளம், தனிப்பட்ட செயற்பாடு ஆகியவற்றையும் சமுதாயத்தில் சுயமாக செயற்படுவதற்கும் மாணவர்களுக்கு உதவுவதில் கவனம் செலுத்துகிறது.<br><br>• சிகிச்சை சேவைகள் எங்கள் மாணவர்களுக்காகப் பல துறை அறிவைப் பெறச் செய்வதன்மூலம், ஆழமான கலந்துரையாடலை ஊக்குவித்து, முழுமையான சேவைத் திட்டமிடுவதையும் நோக்கி செல்கின்றன.<br><br>• பள்ளி மாணவர் தலைமைத்துவத் திட்டம் பண்புநல வளர்ச்சிக்கு வாய்ப்புகளை வழங்குகிறது. மாணவத் தலைவர்கள் மேடைப் பேச்சுத்திறன்களில் பயிற்சிபெறுகிறார்கள். இது அவர்கள் பள்ளி நிகழ்ச்சிகளை வழிநடத்துவதற்கு உதவும் அதோடு அனைவருக்கும் முன்மாதிரிகளாக இருப்பதற்கான அடிப்படை விழுமியங்களும் அவர்களுக்குக் கற்றுத்தரப்படுகின்றன. |

## பலதரப்பட்ட தேவைகளை நிறைவேற்றும் ஒரு பள்ளி

Cerebral Palsy Alliance Singapore School (CPASS) தனது பள்ளியில் படித்துவிட்டுச் செல்லும் ஒவ்வொரு மாணவரும் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கும், தொடர்ந்து கற்பதற்கும், ஆக்கப்பூர்வமாக வேலை செய்வதற்கும் வாய்ப்பினைப் பெறுவதை உறுதிசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது. இதற்காக, பள்ளி மூன்று கல்வித் திட்டங்களை வகுத்துள்ளது. :

உயர் ஆதரவுத் திட்டம் சராசரி முதல் அதிக ஆதரவுத்தேவைப்படும் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையிலும் கற்றலிலும் அனைத்துக்கும் ஆதரவு தேவைப்படும் மாணவர்களாகும் இந்த மாணவர்களுக்கு உடலியக்கம், நுண்ணசைவுத் திறன்கள், சுய உதவி, கற்றல் ஆகியவற்றில் அதிக உதவி தேவைப்படுகிறது. இவர்கள் அவர்களின் நலனுக்கு உதவும் பாடங்களைக் கற்றுக்கொள்வார்கள்.

செயற்பாட்டுத் திட்டம், அன்றாட வாழ்விலும் கற்றலிலும் அதிகமான தேவைகளுக்கு ஆதரவு நாடும் மிதமான சராசரி ஆதரவு தேவைப்படும் மாணவர்களுக்கானது. 'சீனியர்'மூத்த நிலையிலுள்ள, மாணவர்கள் தொழில்முறைக் களத்தில் மாணவர்களின் கற்றலை ஆதரிக்கும் முன்-தொழில்முறைப்பயிற்சிக்குமுன்தேவைப்படும் திறன்களைக் கற்றுக்கொள்வார்கள்.



மகிழ்ச்சியுடன் கற்கும் CPASS குழந்தைகள்

கல்விசார் திட்டம் மிதமான தேவைகளையுடைய மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. இவர்கள் அன்றாடவாழ்க்கை கற்றலில் பெரும்பாலானவற்றில் மிதமான ஆதரவு தேவைகளையுடைவர்கள். இவர்கள் தங்களால் தேசிய பாடத்திட்டத்தைக் கையாளும் திறனை வெளிக்காட்டும் மாணவர்களாக இருக்கவேண்டும். SPED பள்ளிகளுக்கான பாடத்திட்டப் பணிச்சட்டத்துடன் சேர்த்துச், சில மாணவர்கள் தேசிய பாடத்திட்டத்திலுள்ள ஆங்கிலம், கணிதம் அறிவியல் பாடங்களையும் படிப்பார்கள்.

எந்தக் கல்வித் திட்டங்களாக இருந்தாலும் CPASS ஒவ்வொரு பிள்ளையும் வாழ்வில் சிறப்பானதைச் செய்வதற்கான திறனைப் பெற வேண்டும் என்பதை உறுதிசெய்கிறது. நுர் அலீசா பின்டி அப்துல்லாவின் (CPASSஇன் மாணவர்) தாயார் பள்ளியைப்பற்றி கூறுகையில், "நல்ல சிகிச்சையுடன் கூடிய மழலையும் கல்விசார்ந்த சேவைகளையும் அளிக்கும் பள்ளி!" என்று தெரிவித்தார். CPASSஇல் இருப்பதால் அவருடைய மகள், மிகவும் நம்பிக்கையுள்ள நபராக வளர்வாள் என்று நம்புகிறார்.

## நடைமுறைசார்ந்த கற்றலுக்குச் சூழல்களை மாணவர்களுக்கு அளித்தல்

CPASS தனது மாணவர்களை எப்போதும் கைவிடாமல், அவர்கள் அடுத்த மைல்கல்லை அடைய துணைநிற்கும் பள்ளியாகும். தனது மாணவர்கள் நிஜ உலக அறிவையும் அனுபவங்களைப் பெற உதவும் ஆண்டுதோறும் நடைபெறும் யகேம்ஸ் டே புரோஜெக்'க்கு ஏற்பாடு செய்கிறது. இது, அனைவரும் எதிர்பார்க்கும் திட்டங்களுள் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும், செயல்முறை மூத்த திட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் கைவினைப் பொருள்களை விற்பனை செய்யும் அல்லது விளையாட்டுச் சாவடிகளை அமைக்கும் திட்டப்பணியில் ஈடுபடுகிறார்கள். இந்தத் திட்டப்பணிகள் மாணவர்கள் மத்தியில் அதிக ஆர்வத்தை உருவாக்கி, ஒவ்வொரு பிள்ளையிடமும் உள்ள படைப்பாக்கத்திறனையும் புத்தாக்கத்திறனையும் வெளிப்படுத்த உதவுகின்றன. ஒவ்வொரு CPASS மாணவரும் நம்பிக்கையும் விடாமுயற்சியும் உள்ளவர்களாக வளர வேண்டும் என்னும் தொலைநோக்கு அவர்கள் சாவடிகளை வடிவமைப்பதிலும், வளங்களை ஏற்பாடு செய்வதிலும், விளையாட்டுகளையும் பொருளைகளையும் விற்பனை செய்வதிலும் பொதிந்திருக்கின்றன. CPASS மாணவர் பெருமையுடன் தங்களது திறமைகளை வெளிக்காட்ட விளையாட்டுத் தினம் முக்கிய நிகழ்வாக அமைகிறது. இருக்கும்.



விளையாட்டுத் தின திட்டப்பணியின்போது இயங்கும் சாவடிகள்



விளையாட்டுத் தின திட்டப்பணிக்கான தங்களது விளையாட்டுக்களைப் பரிசோதித்துப் பார்க்கும் மாணவர்கள்

# மகிழ்ச்சியையும் விளையாட்டையும் தள்ளி வைக்காத பள்ளி

மாணவர்கள் உடல்ரீதியாக மிகவும் சுறுசுறுப்பாக வளர்வதற்கும், சுயமாக இயங்கி வாழும் திறனைப் பெறுவதற்கும் CPASS புலன்சார் அறை, மென்மையான விளையாட்டு அறை, விளையாட்டுப்பொருள் நூலகம், சூடான நீச்சல் குளம் ஆகிய சில தனித்துவமிக்க வசதிகளை அமைத்திருக்கிறது மகிழ்வூட்டும் விளையாட்டு நடவடிக்கைகள்வழி, அன்றாடம் நம் வாழ்க்கையில் பயன்படுத்தும் கருவிகளையும் பொருள்களையும் கையாளுவதற்குப் பல்வேறு வகையான புலன்சார் பாவனைகளை ஆசிரியர்களால் மாணவர்களுக்கு அளிக்க முடிகிறது.




மாணவர்கள் ஆராய்ந்து தெரிந்துகொள்ளப் பல்வேறு தொங்கும் பொருள்களைக் கொண்ட உணர்வுசார் ஏணி

மாணவர்களுக்கான பந்து-தொட்டி





உடலியக்க சிகிச்சையாளர்கள் மற்றும் நீச்சல் பயிற்றுவிப்பாளர்கள் CPASSஇல் மாணவர் நடவடிக்கைகளுக்காக சூடான நீச்சல் குளத்தைப் பயன்படுத்துகிறார்கள்

## தனிச்சிறப்பு வாய்ந்த வாழ்க்கை

### Mary Low

Mary Low 1999இல் CPASSஇல் படிப்பை முடித்தார் (அப்போது அது ஸ்பாஸ்டிக் குழந்தைகளுக்கான சங்கம் என்று அழைக்கப்பட்டது). இன்று, அவர் பிறருக்கு உதவுவதற்காக கைவினைப் பொருள்களை விற்பனை செய்தும், ஆதரித்தும் வரும் மிகச் சிறந்த தொழிலதிபராக இருக்கிறார். CPASSஇல் இருந்தபோது, அவர் தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு சான்றிதழுடன் தம் படிப்பை முடித்து, உயர்நிலைப்பள்ளிக்குச் சென்றார். உயர்நிலைப்பள்ளியில் அவருக்கு வாழ்க்கை சவாலாக இருந்ததோடு அதன் வேகத்துக்கு ஈடுகொடுக்கமுடியாமல் சோர்வும் அடைந்தார். ஆயினும், அவர் பல சவால்களைச் சந்தித்தபோதும் 2003இல் GCE 'N' நிலை சான்றிதழ் பெற்றுப் பட்டம் பெற்றார். இன்று, Mary தாம் தயாரித்த கைவினைப் பொருள்களையும், ஏழை மக்கள் தயாரித்த பொருள்களையும் விற்பனை செய்யும் சமூக தொழில்முனைவராக இருக்கிறார். சமுதாயத்தில் சமமான வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்கிற அவரின் நோக்கத்தினால் அவர் கடந்த 9 ஆண்டுகளாக வணிகத்தில் ஈடுபடுவதற்கு உந்துதலாக இருந்துள்ளது. அவர் " நாம் யாரையும் எதிர்பார்த்து வாழக்கூடாது என்பதிலும் நாமும் இயலாமை இல்லாதவர்கள் போன்று வெற்றிகரமாக இயங்க முடியும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டிருக்கிறேன்" என்று கூறுகிறார்.



## கண்ணோட்டம்

| | |
|---|---|
| பள்ளியின் பெயர் | Cerebral Palsy Alliance Singapore School |
| பள்ளியின் இணையத்தள முகவரி | www.cpas.org.sg |
| முகவரி | 65 Pasir Ris Drive 1, Singapore 519529 |
| அருகிலுள்ள MRT நிலையம்(கள்) | பாசிர் ரிஸ் MRT |
| அருகிலுள்ள பேருந்து சேவைகள் | பேருந்து எண்.: 39, 53, 81, 89, 109, 518, 518A |

<table>
<tr><td>திட்ட இலக்கு</td><td colspan="2">முழுமையான கல்வியை வழங்குவதன்மூலம் நம் மாணவர்களை அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழச் செய்வதும், தொடர்ச்சியாகக் கற்றலில் ஈடுபட்டு, ஆக்கப்பூர்வமாக வேலை செய்யக்கூடியவர்களாக வளர்த்துவிடுவதும்</td></tr>
<tr><td>தொலை நோக்கு</td><td colspan="2">வாழ்தல், கற்றல், வேலை செய்தல் ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் கற்கும் சமுதாயம்</td></tr>
<tr><td>விழுமியங்கள்</td><td colspan="2">நம்பிக்கை;மதிப்பு; மீளுந்தன்மை ; நேர்மை</td></tr>
<tr><td>வழங்கப்படும் இணைப்பாட நடவடிக்கைகள்</td><td><u>பள்ளியின் முக்கிய இணைப்பாட நடவடிக்கைகள்</u><br>• பொக்சியா<br>• சிறப்புக் கலைகள்<br>• சாரணர் இயக்கங்கள்<br>• நீச்சல்<br>• நிகழ்த்துகலைகள்<br>• திடல்தட விளையாட்டுக்கள் \d</td><td><u>பள்ளியில் வழங்கப்படும் வழக்கமான இணைப்பாட நடவடிக்கைகள்</u><br>• ‘டெஸ்க் பெல்ஸ்’ மற்றும் தாளவாத்திய மன்றம்<br>• தகவல் தொழில்நுட்ப மன்றம்<br>• இசை மற்றும் நடன மன்றம்<br>• புலன்சார் தூண்டல் மன்றம்<br>• தண்ணீர் விளையாட்டு மன்றம்</td></tr>
<tr><td>முக்கியத் திட்டங்கள்</td><td colspan="2">• சமூக ஈடுபாட்டுத்திட்டம் (CIP), பள்ளி பாடக்கலைத்திட்டத்தில் முக்கியப்பங்கை வகிக்கிறது. இது சமூகப்பிணைப்பையும் குடிமை பொறுப்பையும் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br>• கற்றல் பயணத் திட்டம் மாணவர்களுக்குச் சிங்கப்பூரின் சாதனை குறித்த பெருமையை உணர்த்துவது, அவர்களின் தன்னம்பிக்கையை வளர்ப்பது, என்ற உணர்வையும் ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.<br>• பின்வரும் நோக்கங்களை நிறைவேற்ற மெரிடியன் தொடக்கக்கல்லூரியுடன் (MJC) சேட்டலைட் பங்காளித்துவம் திட்டம்:<br>• MJCயும் CPASS-உம் மாணவர்களுக்கிடையே இருவழிக் கருத்துப்பரிமாற்றத்தையும் பரஸ்பர புரிதலையும் அதிகரிப்பது.<br>• CPASS மாணவர்களிடத்தே நம்பிக்கை, நேர்மை, மதிப்பு, மீளுந்தன்மை ஆகிய விழுமியங்களை வளர்ப்பது.<br>• மாணவர் தலைமைத்துவப் பண்பு வளர்ச்சித் திட்டம் வகுப்பில் தலைமைத்துவப்பண்பை உருவாக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது</td></tr>
</table>

# SPED பள்ளிகளின் அட்டவணை

ஜனவரி 2018 வரை, 12 சமூக சேவை அமைப்புகளால் (SSOகள்) அரசு நிதிப்பெறும் 19 SPED பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இந்த SPED பள்ளிகள் நடத்தும் திட்டங்கள் தனிப்பட்ட இயலாமை விவரக்குறிப்பைக் கொண்ட பிள்ளைகளுக்கான சிறப்புக் கல்வித் தேவைகளை வழங்குகின்றன. நீங்கள் பள்ளிகளின் பட்டியலைப் பின்வரும் அட்டவணையில் பார்க்கலாம்.

| உடற்குறை குழுக்கள் | வயதுக் குழு | பள்ளி | சமூகச் சேவை அமைப்பு (SSO) | பள்ளியின் இணையத்தளம் | முகவரி | தொடர்புத் தகவல்கள் |
|---|---|---|---|---|---|---|
| காது கேளாமை | 7 - 14 வயதினர் | Canossian School | Canossian Daughters of Charity | canossian.edu.sg | 1 Sallim Road Singapore 387621 | தொலைபேசி: (65) 6749 8971 தொலைபிரதி: (65) 6749 8976 admin@canossian.edu.sg |
| பார்வைக் கோளாறு; ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு; காது கேளாமை | 7 - 18 வயதினர் | Lighthouse School | Singapore Association of the Visually Handicapped (SAVH) | lighthouse.edu.sg | 51 Toa Payoh Rise Singapore 298106 | தொலைபேசி: (65) 6250 3755 Fax: (65) 6250 5348 lighthouse@lighthouse.edu.sg |
| இலேசான அறிவுசார் இயலாமை (ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாட்டைக் கொண்டிருக்கும் மாணவர்கள் உள்பட) | 7 - 12 வயதினர் | Chaoyang School | Association for Persons with Special Needs (APSN) | apsn.org.sg/schools/chaoyangschool | 10 Ang Mo Kio Street 54 Singapore 569184 | தொலைபேசி: (65) 6456 6922 தொலைபிரதி: (65) 6456 2030 cys@apsn.org.sg |
| | 17 - 21 வயதினர் | Delta Senior School | | apsn.org.sg/schools/delta-senior-school/ | 3 Choa Chu Kang Grove Singapore 688237 | தொலைபேசி: (65) 6276 3818 தொலைபிரதி: (65) 6276 5608 dss@apsn.org.sg |
| | 7 - 16 வயதினர் | Katong School | | apsn.org.sg/schools/katong-school/ | 900 New Upper Changi Road Singapore 467354 | தொலைபேசி: (65) 6445 8027 தொலைபிரதி: (65) 6445 6313 ks@apsn.org.sg |
| | 13 - 16 வயதினர் | Tanglin School | | apsn.org.sg/schools/tanglin-school/ | 143 Alexandra Road Singapore 159924 | தொலைபேசி: (65) 6475 1511 தொலைபிரதி: (65) 6472 0408 ts@apsn.org.sg |
| | 7 - 18 வயதினர் | Grace Orchard School | Presbyterian Community Services | go.edu.sg | 6A Jurong West Street 52 Singapore 649297 | தொலைபேசி: (65) 6561 9128 தொலைபிரதி: (65) 6561 4133 info@go.edu.sg |
| | 7 - 18/21 வயதினர் | Metta School | Metta Welfare Association | mettaschool.edu.sg | 30 Simei Street 1 Singapore 529949 | தொலைபேசி: (65) 6788 5800 தொலைபிரதி: (65) 6788 5507 enquiry@mettaschool.edu.sg |
| நடுத்தரமானது முதல் தீவிரமான அறிவுசார் இயலாமை (ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாட்டைக் கொண்டிருக்கும் மாணவர்கள் உள்பட) | 7 - 18 வயதினர் | MINDS - Fernvale Gardens School | Movement for the Intellectually Disabled of Singapore (MINDS) | minds.org.sg/FGS | 7 Fernvale Road Singapore 797635 | தொலைபேசி: (65) 6481 6697 தொலைபிரதி: (65) 6483 2631 fgs@minds.org.sg |
| | | MINDS - Lee Kong Chian Gardens School | | minds.org.sg/LGS | 802 Margaret Drive Singapore 149311 | தொலைபேசி: (65) 6473 8332 தொலைபிரதி: (65) 6473 4776 lgs@minds.org.sg |
| | | MINDS - Towner Gardens School | | minds.org.sg/TGS | 1B Lengkong Lima Singapore 417557 | தொலைபேசி: (65) 6446 2612 தொலைபிரதி: (65) 6243 7498 tgs@minds.org.sg |
| | | MINDS - Woodlands Gardens School | | minds.org.sg/WGS | 30 Woodlands Ring Road #01-01 Singapore 737883 | தொலைபேசி: (65) 6468 0566 தொலைபிரதி: (65) 6468 2142 wgs@minds.org.sg |

| உடற்குறை குழுக்கள் | வயதுக் குழு | பள்ளி | சமூகச் சேவை அமைப்பு (SSO) | பள்ளியின் இணையத்தளம் | முகவரி | தொடர்புத் தகவல்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு | 7 - 18 வயதினர் | Eden School | Autism Association (Singapore) | edenschool.org.sg | 101 Bukit Batok West Avenue 3 Singapore 659168 | தொலைபேசி: (65) 6265 7400 தொலைபிரதி: (65) 6265 9400 enquiry@edenschool.edu.sg |
| | 7 - 18/21 வயதினர் | Pathlight School | Autism Resource Centre (Singapore) | pathlight.org.sg | Campus 1 5 Ang Mo Kio Ave 10 Singapore 569739<br><br>Campus 2 6 Ang Mo Kio Street 44 Singapore 569253 | தொலைபேசி: (65) 6459 9951 Fax: (65) 6459 3397 queries@pathlight.org.sg<br><br>தொலைபேசி: (65) 6459 9951 தொலைபிரதி: (65) 6459 3397 |
| | 7 - 18 வயதினர் | St Andrew's Autism School | Saint Andrew's Mission Hospital (SAMH) | saac.org.sg | 1 Elliott Road Singapore 458686 | தொலைபேசி: (65) 6517 3800 தொலைபிரதி: (65) 6517 3801 enquiry@saac.org.sg |
| பல இயலாமைகள் மற்றும் ஆட்டிஸம் ஸ்பெக்ட்ரம் குறைபாடு | 7 - 18 வயதினர் | AWWA School | AWWA | awwa.org.sg | 11 Lorong Napiri Singapore 547532 | தொலைபேசி: (65) 6511 5280 தொலைபிரதி: (65) 6511 5281 awwaschool@awwa.org.sg |
| | | Rainbow Centre - Margaret Drive School | Rainbow Centre | rainbowcentre.org.sg | 501 Margaret Drive Singapore 149306 | தொலைபேசி: (65) 6472 7077 தொலைபிரதி: (65) 6475 9739 rcmds@rainbowcentre.org.sg |
| | | Rainbow Centre - Yishun Park School | | rainbowcentre.org.sg | 15 Yishun Street 61 Singapore 768548 | தொலைபேசி: (65) 6482 2592 தொலைபிரதி: (65) 6482 2593 rcyps@rainbowcentre.org.sg |
| பல இயலாமைகள் | 7 - 18 வயதினர் | Cerebral Palsy Alliance Singapore School | Cerebral Palsy Alliance of Singapore (CPAS) | cpas.org.sg | 65 Pasir Ris Drive 1 Singapore 519529 | தொலைபேசி: (65) 6585 5634 தொலைபிரதி: (65) 6585 5635 cpasschool@cpas.org.sg |

# பெற்றோருக்கான பயனுள்ள இணைப்புகள்

## சரியான பள்ளியைத் தேர்ந்தெடுப்பதற்கானத் தகவல்

சரியான பள்ளியைத் தேர்ந்தெடுத்தல்
http://www.moe.gov.sg/docs/default-source/document/education/special-education/files/parents-guide-children-special-educational-needs.pdf

சிங்கப்பூரில் சிறப்புக் கல்வி
http://www.moe.gov.sg/education/special-education/

SPED பள்ளிகளுக்கான விண்ணப்பம்
https://www.moe.gov.sg/education/special-education/how-do-i-apply-for-a-place-in-the-school-for-my-child#Application-to-SPED-Schools

பள்ளித் தகவல் சேவை
http://app.sis.moe.gov.sg

பொதுநிலைப் பள்ளிகளுக்கான விண்ணப்பம்
http://www.moe.gov.sg/admissions/primary-one-registration

## கட்டாயக் கல்வி மற்றும் கல்வியைத் தள்ளிப்போடுதல் பற்றிய தகவல்

கட்டாயக் கல்வி மற்றும் கல்வியைத் தள்ளிப்போடுதல்
http://www.moe.gov.sg/education/education-system/compulsory-education/

## வழங்கப்படும் ஆதரவு பற்றிய தகவல்

*தொண்டூழிய நல அமைப்புகள் (VWO) போக்குவரத்து நிதியுதவித் திட்டம் இலக்கு*
*இந்தத் திட்டம் இயலாமைகளுடைய நபர்கள் பள்ளிகளுக்கும் பராமரிப்பு சேவைகளையும் பெற தேவைப்படும் போக்குவரத்து ஆதரவை அளிக்கிறது.*
https://www.sgenable.sg/pages/content.aspx?path=/schemes/transport/vwo-transport-subsidies/

வாடகை உந்துவண்டி வாகன நிதியுதவித் திட்டம்
*இந்தத் திட்டம் பள்ளிக்கு, வேலைக்கு, அல்லது SG எனேபிளால் வழங்கப்படும் வேலைத் தொடர்பான பயிற்சியைப் பெறுவதற்குப் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்த இயலாத முற்றிலும் வாடகை உந்துவண்டியை நம்பி இருப்பவர்கள் என்று மருத்துவ சான்றிதழ்பெற்ற நிரந்தர இயலாமைகளைக் கொண்டவர்களுக்குரியது.*
https://www.sgenable.sg/pages/content.aspx?path=/schemes/transport/taxi-subsidy-scheme/

NEU PC ப்ளஸ் திட்டம்
*இந்தத் திட்டம் குறைவான வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த இயலாமை உடைய மாணவர்களுக்கும் நபர்களுக்கும் குறைந்த விலையில் புதிய கணினியை சொந்தமாக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கிறது.*
http://www.imda.gov.sg/community/consumer-education/digital-inclusion/neu-pc-plus-programme

டிரான்சிட் லிங்க்
*மாணவர்கள் இந்தத் திட்டத்தின்மூலம் மாணவர்கள் சலுகைக் கட்டணங்களைப் பெறுவதோடு மாதாந்திர சலுகை அட்டையை வாங்கிக் கொள்வதற்கான வாய்ப்பு அளிக்கப்படும். இந்த அட்டைகள் டிரான்சிட்லிங்க் நுழைவுச்சீட்டு அலுவகத்தில் அல்லது ரொக்கம் நிரப்பும் இயந்திரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*
https://www.transitlink.com.sg

## மற்றப் பயனுள்ள இணைப்புகள்

ஸ்கூல்பேக்: கல்வி செய்தித்தளம்
http://www.schoolbag.sg/

*உதவித் தொழில்நுட்ப நிதி (ATF)*
*சுதந்திரமாக வாழ உதவும் உதவி தொழில்நுட்ப சாதனங்களை வாங்க மாற்றுத்திறனாளிகளுக்கு ATF மானியங்களை வழங்குகிறது.*
https://www.sgenable.sg/pages/content.aspx?path=/schemes/equipment-technology-home-retrofit/assistive-technology-fund/

# ஒப்புகைகள்

இந்தக் கையேட்டிற்கு 19 SPED பள்ளிகள் அளித்த பங்களிப்புகளுக்கு நாங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தக் கையேட்டின் அட்டையில் வெளியிடுவதற்காகத் தங்கள் கலைப்படைப்பைத் தந்த பின்வரும் மாணவர்களுக்கும் எங்களின் நன்றி




Maximus Lee How Zer மற்றும் Pavanvishwa Arumugam உருவாக்கிய ‘நாங்கள் உலகைப் பகிர்கிறோம்’
MINDS – Woodlands Gardens School
மறுசுழற்சி செய்யப்பட்ட வண்ணக் காகிதம்



Noah Tan Kai வரைந்த நான்கு பருவக் காலங்கள்
Rainbow Centre - Margaret Drive School
அக்ரைலிக் வண்ணம்



‘எனக்கு மஞ்சள் மலர்கள் பிடிக்கும்!’ Bryan Poon வரைந்தது
St Andrew’s Autism School
வாட்டர் கலர்



அன்புடன்
Siti Nurhazimah Binte Hamzah
Tanglin School
வாட்டர் கலர்

குழந்தை என்ன செய்ய முடியாது என்பதை வலியுறுத்துவதற்கு பதிலாக என்ன செய்ய முடியும் என்பதை அதிகமாக வலியுறுத்த வேண்டும்.

– டெம்பிள் கிராண்டின்

Ministry of Education
SINGAPORE